# இந்த மண்ணும்
# எங்களின் சொந்த மண்தான்!

ஆசிரியர்:

*இணுவில்*

**ஆர்.எம். கிருபாகரன்**

**இராமநாதன் பதிப்பகம்**

நெ. 25, 3வது தெரு,
ஆபீசர்ஸ் காலனி எக்ஸ்டென்ஷன்,
முகப்பேர், சென்னை - 600 037.
போன் : 044-24342926, 044-24346082

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விவரம்


| | |
|---|---|
| நூல் தலைப்பு | **இந்த மண்ணும் எங்களின் சொந்த மண்தான்!** |
| ஆசிரியர் | **இணுவில் ஆர்.எம். கிருபாகரன்** |
| மொழி | தமிழ் |
| பதிப்பு ஆண்டு | 2015 |
| பதிப்பு விவரம் | முதற் பதிப்பு |
| பதிப்புரிமை | **திருமதி. கலாரஜினி கிருபாகரன்** |
| தாளின் தன்மை | 11.6 கி.கி. |
| நூலின் அளவு | கிரௌன் சைஸ் (12 x 18 செ.மீ.) |
| அச்சு எழுத்து அளவு | 10 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | xvi + 160 = 176 |
| நூலின் விலை | **ரூ. 80.00** |
| அட்டைப்பட ஓவியம் | மோகன் கிராஃபிக்ஸ் |
| லேசர் வடிவமைப்பு | பி.எஸ். முத்து கிராஃபிக்ஸ் சென்னை - 600 015. |
| அச்சிட்டோர் | ஸ்கிரிப்ட் ஆஃப்செட் சென்னை - 600 094. |
| நூல் கட்டுமானம் | தையல் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

**அ**ன்னை மண்ணிலும் மற்றைய நாடுகளிலும் நம் தாய்மொழியாம் தமிழைப் பேணிக்காக்கச் சான்றோர்கள் அரும்பாடுபட்டு வருவது கண்கூடு. இச்சான்றோர்கள் எனப்படுபவர்கள் அறிஞர்கள் மட்டத்தில், ஆராய்ச்சி, புதிய கலைச் சொற்கள் அறிமுகம், தொல்லியற் தேடல்கள், மொழிபெயர்ப்பு, நூல்கள் வெளியீடு என்று பலப்பல துறைகள் சார்ந்து பணியாற்றுகின்றனர். இவ்வழியிலே தமிழ்மொழி காக்கப்பட்டாலும் மற்றுமோர் மிக முக்கிய மானதொரு வழியிலும் தமிழ்க் காக்கப்பட வேண்டியுள்ளது. அது வேறொன்றும் கடினமானதல்ல. தமிழர்கள் தமிழர் களாகத் தமிழர்களிடம் தமிழிலே பேசியும் எழுதியும் வாசித்தும் வந்தாலே போதும், தமிழ் தன்னைத்தானே காத்திடும் வல்லமையைப் பெற்றுவிடும்.

தமிழர்களால் மட்டுமே தமிழைப் பேணிப் பாதுகாக்க முடியும். வேற்று மொழியினருக்கு இவ்விடயத்தில் அக்கறை வரப்போவதில்லை. அதே நேரம் பிறமொழி அறிஞர்கள் பலர் தமிழின் சகல சிறப்புகளையும் அறிந்து தமிழ் கற்று, ஆய்வுகள் பல செய்து வருவதால் பாரெங்கும் தமிழ்மொழியின் மேன்மை பல்கிப் பெருகுவது மகிழ்வன்றோ.

மொழியியலில் நூல்களின் பங்களிப்பு கனகாத்திர மானது. அது எத்துறைசார் நூலானாலும் தான் பிறந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிக்கு விழுதாகிப் பலம் சேர்த்திருப்பதைக் காலம் சான்று பகர்கிறது. அவ்வழியில் எனது நூல் களும் ஏதோவொரு வகையில் தமிழன்னையை அலங்கரிப்பதையிட்டு அடியேன் அகமகிழும் பாக்கியசாலியாகின்றேன். எனது முதற்படைப்பான ''நீறுக்குள் நெருப்பு'' சிறுகதைத் தொகுப்பு, சமூக நாவல்களான ''இவர்கள் எப்போதும் விழுதுகள்'', ''வசந்தம் வரவேண்டும்'' மற்றும் சரித்திர நாவலான ''கல்யாணிபுரத்துக் காவலன்'' ஆகியனவற்றின் வாசகர்கள் தந்த உற்சாகம் என்னை மேலும் மேலும் நாவல்கள் எழுதத் தூண்டுகிறது என்பது நிதர்சனம்.

அதுதான் எனது ஐந்தாவது நூலான, ''இந்த மண்ணும் எங்களின் சொந்தமண்தான்!'' எனும் சமூக நாவலாகும். இலங்கையின் எழில்கொஞ்சும் மலையகம் ஒரு தளமாகவும், கிழக்கு மாகாணத்தின் தம்பலகாமம் கிராமம் மறு தளமாகவும் கொண்டு மலையகத் தோட்டத் தமிழ்த் தொழிலாளர்களின் சோகக் கதை நகர்கிறது. பிரித்தானியரால் தென்னிந்தியாவிலிருந்து கூலிகளாக அழைத்து வரப்பட்டவர்கள் ஒன்றரை நூற்றாண்டு காலமாக அதே நிலையிலே முன்னேற விடாமல் பயன்படுத்தப்படும் அவலங்களின் கதை இது. பெயருக்குச் சுதந்திர மடைந்தாலும் இவர்களின் வாழ்வில் கவ்விய இருள் இன்னும் அகலவேயில்லை. இவர்களின் வாழ்வு வளம் பெற என்ன செய்யலாம் என, என் எண்ணத்தில் உதித்தவைகளை மண்மணத்தோடு கதையிலே கசியவிட்டிருக்கிறேன்.

இந்நாவலுக்கு அணிந்துரை வழங்கிய பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்களுக்கும், நாவலை மெரு கூட்டியதோடு வாழ்த்துக் கவிதை வழங்கிய பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் அவர்களுக்கும், நூலாசிரியரைப் பற்றி எழுதிய சோ. சிவநாயகம் அவர்களுக்கும், அட்டைப்படம் வரைந்த மோகன் கிராஃபிக்ஸுக்கும், அழகுற நாவலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அச்சிட்டு வெளியிடும் சென்னை மணிமேகலைப் பிரசுரத்தினருக்கும் எனது மனமுவந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். மற்றும் தம்பலகாமம் கிராமத்தைப் பற்றிய மேலதிக அரிய பல தகவல்களைத் தந்து உதவிய அதே கிராமத்தைச் சேர்ந்த திரு., திருமதி கண்ணதாசன் ஆகியோருக்கும் என் மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.**

இப்படிக்கு
என்றும் அன்புடன்
**இணுவில் ஆர்.எம். கிருபாகரன்**

27.11.2014
ரொறன்ரோ, கனடா
தொலைபேசி – 416–430–0422
**மின்னஞ்சல் :** m.kirupaharan@hotmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்களின்

# அணிந்துரை

புகலிடத் தமிழிலக்கியத்தின் புலப்பரப்பு மிக அகன்றது. அவுஸ்திரேலியா முதல் அலாஸ்கா வரையும் தமிழர் புலம்பெயர்ந்து வாழ்கின்றனர். தமிழர் வாழும் பெரும்பாலான நாடுகளில் ஆக்க இலக்கிய கர்த்தாக்கள் தம் ஆக்கங்களை வெளியிட்டவண்ணம் உள்ளனர். கனடாவின் இயந்திரமயமான வாழ்க்கையிலும் ஆக்கபூர்வமான புலம்பெயர் இலக்கியப் படைப்புகள் வெளிவந்து கொண்டிருப்பதை இலக்கிய ஆர்வலர்கள் நன்கறிவர். புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களின் பல்வேறு கலாசாரச் சூழல்களில் அமைந்த புதுவாழ்வு முறைகளையும், புதிய சமூக – பொருளாதார அனுபவங்களையும் சித்திரிக்கும் இலக்கியங்கள் தோன்றும் அதே வேளையில், தாயக உணர்வுகளுடன் கவிதை, சிறுகதை, குறுநாவல், நாவல் என இலக்கியங்கள் படைத்து வருவோர் கனடா, ஐரோப்பா, அவுஸ்திரேலியா முதலான இடங்களில் வாழ்ந்து வருகின்றனர். அவர்களது இலக்கியப் படைப்புகள் புகலிட இலக்கிய வளத்தினை மெருகூட்டுகின்றன. இந்நாடு களின் தொழில்நுட்ப வசதிகளும், இங்குள்ள பொருளாதார வளங்களும் இத்தகைய வெளியீடுகளுக்கு வாய்ப்பாக உள்ளன. இணையத்தளங்களிலே நூற்றுக் கணக்கானோர் கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என எழுதுகிறார்கள். அவற்றின் வாசகர் எண்ணிக்கைப் பரப்பும் விசாலித்து வருகின்றது.

இப்படைப்பாளிகள் வரிசையில் இணுவில் ஆர்.எம். கிருபாகரன் அவர்களும் முக்கிய இடம்பெறுகிறார். தாயகத்தில் உயர்பாடசாலை மாணவராகப் படிக்கும்போதே, 1975–இல் எழுதத் தொடங்கிய கிருபாகரன், ஈழத்திலும் கனடாவிலும் வெளிவரும் அனைத்துப் பத்திரிகைகளிலும் சிறுகதை, கவிதை, கட்டுரை என எழுதிக்கொண்டே வருகிறார். இவர் மொழிப்பற்றும், இனப்பற்றும், தாயக உணர்வும் மிக்கவர் என்பதை அவரது ஆக்கங்களும், அவரது செயற்பாடுகளும் கோடிட்டுக் காட்டுகின்றன. இதுவரை வெளியிட்டுள்ள ''நீறுக்குள் நெருப்பு'' [சிறுகதை – 2007], ''இவர்கள் எப்பொழுதும் விழுதுகள்'' [நாவல் – 2009], ''வசந்தம் வரவேண்டும்'' [நாவல் – 2010], ''கல்யாணிபுரத்துக் காவலன்'' [நாவல் – 2013] என்னும் நான்கு இலக்கியப் படைப்புகளிலும் சற்று வேறுபட்ட வகையில் மலையக மக்களின் வாழ்க்கை அவலங்களைச் சித்திரிப்பதோடு, அவர்களுக்கான எதிர்கால வளமான வாழ்க்கைக்கான வழிமுறைகளையும் தனது எழுத்தில் வடித்துக் காட்டும் வகையில், ''இந்த மண்ணும் எங்களின் சொந்த மண்தான்!'' என்ற சமூக நாவலை இப்போது படைத்துள்ளார். மலையகத்தில் வாழும் தமிழ்க் குடும்பங்கள் எதிர்கொள்ளும் வாழ்க்கைச் சவால்கள், அவலங்கள், பிரச்சினைகள், அரசியல் கெடுபிடிகள், இராணுவச் சோதனைகள், முதலான வற்றைத் தனது எழுத்தாற்றலால் சித்திரித்து, அம்மக்களிடம் சமூக எழுச்சி, பொறுப்புணர்வு, எதிர்கால வளமான வாழ்வுக்கான செயல்கள் என்பனவற்றை ஏற்படுத்தும் வகையிலான விடயங்களைக் கையாண்டு கதையை நகர்த்திச் செல்லும் உத்தி கிருபாகரனின் நாவலுக்கு வலுவூட்டுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நாவலின் கதையானது, மலையகத் தோட்டத் தொழிலாளரின் அவல வாழ்க்கை முறையினையும் அதிலிருந்து நீங்கி, தமிழர் தாயகப் பகுதிக்குச் சென்று, தம்பலகாமத்திலே காணி நிலம் பெற்று புதுவாழ்வு அமைத்திடும் புத்துணர்வுச் சிந்தனையுடன் செயற்படுவதாக அமைந்துள்ளது. இக்கதையில் வரும் கதாமாந்தர்களைக் கொண்டு ஆசிரியர் தனது இலட்சியங்களைச் செயற்படுத்த முனைந்துள்ளார். தேயிலைத் தோட்ட வேலையில் காலில் காயம்பட்டு வீட்டில் முடங்கிக்கிடக்கும் தந்தை சண்முகம், கொழுந்து பறிக்கும் வேலையிலிருந்து நிற்பாட்டப்பட்டுள்ள தாய் மருதம்மா, தன் குடும்பத்தினைக் காக்க கொழும்புக்கு வேலை தேடிச்சென்று வெறுங்கையோடு திரும்பிய மகள் காவேரி, லயத்துப் பள்ளிக்குச் செல்லும் இளையமகள் கிருஷ்ணி, இவர்களின் மூத்த தமையன் தம்பலகாமத்தில் கமம் செய்யும் இரமணகிரி ஆகியோருடன் இக்குடும்பத்தில் தங்கி வாழும் தேவிகா ஆகிய கதாபாத்திரங்களை மையப்படுத்தி எழுதப்பட்ட மலையகச் சமூகம் நாவலே இதுவாகும். இது ஒரு குடும்பக் கதையாக அமைந்தாலும் இந்நாவலை முழுமையாகப் படித்து முடிக்கும்போது, நாவலில் சித்திரிக்கப்படும் விடயங்கள் அனைத்தும் மலையக தமிழ்க் குடும்பங் களின் ஒட்டுமொத்தக் கதைகளையே இந்நாவல் சித்திரிக்கின்றமை புலனாகும்.

> ‘‘அப்படி ஒன்றும் புதிதாய் அந்தப் பகுதியில் இடம்பெறவில்லை. வழமைபோல அன்றைய காலைப்பொழுது விடிந்ததும் தேயிலைக் கொழுந்து பறிக்கப் போகும் பெண்களும், கூலி வேலைகள் செய்யும் ஆண்களும் கூட்டம் கூட்டமாகச் சென்றார்கள். வானம் மப்பும் மந்தாரமுமாயிருந்தது. காலைப் பனிமூமட்டம் முற்றாக இன்னும் கலையவில்லை என்பதற்கு அடையாளமாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றை ஊடறுத்துச் சென்ற இளங்காலை வெயில் கண்களைக் கூசவைத்தபடி, அதில் பட்டுத் தெறித்தது.''

இதுதான் நாவலின் தொடக்கம். 'தோட்டத் தொழிலுக்காக ஆங்கிலத் தோட்டத் துரைமார்களால் அங்கு கொண்டுவரப்பட்ட இந்திய மக்கள், அங்கு வந்த நாள்முதலாக இதுதான் வாழ்க்கை முறையாக இருந்து வருகிறது' என்ற ஏக்க உணர்வுடன் நாவலை அவர் தொடங்குவது நோக்கத்தக்கது. வெறும் வர்ணனைகளில் எழுத்தை வீணடிக்காத குறிக்கோளுடன் கதை நகர்த்துவது இவரது எழுத்து நடையின் இயல்பாகும். கிருபாகரனின் அனைத்துப் படைப்புகளையும் நான் வாசித்திருக் கின்றேன். புகலிடத்தில் வாழ்ந்துகொண்டு தாயக உணர்வுகளுடன் தனது எழுத்துகளைக் கூர்மைப்படுத்தி எழுதுவது என்பது, அவரது உறுதியான தாயக உணர்வினையும், அங்கு வாழும் மக்கள் மீதுகொண்ட அக்கறையையும் எடுத்துக்காட்டுவதாக அமைகின்றது. மலையக மக்களுக்குச் சொந்த நிலம் வேண்டும்; அந்நிலத்தில் சுதந்திரமாக வாழவேண்டும் என்ற தனது கனவை – எதிர்பார்ப்பை இந்நாவலில் வடித்துத் தந்துள்ளார். மலையக எழுத்தாளர் பலர் இப்பொருள் பற்றி தம் படைப்புக்களில் கண்ணீரும் இரத்தமும் கலந்து எழுதியுள்ளார்கள். ஆயினும் புலம்பெயர்ந்து வாழும் நாட்டிலிருந்து கொண்டு அம்மக்களுக்காகத் தன் எழுத்தின்மூலம் குரல்கொடுக்கும் தமிழ் எழுத்தாளனை யிட்டு நான் பெருமிதமடைகின்றேன்.

இவரது எழுத்து நடையிலுள்ள வளமான சொற்கட்டும், உணர்ச்சி ததும்பும் சொல்வளங்களும் அவரது எழுத்து நடைக்கு வளம் சேர்த்துள்ளன. கிருபாகரனின் எழுத்துநடை கிராமிய மொழி வழக்கைத் தழுவியதாகவும், அனைவராலும் புரிந்து கொள்ளத் தக்கதாகவும் அமைந்திருப்பதோடு, மிகவும் எளிமையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பனைவளமும், தக்க இடங்களில் பழமொழிகளைப் பயன்படுத்தித், தான் சொல்லவந்த கருத்துகளை மிகச் செம்மையாக வெளிப்படுத்தும் வகையிலும் பாராட்டுப் பெறும் வகையில் அமைந்துள்ளன.

இந்நாவல் புலம்பெயர் இலக்கியச் சோலையில் ஆர்.எம். கிருபாகரனுக்கும் உரியதோர் இடத்தை இந்நாவல் பெற்றுக்கொடுக்கும். இலக்கியம் வெறும் கலையாக மட்டுமின்றி சமூகக் கண்ணோட்டம் கொண்டதாக அமையும்போதே அது வாழ்வியல் இலக்கியமாகின்றது என்ற உண்மையை இந்நாவல் சான்றுபடுத்துகிறது.

**இ. பாலசுந்தரம்**

தமிழ்த்துறைத் தலைவர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
– கனடா வளாகம்,
ரொறன்ரோ.
15.11.2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியரைப் பற்றி...

ஈழத்தின் இளைய தலைமுறை எழுத்தாளர்களுள் வாசகர் மத்தியிலே நன்கறியப்பட்டுப் பிரபலம் பெற்றுவரும் ஒருவர் இணுவில் ஆர்.எம். கிருபாகரன். இணுவில் கலை இலக்கியக் கழகத்தின் நாடளாவிய கவியரங்குகள் மூலம் சிறந்த கவிஞராக அறிமுகமானவர். இணுவில் மத்தியக் கல்லூரி, யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் பல்தொழில்நுட்பக் கல்லூரி ஆகியவற்றில் கல்விபெற்றவர்.

தாயகத்தில் கலகலப்பு, ஈழநாடு, ஈழமுரசு, உதயசூரியன், வீரகேசரி முதலிய இதழ்களிலும்; கனடாவில் ஈழநாடு, நம்நாடு, ஈழமுரசு, முழக்கம், உதயன், செங்கதிர், பறை, உங்கள் நண்பன் போன்ற இதழ்களிலும் கவிதைகள், அரசியல் – பொருளாதார ஆய்வுக் கட்டுரைகள், சிறுகதைகள் எனப் பல துறைகளிலே எழுதிப் படைப்பாற்றல் மலர்ச்சியடையப்பெற்ற இவர் கனடாவில் கடந்த 28 வருடங்களாக வசிக்கின்றார்.

2007–இல் இவரது ‘‘நீறுக்குள் நெருப்பு’’ சிறுகதைத் தொகுப்பு வெளிவந்தது. அடுத்து 2009–இல் ‘‘இவர்கள் எப்போதும் விழுதுகள்’’, 2012–இல் ‘‘வசந்தம் வரவேண்டும்’’ போன்ற சமூக நாவல்கள் சென்னை மணிமேகலைப் பிரசுரங்களாக வெளிவந்து பெரும் வரவேற்பைப் பெற்றன.

2014–இல் இவரது சரித்திர நாவலான ‘‘கல்யாணி புரத்துக் காவலன்’’ சென்னை மணிமேகலைப் பிரசுரத்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவந்து, பண்டைய ஈழத்தில் தமிழர்களின் சிறப்பான வாழ்வியற் கோலங்களை வெளிக்கொணர்ந்தது.

அத்தோடு நின்றுவிடாது பண்டைய தமிழ்க் கிராமங்களின் அதே பெயரில் கதை நகர்ந்து தமிழ் மன்னர்களின் வீரத்தையும் விவேகத்தையும் வார்த்தைகள், வருணனைகள் மூலம் சுவைபடச் சொல்லி உண்மையிலேயே இச்சரித்திர நாவல் எமையெல்லாம் சுமார் ஆயிரம் வருடங்களுக்குமுன் அழைத்துச் சென்றுவிட்டது எனலாம்.

இப்போது இவரது ஐந்தாவது படைப்பாகிய ''இந்த மண்ணும் எங்களின் சொந்த மண்தான்!'' எனும் சமூக நாவல் மணிமேகலைப் பிரசுரமாக வெளியாகிறது. இந்திய வம்சாவழித் தமிழர்கள் மலையகத்தில் படும் அவலங் களையும் அவர்களின் வளமான எதிர்காலத்துக்கான வழிமுறைகளையும் மண் மணம் மாறாது சுவைபடச் சொல்லும் இப்புதினம் நல்விருந்தாகப் போகின்றது.

இணுவில் திருவூர் ஒன்றியத்தின் செயலாளராகக் கடந்த பதினைந்து ஆண்டுகளாக உழைக்கும் கிருபாகரனது நூல்களின் விற்பனையிற் கிடைக்கும் இலாபம் தர்மநிதிகளுக்கே ஒன்றியத்தின் சார்பில் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. இலக்கியத்துறை, சமூகத் துறை இரண்டிலும் ஒரே நேரத்தில் தொண்டாற்றும் இணுவில் ஆர்.எம். கிருபாகரனுக்குத் தமிழ்முருகன் தண்ணளி பெருக்கமுற வேண்டுவோம்.

**சோமசுந்தரம் சிவநாயகம்**
ரொறன்ரோ, கனடா

பொருளாளர்
இணுவில் திருவூர் ஒன்றியம்
கனடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

## இணுவில் கலை இலக்கியக் கழகம் வாழ்த்துகிறது

மலைநெடிய காடழித்து
வருந்திட்ட அடிநாளில்
புலி, கரடி பாம்புகளின்
பொல்லாங்கால் கொலையுண்டோர்

வருந்திமலைப் பாதைவெட்டி
மாய்கையிலே மேலிருந்தே
உருண்டுவந்த பாறைகளால்
உழக்குண்டே இறந்தவர்கள்

தேயிலை, கோப்பி, றப்பர்
செல்வப் பயிர்வளர்த்தே
போயெருவாய் மண்ணுள்
புதையுண்டு போனவர்கள்

பத்து லட்சம் வரை, உரிமை
பறிப்புண்டு, நாடற்று
வத்தைகளி லேற்றி
வழியனுப்பப் பட்டவர்கள்
என்றிவ் வாறொழிந்தே
எஞ்சுமலை யகத்தமிழர்
இன்றுசிங்க ளக்காடை
இராட்சதரால் வீடெரித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகதிகளாய் விரட்டுண்டே
அலைகின்றார்! உயிர்காக்கும்
புகலிடமே இன்றிப்
போக்கற் றழிகின்றார்!

தொழிற்சங்கம் தமைநம்பி,
துரைநீதி மனம்நம்பி
தொழுதுண்பா. உக்கஎனும்
'தொண்ட'மைச்சர் தமைநம்பி
எப்பலனுங் கண்டதில்லை!
எவருமில்லை காப்பாற்ற!
இப்படியே மலைத்தமிழன்
எம்முறவு அழிவதுவா?

எனஏங்கும் கிருபா,இவ்
வெழுத்தாளர் காண்கின்றார்
இனியதொரு மார்க்கம்
இந்நாவல் ஊடாக!

வன்னி,யாழ்ப் பாணம்,
மட்டுநகர், அம்பாறை,
மன்னார்,திரு மலைதமிழன்
வரலாற்றுத் தாய்நாடு!
மலைத்தமிழ ரெல்லாம்
வந்திங்கு குடியேறி
வலுச்சேரும் போதினிலே
வலிமைபெறும் முழுஇனமும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுங் கருத்தை
　　இக்கதையில் உணர்த்துகிறார்!
இந்நாள் ஈழம்சூழ்
　　இன்னல்கள் எல்லாமே
விரைவில் கலைந்தோடி
　　மேவும்தமிழ் ஆட்சியிங்கு!
கருதிஇதை நோக்கில்,இக்
　　கதைநல்ல திசைகாட்டி!

தம்பலங்கள் நாளும்
　　சதிக்கூட்டம் உறிஞ்ச நொந்து
தம்பலகா மம்வந்தே
　　தழைத்தோரின் கதைஈது!

''இந்தமண்ணும் எங்களின் சொந்தமண்தான்''
　　என்னும் இப் புதினத்தை
ஐந்தாம்தம் நூலாக
　　அளிக்கின்றார் நம்மிணுவை
யூர்ஆர்.எம். கிருபா
　　கரன்! அவரின் உணர்வு
கூருதிறன் வாழி கொழித்து!

**- பண்டிதர் ச.வே. பஞ்சாட்சரம்**

இணுவில்
கலை இலக்கியக் கழகம்
19.07.2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்நூலாசிரியரின் இதர நூல்கள்!

- இவர்கள் எப்போதும் விழுதுகள் (நாவல்) 55.00
- வசந்தம் வரவேண்டும் (நாவல்) 65.00
- கல்யாணிபுரத்துக் காவலன் (சரித்திர நாவல்) 70.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த மண்ணும்
# எங்களின் சொந்த மண்தான்!

## 1

**அ**ப்படி ஒன்றும் புதிதாய் அந்தப் பகுதியில் இடம் பெறவில்லை. வழமை போல அன்றைய காலைப்பொழுது விடிந்ததும் தேயிலைக் கொழுந்து பறிக்கப் போகும் பெண்களும் கூலி வேலைகள் செய்யும் ஆண்களும் கூட்டம் கூட்டமாகச் சென்றார்கள். வானம் மப்பும் மந்தாரமுமாயிருந்தது. காலைப் பனிமூட்டம் முற்றாக இன்னும் கலையவில்லை என்பதற்கு அடையாளமாய் அவற்றை ஊடறுத்துச் சென்ற இளங்காலை வெயில் கண்களைக் கூசவைத்தபடி, அதில் பட்டுத் தெறித்தது.

இவர்களின் ஆரவாரம் அடங்கப் பள்ளிக்குச் செல்லும் பிள்ளைகளின் நடமாட்டம் தெருவெங்கும் காணப்பட்டது. எட்டுமணி தாண்டியதும் பிள்ளைகள் அவசரப்பட்டுப் பள்ளிக்கு ஓடினார்கள். தோட்டப்பாடசாலை லயத்திலிருந்து கொஞ்சம் தள்ளியிருந்தது. பிள்ளைகள் பாடசாலை சென்றடைய ஓடி ஓடிப் போனாலும் கூட, குறைந்தது இருபது நிமிடமாவது எடுக்கும். அதனால்தான் என்னவோ மருதம்மா தன் கடைசி மகள் கிருஷ்ணியை நேரத்துக்கே அனுப்பிவிட்டுக் கணவர் சண்முகத்திற்கு, காலை உணவு பரிமாறிக் கொண்டிருந்தாள். கணவர் சண்முகத்தால் கடந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வருட காலமாக வேலைக்குப் போக முடியவில்லை. வீட்டிலே முடங்கிக் கிடக்கும் கையாலாகாதவராகவே தன்னை நினைத்துக் கொள்ளும் அப்பாவி மனிதர் அவர்.

கூலி வேலைக்குப் போனபோது காலிலே காயம் ஏற்பட்டுப் பெரியாஸ்பத்திரியில் சிகிச்சை செய்தும் பலனில்லை. பூரண சுகமடையவில்லை. ஒரு வருடம் வேலையில்லாமல் இருப்பதென்பது எவ்வளவு பெரிய இழப்பு என்பதைச் சண்முகத்திடம் கேட்டால் விளக்கமாய்ச் சொல்வார். மனைவி மருதம்மா வேலைக்குப் போகும்வரை வாழ்க்கைச் செலவு கட்டுக்குள் இருந்தது. இப்போது இருவருக்குமே வேலையில்லை.

அந்த லயப்பகுதியில் எதுவும் இடம் பெறாததால் அமைதியாகவே இருந்தது. சொல்லி வைத்தாற்போல் அவ்வமைதியைக் காவேரியின் குரல் குலைத்தது. "அம்மா! என்னோட விதியைப் பாத்தீங்களா?" என்ற அவளின் அவலக்குரல் அக்கம்பக்கத்து லயங்களிலே இருந்தவர் களுக்கும் கேட்டது. எல்லோரும் ஏதோ ஆபத்து என்று ஓடிவந்து சண்முகத்தின் லயத்துக் கதவோரம் குழுமி விட்டார்கள்.

தாய் மருதம்மாவைக் கட்டியணைத்தபடி காவேரி தேம்பித் தேம்பியழுதாள். தாய்க்கு, மகள் ஏன் அழுகிறாள் எனப் புரியவில்லை. கணவரைப் பார்த்தாள். சண்முகமோ சாப்பிட்ட கோப்பையை நிலத்தில் வைத்துவிட்டுச் செய்வதறியாது விழிபிதுங்கி நின்றார். லயத்து வாசலில் கூடியோர், "அக்கா மகளைக் கேள், ஏன் அழுகிறாளாம்?" என ஏக குரலில் கேட்டார்கள்.

பலமுறை தாய் மருதம்மா கேட்டும் பதில் சொல்லாமல் காவேரி அழுதாள். வெளியே யாரோ, "கொழும்புக்கு சேட் கொம்பனியில வேலை எண்டுதானே போனவள். இப்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வந்து இப்பிடி அழுகிறாளே" என்றார்கள். இன்னுமொரு குரல் "கொழும்புதானே எவனிட்ட ஏமாந்தாளோ வாயிலை வயித்தில...." நளினம் பேசியது.*

*மரத்தால் வீழ்ந்தவனை மாடு ஏறி மிதித்ததுபோல இந்த அவச்சொல் கேட்டதும் காவேரியின் மனம் துடித்தது. கோபம் கொப்பளிக்க, கண்களிலே கனல் பறக்கத் தலையை நிமிர்த்திய காவேரி லயத்து வாசலுக்கு வந்தாள். அவச்சொல் பேசிய இருவரையும் கையிலே பிடித்துக் கொறகொறவென காம்பராவுக்குள் இழுத்து வந்தாள். ஏதோ விபரீதம் நடக்கப் போகிறதோ என எல்லோரும் எண்ணிப் பரபரப்பு ஏற்பட்டு மயான அமைதி நிலவியது.*

*காவேரி உரத்த குரலிலே, "ஐயா, அம்மா தோட்டத்திலை இரண்டு, மூண்டு நாள் மட்டும் வேலை தந்தாங்கள். நம்ம குடும்பத்துக்குப் பாதி வயித்துக்கே அது போதாது. வேலை தேடியலைஞ்சதுதான் மிச்சம். இந்தத் தோட்டக்காட்டிலை எங்கே வேலையிருக்குது? இருந்தாலும் நம்மப்போல கூலிகளுக்கா குடுப்பான் வேலை? பொம்பள ஏஜென்சி ஒருத்திய நம்பி கொழும்புக்குப் போனால், சேட் கொம்பனியிலை வேலை ஒரு மாதம்தான். முதல் மாதச் சம்பளத்தை ஏஜென்சிக்காரி எடுத்தாள். வேலை வந்தால் தருவாங்களாம். இப்பிடியே நாலு மாதமாச்சு. சாப்பிடவே காசில்லை. தோடு, சங்கிலி எல்லாம் வித்து சாப்பிட்டு வாடகையும் குடுத்தேன். வேலையும் இல்லாமல் என்ன செய்யலாம்? றோட்டிலை படுத்து பிச்சைதான் எடுக்க வேணும். அதைவிட பச்சைத் தண்ணியக் குடிச்சிட்டு ஈரத்துணியை வயித்திலை கட்டிக் கொண்டு வீட்டிலை இருந்திடலாம் அம்மா..." என மூச்சுவிடாமல் நடந்ததை ஆவேசமாகக் கக்கினாள். அவச்சொல் பேசியவர்கள் இருவரும் தலைகுனிந்து நின்றார்கள்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதம்மாவின் முகத்திலே எள்ளும் கொள்ளும் வெடித்தது போலப் பார்த்தாள். "அடியே இந்தத் தோட்டத்தைத் தவிர வெளியுலகம் என்ன எண்டு ஏதாவது தெரியுமா உங்களுக்கு? கிணத்துத் தவளையா இருந்து கொண்டு இப்பிடியா அவதூறு சொல்லுறது? உங்களுக்கு ஒரு மகள் இருந்து இப்பிடித் திரும்பி வந்தால் அதே மாதிரிச் சொல்லுவீங்களா?" என்று வாயிலே வந்த வார்த்தைகளை மருதம்மா மழையெனக் கொட்டினாள்.

காவேரியின் அழுகைக்கான காரணத்தையறிந்தவர்கள் ஒவ்வொருவராக அவ்விடத்தை விட்டு வெளியேறினார்கள். அப்போது சண்முகம் வாசல் கதவைச் சார்த்திவிட்டு மகள் காவேரியைக் கேட்டார், "வேலை செய்யுறேன் காசு அனுப்புவேன் எண்டு கடுதாசி போட்டியே."

காவேரி கண்ணீரைத் துடைத்துவிட்டு, "ஐயா, கொழும்பிலை வேலையில்லாமல் இருக்கிறேன் எண்டு நீங்களும் அம்மாவும் கேள்விப்பட்டால் இந்த நாலு மாதமும் நிம்மதியாயிருக்கமாட்டீங்கள். அதுதான் ஐயா..." என வார்த்தைகளை விழுங்கினாள். சில விநாடி நிசப்தம் நிலவிய பின் மருதம்மா பேசினாள். "காவேரி நீ கவலைப்படாதை. நீ துணிச்சலானவள், பத்திரமாய்த் திரும்பி வந்ததே போதும்."

அப்போது மீண்டும் காவேரிக்கு அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது. காவேரியின் குரல் ஈனக்குரலாகக் கேட்டது. அவள், "அம்மா நான் திரும்பி வந்திட்டேன், எங்க வீட்டுக்கடைசி நகை இனி வராதே. அதை வித்துட்டேனே, இனி என்ன செய்யப் போறமோ தெரியாது..." எனச் சொல்லியழுதாள். சண்முகம் மகளுக்கு ஆறுதல் சொன்னார், "காவேரி, நகையைக் கூட அவசரத்துக்குத்தானே வித்திருக்கிறாய். காசு இருந்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நகை எவ்வளவும் வாங்கலாம். ஆனால் மானம் போனால் திரும்பி வராது. போனால் போனதுதான், மீட்கவும் முடியாது. எங்களைப் போல ஏழை பாழையளுக்கு உயிருள்ளவரை கூடவேயிருக்கிறது அது ஒண்ணுதான்" என்றார்.*

*காவேரியின் முகத்திலே ஒரு வரட்டுச் சிரிப்புத் தென்பட்டது. கண்ணீரை சட்டையிலே துடைத்துவிட்டு, "அப்பா, சாப்பாட்டுக்கே அன்றாடம் கூப்பாடு போடுற நாங்களா நகை வாங்குறது. எப்பிடி...?" என்று சொன்னாள். மீண்டும் காவேரி பேசினாள், "அம்மா நான் கொழும்புக்குப் போகும்போது நகையைக் கொண்டு போயிருக்கவே கூடாது. அதுதான் நான் செய்த பெரிய தப்பு" என்று அடித்துக் கூறினாள். சண்முகம் குறுக்கிட்டு, "அதுக்கு நீ என்ன செய்ய முடியும். நகை இருந்ததால் வித்தாவது சாப்பிட்டாய் இல்லையெண்டால் பட்டினியா...?" எனக் கூறினார்.*

*காவேரி சிரித்துவிட்டு, "அப்பா நான் மூண்டு மாதம் முந்தியே வந்திருப்பேன், நகையும் போயிருக்காதே, இப்ப ஒண்டுமே மிஞ்சவில்லை என்னைத் தவிர" எனச் சம்பாசனைக்கு முற்றுப்புள்ளியிட்டு விட்டு கைகால் அலம்பச் சென்றாள்.*

*மதியம் நெருங்கியது. காவேரி திரும்பி வந்து விட்டாளே, அதுவும் வேலையும் இழந்து நகையும் இழந்து என மருதம்மாவின் மனம் வாடியது. நேரம் போனதும் தெரியவில்லை. சமைக்க வேண்டுமே என்ற எண்ணம் எழவில்லை. அடுப்பைப் பார்த்தபோதுதான் இன்னும் சமைக்கவில்லையே என மருதம்மா உணர்ந்து கொண்டாள். சமையலுக்குத் தேவையான மளிகைச்சாமான்கள் சில வாங்கவென மலைப்பாதையிலே கீழே சென்றாள். அந்தப்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதி தோட்ட லயங்களின் மக்கள் மளிகைச் சாமான்கள் வாங்கக்கூடிய ஒரேயொரு கடையென்றால் அது முத்தையாபிள்ளை கடைதான். சாமான்களின் இருப்பு அதிகமில்லாவிட்டாலும் அங்கு இல்லாத சாமான் இல்லை எனத் துணிந்து சொல்லலாம்.

மருதம்மா கடையை அடைந்ததும் கடை முதலாளி முத்தையாபிள்ளை "என்ன மருதம்மா மகள் கொழும் பிலிருந்து வந்திட்டாளா?" என்று பேச்சை ஆரம்பித்தார். அந்த மனுசன் "விசயம் கறக்கும்" விசயத்தில் சூரப்புலி. கதைவிட்டுக் கதை பிடுங்கி எனச் சிலர் சபித்தும் உள்ளார்கள். இதை மருதம்மா நன்கறிந்துள்ளாள். இந்த மனிசனிடம் கதை குடுத்தால் அவ்வளவுதான் என உள்ளூரப் புழுங்கிய மருதம்மா இலேசாகச் சிரித்துவிட்டு, "அண்ணை, ஒரு கிலோ அரிசி கீரை, அரைக்கிலோ கத்தரிக்காய், இரண்டு முட்டை தாங்க, போய்ச் சமைக்கவேணும்" என மருதம்மா கேட்டாள்.

கடையில் சாமான் வாங்கவந்த இரண்டொரு பேர் மருதம்மாவை ஒரு மாதிரிப் பார்த்தார்கள். முதலாளி ஏதோ கேட்க, இவள் வாங்க வேண்டிய சாமானின் பட்டியலை வரிசையாகச் சொல்லுறாளே, என நினைத்திருக்க வேண்டும். முதலாளி முத்தையாபிள்ளை சொன்ன சாமான்களை எடுத்துவைக்க, மருதம்மா கொண்டுவந்த பையிலே போட்டுவிட்டுக் காசை நீட்டினாள். முத்தையா பிள்ளை, "என்ன இது நாலு ரூபா குறையுதே" என்றார். மருதம்மா உடனே "அண்ணை கணக்கிலை எழுதுங்க பிறகு சேத்துத் தாறேன்..." என இழுத்தாள். மற்றைய நேரங்களிலே ஐந்து பத்துச் சதம் குறைந்தாலே முணுமுணுக்கும் முத்தையாபிள்ளை வேறு எதுவும் பேசாமல் "அது சரி கொழும்பிலையிருந்து வந்த மகளுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முட்டை பொரிச்சுக் குடுக்கப் போறியா?" எனத் திரும்பவும் தோண்டிக் கேட்டார். நின்று பதில் சொல்லிக் கொண்டிருந்தால் இன்றைய பொழுது இங்கேயே போய்விடும் என நினைத்த மருதம்மா "ஆம்" என்பது போலத் தலையசைத்துவிட்டு, வீட்டுக்குத் திரும்பினாள். ஏதோ ஒரு கண்டத்திலிருந்து மீண்டு வந்தது போலிருந்தது. முதலாளியிடம் ஏதாவது விசயம் உளறிவிட்டால் அவ்வளவு தான். பேனைப் பெருமாளாக்கி, சாமான் வாங்க வரும் அத்தனை பேருக்கும் கதையளப்பதில் அவருக்கு நிகர் எவருமேயில்லை. ஊரில வரும் வம்புதும்பு கேட்பதற்கென்றே இவரிடம் போவோர் உண்டு, இப்படி வம்பு தும்பு வேண்டாமென்று இவரின் கடைப்பக்கம் போகாதவர்கள் பலருண்டு.

வீட்டிலே மருதம்மாவுக்குப் பேரதிர்ச்சி காத்திருந்தது. தேவிகா காம்பராவுக்குள்ளிருந்து விசும்பி விசும்பியழுது கொண்டிருந்தாள். "இதென்ன இவளுக்கு என்ன நடந்தது?" என நினைத்துக் கொண்டு மகளின் அருகே சென்றாள். அப்போது காவேரி நெருங்கி வந்து, "அம்மா, அவளின் சித்தி வீட்டுக்குக் காசு இல்லாமல் வரவேண்டாம் எண்டு அடிச்சுக் கலைச்சுவிட்டா, அதுதான் இவள் தேவிகா இங்கேயே..." என இழுத்தாள். சில விநாடி நிசப்தத்தின் பின் சண்முகம், மருதம்மாவைப் பார்த்து, "தேவிகா, பாவம் தாயும் தகப்பனும் இல்லாதவள். போதாக்குறைக்கு சிறியதாயின்ரை கொடுமை வேறு. எங்க காவேரியை விட்டால் அவளுக்கு வேறு யார் ஆதரவு?" எனக் கூறினார்.

"தேவிகா இன்று முதல் எங்க வீட்டிலேயே இருப்பாள்" என்று சொல்லாமல் சொன்ன விதம் மருதம்மாவுக்குச் சுத்தமாகப் பிடிக்கவில்லை. தான் ஏதாவது பேசி, அதன் வார்த்தைகளில், சிடுசிடுப்போ காரமோ இருந்தால், அச்சூழலில், வீட்டுக்கு வந்தவரைப் பிடிக்கவில்லையென

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைப்பார்களே, என்று நினைத்து மௌனமாகவே மருதம்மா இருந்தாள். தேவிகாவும் சரி, காவேரியும் சரி எதுவும் பேசவில்லை. தனக்கு அடைக்கலம் தந்ததற்காக நன்றியைப் பார்வைகளால் தேவிகா, காவேரிக்குத் தெரிவித்தாள்.

காவேரியுடன் பாலர் பாடசாலையிலிருந்து எல்லா வகுப்புகளிலும் படித்து வந்தவள்தான் தேவிகா. சிறிய வயதிலேயே தாயைப் பறிகொடுத்தாள். தகப்பன் மறுமணம் செய்ததே தேவிகாவைப் பார்ப்பதற்காக. ஆனால் தேவிகாவின் சித்தியோ தான் பெற்ற இரு மகன்களை மட்டும் நன்கு கவனித்தாள். தேவிகாவை ஏனோதானோ என்றே வளர்த்தாள். தகப்பனும் திடீரெனக் கண்ணை மூடியபோதுதான் குடும்பம் தத்தளித்தது. வருமான மின்றி வாழும்போது தேவிகாவை மேலும் மேலும் துன்புறுத்தினாள். முதலில் தேவிகாவின் படிப்பை நிறுத்திவிட்டுக் கூலி வேலைக்கு அனுப்பினாள். கணவர் உயிரோடிருந்த காலத்திலேயே தேவிகாவைப் பந்தாடிய சித்திக்கு இப்போ தட்டிக்கேட்க ஆட்களில்லை என்ற துணிச்சல் வேறு. தேவிகா தன் வீட்டுக் கண்ணீர்க் கதைகளைச் சொல்லி அழ ஒரேயொரு தோழி என்றால் அது காவேரி மட்டும்தான். பொறுமையோடு கேட்டுத் தேவை யானபோது ஆறுதல் வார்த்தைகள் காவேரி சொல்வாள். சித்தியின் கொடுமைகளால் வாழவேண்டும் என்ற ஆசையே தேவிகாவுக்குக் குறைந்துவிட்டது.

மருதம்மாவின் மௌனத்திற்கான அர்த்தத்தைப் புரிந்து கொண்ட காவேரியும் சண்முகமும் தேவிகாவின் கவலையைப் போக்க வேறு விடயங்களைப் பேசிக் கொண்டிருந்தனர். ஆனால் தேவிகாவின் முகத்திலே எதுவித மாற்றமும் காண முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேயறைந்தது போலக் காணப்பட்ட அவளின் வதனத்தில் சோக ரேகைகளே தாண்டவமாடின. கொழும்பிலே வேலையுமின்றி கையிலுள்ள காசும் செலவழிந்தபின் வீடு திரும்பியபோது, சித்தியாலும் விரட்டியடிக்கப்பட்டபோது உலகத்தையே இழந்து நிர்க்கதியாக நிற்பதுபோலத் தேவிகாவுக்கு இருந்தது. போக்கிடம் ஒன்றே ஒன்றுதான், அது காவேரியின் வீடு. அது வீடும் அல்லவே. தோட்டத்து வெறும் லயம்தான். மாளிகையல்ல. குந்தியிருக்க ஒரு ஒதுக்கிடம்தான். காவேரியும் கைவிட்டால் போக வேறு இடமோ தெரிந்தவர்களோ எதுவும் கிடையாது. பெண் என்றால் பேயும் இரங்கும் என்பார்கள், ஆனால் தேவிகாவிற்கோ இதில் துளியும் நம்பிக்கையில்லை.

ஏனென்றால் கொழும்பிலே வேலை தேடியபோது அவளின் தனிமையையும் அழகையும் பார்த்து வேலை தர வந்தார்களே தவிர, எவரும் இரங்கி வேலை கொடுக்க முன் வரவேயில்லை. பெரும்பாலானவர்கள் பணத்திற்குத் தேவிகாவை அடிமையாக்கவே முனைந்தார்கள். அதற்காக மானத்தைவிட்டு, அவர்களிடம் மயங்கியிருந்தால் கொஞ்சகாலம் மகாராணியாகக் கொழும்பிலே ஏதோ ஒரு மாளிகையில் உல்லாசமாய் வாழ்ந்திருக்கலாம். இதே போன்ற சூழ்நிலையில் இக்கட்டான பின்னணியில் பல பெண்கள் ஏமாற்றுக்காரர்களின் எடுப்பான இனிப்பு வார்த்தைகளில் மயங்கிக் கடைசியில் தம் உடலை விற்றுப் பிழைக்கும் இழிநிலைக்குத் தள்ளப்பட்டதைத் தேவிகா நன்கறிந்திருந்தாள். இதனால்தான் இப்படியான நிலை வந்தாலும் எதையிழக்கினும் மானத்தையிழக்க மாட்டோம் என்ற உறுதியுடன் கொழும்பில் வேலை தேடியலைந் தார்கள். காவேரியும் தேவிகாவும் ஒரே எண்ணத்திலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணித்ததால் இருவரும் பத்திரமாக வீடு திரும்ப முடிந்தது!

இந்த மனத்திருப்தி ஒன்றுதான் கடைசியிலே மிஞ்சியதாகப் பேசிக்கொண்டே நண்பிகள் இருவரும் கொழும்பிலிருந்து தொடருந்தில் ஏறி கற்றன் நகருக்கு வந்தார்கள்.

இப்பொழுது காவேரியின் அரவணைப்பும் இல்லை யேல் ஆதரவின்றித் தற்கொலை தான் செய்ய வேண்டும், தேவிகாவிற்கு இது ஒன்றுதான் வழி. அதுகூட விலைவாசியைப் பார்க்கும்போது, கட்டுபடியாகாது. ஒரு முழம் கயிறோ, விசமோ விலை அதிகம். அப்படியாயின் மலை உச்சியில் நின்று ஆற்றில் குதிக்க வேண்டியதுதான் என்றுகூடத் தேவிகா நினைத்ததுண்டு.

ஆனால், இன்று காவேரியின் தோட்டலயன் ஊடாகப் பார்க்கும்போது தேவிகாவிற்கு முழு உலகையுமே பார்க்க முடிகிறது. அங்கு மனிதநேயத்தையே கண்கூடாகக் காவேரியின் வடிவில் காண்கிறாள்.

தேவிகா தன்னையே மறந்து சில நிமிடங்கள் இருந்து விட்டு விழித்துக் கொண்டபோது மருதம்மா எதிரிலே நின்று துவாய் ஒன்றை நீட்டினாள். “போய் முதல்ல கை காலைக் கழுவிப்போட்டு வாறியா, நேரமாகுது சாப்பிடு” என்றாள் மருதம்மா. பசியில்லையென்று மறுக்கவும் முடியாமல், இருக்கும் பசியை அடக்கவும் முடியாமல் தேவிகா காலை உணவை முடித்துக் கொண்டாள். அடுப்பங்கரையிலே காவேரி சமையலுக்குத் தயாரானாள். “என்னடி காவேரி சமையல்தானே நானும் வாறேன், தேங்காயைத் துருவித் தரட்டா” என்று கேட்டபடி தேவிகா சென்றாள். “இது என்னடி பெரிய சமையலா, ஐஞ்சாறு கறி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொரியலோடையா சாப்பிடப் போறம்?" என வினாத் தொடுத்தபடி காவேரி வேலையில் மும்முரமாயிருந்தாள். முன்பு எல்லாம் வீட்டுக்கு அடிக்கடி தேவிகா வந்தாலும் வாசலிலேயே இருந்து விடுவாள். காவேரியோடு எவ்வளவு அன்னியோன்னியமாகப் பழகினாலும் அடுப்படிவரை வந்து உதவி செய்ததில்லை.

'இனி நான் தங்கியிருக்கப் போவதே இங்கேதான், பிரதியுபகாரமாய் இந்தச் சின்ன வேலைகளையாவது செய்யாவிட்டால் எப்படி? காவேரியின் வீட்டு நிலவரப்படி பண உதவியாக நான் கொஞ்சமாவது கொடுத்தால் இன்றைய நிலையில் பேருதவியாய் இருக்கும்.' தேவிகாவின் மனத் திரையிலே இப்படி ஓர் எண்ணம் இருந்தது. ஆனால் காசுக்கு என்ன செய்வது.

தங்களின் சுமையைச் சுமக்கவே அவர்கள் பெரும் அளவில் போராட வேண்டியுள்ளது. இது போதாது என்று நானும் இவர்களின் வீட்டில் இருப்பதால் நிச்சயம் சுமையாகவே நான் இருக்கப் போகிறேன். வீட்டிற்கு வந்து சேர்ந்தபோது, "வா, வா" என எவரும் வரவேற்கவில்லை. அதே நேரம் எவரும் "வராதே போய் விடு" எனத் துரத்தவுமில்லை. அவர்களின் மௌனமே சம்மதம் என நினைத்துக் கொண்டு தங்கப்போகிறேன், எனத் தேவிகா உள்ளூர நினைத்துக் கொண்டாள்.

அப்போது தபால்காரன் கடிதம் ஒன்றைக் கொடுத்தான். மருதம்மா கடிதத்தை வாங்கி வாசித்தாள். "எல்லாமே சின்னச் சின்ன எழுத்து. துலக்கமா இல்லை..." என்று கூறியபடி மருதம்மா லயத்துக்கு வெளியே வந்து சூரிய வெளிச்சத்தில் கடிதத்தை வாசித்தாள். உள்ளே போகவும் கணவர் சண்முகம் எட்டிப் பார்த்துவிட்டு "யார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்ட கடுதாசி, இரமணகிரியா?" எனக் கேட்டார். மருதம்மா, முகத்திலே ஒரு பிரகாசமான புன்னகையோடு, "அவன்ட கடுதாசிதான்... இம்முறை காசும் அனுப்பியிருக்கிறான்" என்று சொன்னாள். சாப்பாட்டிலே மும்முரமாயிருந்த காவேரியும் தேவிகாவும் எழும்பி மருதம்மாவின் அருகே வந்தார்கள். எல்லோரின் முகங்களிலும் பெரும் மலர்ச்சி காணப்பட்டது. "வேறை என்னவாம்...?" என ஆவல் பொங்க, சண்முகம் வினாவ, "அநேகமாய் பொங்கலுக்கு ஊருக்கு வாறன் எண்டிருக்கு..." என மருதம்மா பதில் சொன்னாள்.

மருதம்மாவுக்கு மூத்த மகன் இரமணகிரியின் வாழ்க்கையை நினைத்தால் தீராத கவலைதான் மிஞ்சும். அவனது வயசுப்பிள்ளைகள் கல்யாணமாகி குழந்தை குட்டியோடு இருக்கிறார்கள். இவன் மட்டும், "இப்போதைக்குக் கல்யாணமே வேண்டாம், நம்ம காவேரிக்கு முதல்ல நடக்கட்டும், பிறகுதான் எனக்கம்மா" என்று தாய் வற்புறுத்தியபோதெல்லாம் உறுதியாகக் கூறிவிட்டான். இரமணகிரியின் இந்தத் தீர்மானத்திற்குத் தகப்பன் சண்முகமும் மறைமுகமான ஆதரவைத் தன் மௌனத்தால் காட்டி வருகிறார். அதைவிடக் காவேரியும், அண்ணனை "நீ முதலில் கல்யாணம் செய்து கொள்" எனச் சொன்னது கிடையாது.

ஏனெனில் இவர்களின் ஒன்றுவிட்ட அண்ணன் ஒருவன் கல்யாணமானவுடன் தன் குடும்பத்தையே ஒதுக்கி வைத்துவிட்டான். தாய் வீட்டுப் பக்கமே வருவதில்லை. தாயோ, தகப்பனோ தங்கைகளோ தேடிப்போனால் கூட முகம் கொடுத்துப் பேசமாட்டான், "ஏன் வந்தீங்கள்...?" என்று கேட்டு அவமானப்படுத்தத்தான் அவனுக்குத் தெரியும். இதையெல்லாம் மனதிலே வைத்தோ என்னவோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தான் கல்யாணம் செய்து கொள்ளும் வரையாவது, அண்ணன் இரமணகிரி கல்யாணத்திற்குப் பொறுமைகாக்க வேண்டுமெனக் காவேரி எதிர்பார்க்கிறாள். அதைத் தன் வாயாலே சொன்னதில்லை. ஆனால் பேச்சுவாக்கிலே இதை அண்ணன் இரமணகிரி உணர்ந்துள்ளான்.*

*தாய் மருதம்மா கொஞ்சநாட்களாகவே கணவர் சண்முகத்திடம், தொடர்ந்து வற்புறுத்துவது காவேரியின் கலியாணம், இந்த வயது வரை செய்யாமல் இருப்பதற்கே காரணம் எங்கள் வறுமைதான், என மருதம்மா நினைத்துப் பார்ப்பதுண்டு. காவேரிக்குப் பேசிவந்த கலியாணங்கள் எதுவுமே சரிவரவில்லை. கைச்செலவுக்குக் கூட, காசில்லாதபோதுதான் காவேரி கொழும்புக்கு வேலை தேடிப் போனாள். கடைசியிலே காசு உழைத்ததுமில்லை இருந்த நகையையும் வித்துச் சாப்பிட்டதுதான் மிச்சம். இவற்றை நினைக்க நினைக்க மருதம்மாவுக்குத் தலைசுற்றி மயக்கம்தான் வரும். ஆனால் காவேரிக்கு இவற்றை நினைக்க குற்ற உணர்ச்சி மனசை மூடிமறைத்து சகல நாடி நரம்புகளை விறைக்கச் செய்துவிடும். அதனால் முடிந்தவரை பழசை நினைக்க விரும்புவதில்லை.*

*இரமணகிரியின் கடிதம் வந்ததிலிருந்து ஒரே அமைதியாகவேயிருக்கிறது. யாரும் எதுவும் பேசவில்லை. அப்போதுதான் சண்முகம் ஏதோ ஒன்றை நன்கு உறுதிபட முடிவெடுத்தது போலக் காணப்பட்டார். "மருதம்மா நாம பேசாமல் இரமணகிரியின் கமத்தில் போய் இருப்போமா?" எனச் சண்முகம் கேட்டார். எல்லோருக்கும் தூக்கிவாரிப் போட்டது. மருதம்மா ஆச்சரியத்துடன் கேட்டாள். "என்னது உண்மையாகத்தான் சொல்லுறீங்களா?" சண்முகம் உறுதி கண்களிலே தெறிக்கச் சொன்னார். "அவனோட போய் கமத்திலையே இருக்கிறதில் நமக்கென்ன பிரச்சனை?"*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவேரி குறுக்கிட்டு “அப்பா குடும்பத்தோடை போய் அண்ணனுடன் இருந்தால் இங்கே லயத்திலை யார் இருக்கிறது...?” என இழுத்தாள். சண்முகத்திற்குக் கோபம் வர, “என்ன பெரிய மாளிகையிலா குடியிருக்கிறோம். பிறந்ததும் வளர்ந்ததும் இந்தச் சின்னத் தகரக்கொட்டிலில் தானே. இதுகூட சொந்த நிலமா? அதைவிட இரமணகிரியின் கமம் எவ்வளவோ மேல், அவன்ட சொந்த வயல். ஏதோ மழையில்லாமல் இரண்டு வருசமாக விளைச்சல் இல்லை, கையிலை காசில்லை எண்ட பிரச்சனை வேறை. அவன்ட சொந்தக் கமத்திலை போய் நாங்கள் இருக்கிறதால இரமணகிரிக்கும் துணையாகுது, நாமளும் கௌரவமாயிருக்கலாம்தானே பிள்ளை...” என்று கேட்டார். அப்போதைய சூழ்நிலையில் அவரை எதிர்த்து எவராலும் எதுவும் பேசமுடியவில்லை.

ஆனால் ஒரேயொரு உள்ளத்திற்கு மட்டும் சண்முகத்தின் ஆலோசனை காதிலே ஈயத்தைக் காய்ச்சி வார்த்தது போலிருந்தது. கடவுளே! நானோ போக இடமில்லாமல் ஆதரவின்றி காவேரியின் லயத்தில் இருக்க வர, இங்கேயிருக்கிற இவர்கள் வேறு இடம் மாறினால் என் கதி அதோ கதிதான்... என்றெல்லாம் தேவிகாவின் மனம் தவியாய்த் தவித்தது.

அதே நேரம் தேவிகாவின் மனம் இன்னோர் கோணத்திலே சிந்தித்தது. இந்த லயத்திலே உள்ளவர்களுக்கு நான் இங்கே தங்குவது பிடிக்கவில்லை போலும். அதனால்தான் சாதாரணமாய் வந்த ஒரு கடிதத்தை வைத்துக்கொண்டு இத்தனை வார்த்தைகளா? கடவுளே “யாரைத்தான் நம்புவதோ பேதை நெஞ்சம்? அம்மம்மா பூமியிலே யாவும் வஞ்சம்” என்ற சுசீலாவின் பாட்டுத்தான் ஞாபகத்திற்கு வந்தது. காவேரியின் அப்பா எதற்காக இன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பார்த்து இந்த வார்த்தைகளை எனக்குக் கேட்கும்படி சொன்னார்? சில வேளை மகள் காவேரியால் என்னை மறுக்க முடியாமல் எல்லோரும் சேர்ந்து நடிக்கிறார்களா? இதை நினைக்க நினைக்க வேறு எதுவும் தோன்றவில்லை. மாறாக, கண்களிலே நீர் கசிந்தது.

## 2

கதிரவனின் பொற்கதிர்கள் எங்கும் வியாபிக்க, காலைக்கேயுரிய மெல்லிய இளங்குளிர்க்காற்று இலேசாக வீசிக்கொண்டிருந்தது. வயலின் நடுவே மாடுகளை விரட்டியபடி இரமணகிரி உழுது கொண்டிருந்தான். மொழு மொழுவெனக் கொழுத்த இரு காளைகளும் மூச்சு வாங்க உழுதவேளை இரமணகிரிக்கு வேதனை ரேகைகள் மனதில் படர்ந்தன. தம்பலகாமம் பகுதியிலே அரசாங்கம் வழங்கிய மூன்று ஏக்கர் காணியைப் பண்படுத்தி வயலாக்கிய இரமணகிரி வாங்கிய வங்கிக் கடனையே செலுத்த முடியாத அளவுக்கு வயல் வருமானம் கைவிரித்துவிட்டது.

என்னவோ காலாகாலத்துக்கு வானம் பொய்த்த தில்லை. வயலும் விளைந்தது. ஆனால் திருடர் தொல்லை, மிருகங்கள் தொல்லைகள் போக மீதி விளைச்சல் விலை போனதில்லை. யாருமே கடந்த சில வருடங்களாக உரிய காலத்திற்கு இராணுவக் கெடுபிடியால் விதையே விதைக்க முடியவில்லை. அறுகம்புல்லும் பூண்டுகளுமே மண்ணை ஆக்கிரமித்து நிற்கின்றன. வயலைப் பார்க்கும் போதெல்லாம் வயிறு பற்றி எரியும் நிலையிலே இரமணகிரி காணப்பட்டான். அது போதாது என்று நித்திரைக்குப் போனால் நித்திரைக்குப் பதிலாகக் கெட்ட கனவுகளே வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு நாட்களுக்கு முன்பு நன்கு மழை பெய்திருந்ததால் இன்று இரமணகிரி உழ ஆரம்பித்து விட்டான். ஈரநிலம் என்பதால் உழவிலே ஈடுபட்ட காளைகள் இரண்டும் சளைக்காமல் நின்று பிடித்தன. இதுவரை காலத்தில் உழுவதற்கு மண் இவ்வளவு சுலபமாக இருந்ததில்லை. இயற்கையும் ஒத்துழைப்பு வழங்கியபோது அலுப்போ களைப்போ இன்றி வயலிலே நெடுநேரம் நிற்க முடிகிறது. உழுது மண்ணைப் புரட்டிப் போட்டவுடன் அதற்குள் வாழ்ந்த குறவணவன் புழுக்கள் வெளியே வந்து நெளிந்தன. இவற்றைக் கொத்தித் தின்னவென ஏராளமான காக்கைகளும் மைனாக்களும் வயலெங்கும் தத்தித் தத்தித் திரிந்தன. அன்றைய பொழுது வயலிலேயே கழிந்ததை மாலைவேளை நெருங்கியபோது இரமணகிரி உணர்ந்தான். ஆனால் களைப்பு இலேசாகவிருந்தது. இருந்தும் முழு வயலையும் உழுது முடித்த திருப்தியில் இவையெதுவும் பெரிதாயிருக்கவில்லை.

இரமணகிரி மாடுகளையும் கையிலே பையையும் கொண்டு நடந்து வீட்டுக்கு வந்தபோது நன்கு இருட்டி விட்டது. முதல் வேலையாகக் களைத்துப்போன மாடுகளைத் தொழுவத்தில் கட்டிவிட்டு வைக்கோல் போட்டுத் தண்ணீர் அள்ளி வைத்துவிட்டு நிமிர்ந்தபோது தலை விண்விண் என வலித்தது. வயல் வேலை ஏராளம் இருக்கிறது என்பதால் அதிகாலை ஐந்து மணிக்கே எழுந்து சோறு கறி சமைத்து, கட்டிக்கொண்டு வயலுக்குப் போகவேண்டியிருந்தது.

உதவி எண்டு யாரையாவது கூப்பிட்டால் கூலி வேறை குடுக்கவேணும். இதனால் தனியே உழவு வேலையில் மாட்டோடு மாடாக வேலை செய்ய வேண்டியிருந்தது. மாட்டு உழவு என்பதால் இரமணகிரியால் தனியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சமாளிக்க முடியும். ஆனால் டிராக்டர் உழவு என்றால் அது ஆயிரக்கணக்கிலே செலவு முடியும். ஆனால் வேலை இரண்டு மூன்று மணித்தியாலத்திலேயே முடிந்துவிடும்.*

*மாடு பூட்டிக் கலப்பையால் உழுது முடிக்க நாலு நாளாயிற்று. போன மாதம் ஒரு நாள் இலேசாக மழை பெய்தபோது ஈரம் காயுமுன்பு அடுத்தடுத்த நாட்களிலேயே டிராக்டர் பிடித்து உழுத இரமணகிரியைப் பக்கத்து வயற்காரர்கள் சில வாரங்களில் ஏராளமான அருகம்புற்கள் இருப்பதைச் சுட்டிக் காட்டினார்கள். அடுத்த வயற் காணிக்காரர் சிவராசாவைப் பார்த்து இரமணகிரி, "அண்ணை இந்த அறுகம்புல்லை எப்படி அழிக்கலாம்?" எனக் கேட்டான். சிவராசா புன்னகையோடு, "தம்பி இரமணகிரி! அதுக்கு மாட்டு உழவு அல்லது கம்பிக்கலப்பை உழவுதான் நல்லது" என்றார். இரமணகிரி தலையைச் சொறிந்துவிட்டு, "அதுக்கு வேறை செலவா? கட்டுபடியாகுமா?" எனப் பல வினாக்களால் துளைத்தெடுத்தான்.*

*சிவராசா மீண்டும் சிரித்துவிட்டு வரம்பில் இருந்தபடியே, "டேய் தம்பி, வழி இருக்கு. உன்னட்ட கைவசம் ஒரு சோடி மாடு இருக்கு. வண்டில் இழுக்கவோ உழவுக்கோ எல்லாம் தயாராக வைச்சிருக்கிறாய், பிறகென்ன யோசனை..." என்றார். இரமணகிரியோ ஆச்சரியத்துடன் சிவராசாவைப் பார்த்தான். சிவராசா, "கம்பிக்கலப்பை ஒண்டுதான் குறையுது. அது என்னட்டையிருக்குது. கலப்பையைக் கொண்டு உழுது பார். செலவும் மிச்சம், அவ்வளவு அறுகம்புல்லும் அழியும். மண்ணும் பதப்படும். செய்து பார் தம்பி..." என்று சொல்லிவிட்டுத் தோளில் தட்டினார்.*

*சிவராசாவின் கம்பிக்கலப்பையால் உழுது முடிந்து விட்டது. நாளை விடிந்ததும் கலப்பையைப் பத்திரமாகத்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். இல்லையென்றால் அடுத்த போகத்திற்குப் போய் இரவல் கேட்க முடியாது. சிவராசா அண்ணை நல்ல மனிதர். கேட்காமல் தானே வலியத் தந்து உதவியவர். இப்படியே குளித்துச் சமைத்து சாப்பிட்டபடி சிவராசா அண்ணையின் உதவிகளை நினைத்தபடியே இரமணகிரி நித்திரையானான். காலை முதல் அந்தி சாயும் பொழுதுவரை ஓயாது வெயிலில் நின்று உழுது உடம்பு முழுவதும் அடித்துப் போட்டது போன்ற களைப்பில் அயர்ந்து நித்திரை கொண்டான்.

அதிகாலை ஐந்தரை மணிக்கெல்லாம் நித்திரையால் எழும்பிவிடும் பழக்கமுள்ள இரமணகிரி திடீரென மாடுகள் கத்தும் சத்தம் கேட்டு எழும்பினான். கண்களைக் கசக்கிக் கொண்டு மணிக்கூட்டைப் பார்த்தபோதுதான் நேரம், ஏழு மணியைத் தாண்டிவிட்டது. எங்கேயோ ஓர் வீட்டு வானொலியில் பிறந்தநாள் வாழ்த்து நிகழ்ச்சி இலேசாகக் கேட்டது. மாடுகளுக்கு முதலில் தவிடும் பிண்ணாக்கும் கரைத்துவைத்தபின் தன் காலைக் கடமைகளைக் கவனித்தான்.

தேயிலைத் தோட்டங்கள் அரசாங்கத்தின் நிர்வாகச் சீர்கேட்டினால் இலாபம் இல்லாமல் சீரழிகின்றன. கொள்ளை இலாபம் வந்தபோதெல்லாம் தொழிலாளர் களுக்கு ஏதோ “ஊக்கத்தொகை” என்ற பெயரில் சொற்பக் காசை வழங்கிவிட்டு விளம்பரத்தை நிர்வாகங்கள் அடைந்தன. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தபோதெல்லாம் அரசாங்க மட்டத்தில் பெருந்தோட்ட அமைச்சினூடாக தொழிலாளர்கள் அச்சுறுத்தப்பட்டார்கள். சிங்களக் காடையர்களை அனுப்பி லயங்கள் எரிக்கப்பட்டன, போராட்டங்கள் முடக்கப்பட்டன. பல தொழிலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கு வாரத்தில் நாலு நாள் வேலை, மூன்று நாள் வேலை என்று வேலை குறைக்கப்பட்டுப் பழிவாங்கப்பட்டார்கள்.

சாதாரண குடும்பக்காரர்களுக்கு இது கட்டு படியாகுமா? ஐந்து நாள் வேலை செய்தே மூன்று வேளை வயிறாரச் சாப்பிட முடியாதபோது நாலு நாள், மூன்று நாள் வேலையில் பச்சைத் தண்ணீர்தான் குடிக்க முடியும். தொழிலாளர்கள் பலர் நூற்றுக்கணக்கில் வெளியேறி வேலை தேடி அலைய ஆரம்பித்திருக்கிறார்கள். மலையகத்திலே வேலை கிடைக்காததால் அரசாங்கக் காணிக்கு விண்ணப்பம் செய்து பல படிகள் ஏறி இறங்கிக் கடைசியிலே தான் திருகோணமலையிலே இந்தத் தம்பலகாமத்தில், மூன்று ஏக்கர் தரிசுக்காணி இரமண கிரிக்குக் கிடைத்தது. கிடைத்தபோது ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. சந்ததி சந்ததியாக நூறு வருடங்களுக்கு மேல் தேயிலைத் தோட்ட லயத்திலே பிறந்து வளர்ந்த சமூகத்திலே பெரும்பாலாருக்குச் சொந்தக் காணி என எதுவும் கிடையாது. வெறும் கூலிகளே என அரசும் சரி, தோட்ட நிர்வாகமும் சரி, நடத்தி வரும் வேளையில் அங்குள்ள ஒருவருக்குச் சொந்தமாய் ஒரு பிடி மண் கிடைத்தாலும் அது மகிழ்ச்சிக்குரியதுதான்.

இரமணகிரியின் நிலை கூட இதைவிட ஒரு படி மேல் என்றே சொல்லலாம். ஏனெனில் காணி கிடைக்கும் பொழுது வங்கிக் கடனும் கூடவே கிடைக்கிறது. எந்த விவசாயியாவது துணிந்து கால் வைத்தால் நிச்சயம் விவசாயத்தில் வெற்றியடைவான். காட்டை வெட்டித் துப்பரவு செய்து முதலிலே சேனைப் பயிர் செய்து பின்பு வேறு பயிர்கள் செய்து இலாபத்தைச் சுமாராகவே அடையலாம். இப்படிச் சொல்வது சுலபமாயிருக்கலாம். ஆனால் நடைமுறையிலே எண்ணிலடங்காத் தடைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்களைத் தாண்டிச் சகிப்புத்தன்மையோடு முழு முயற்சி செய்தால் மட்டுமே இலவசமாகக் கிடைத்த காணியைப் பயன்படுத்த முடியும்.

இரமணகிரியோ மலைநாட்டிற்கு வெளியே எதுவுமே தெரியாமல் வளர்ந்து வந்தவன். திடீரென வேலையை இழந்த ஆவேசத்தில் ஏதோ ஒன்று பெற்றே ஆக வேண்டும் என்ற அவசரத்திலே விண்ணப்பித்தபோது கிடைத்ததே இந்தக் குடியேற்றத்திட்டக் காணி.

இரமணகிரிக்குரிய காணி என்ற உறுதிப்பத்திரம் கையில் கிடைக்கும் வரை அவன் அலைந்த அலைச்சல் ஆண்டவனுக்கே வெளிச்சம். காணியைப் பெற வரும்படி வந்த கடிதத்தைக் கொண்டு தம்பலகாமம் சென்றபோது, கிராம சேவையாளர் சொன்னார், "இதைக் கொண்டு போய்த் திருகோணமலைக் கச்சேரியில் பதிவு செய்து கொண்டு வா" என்று. திருகோணமலைக்குப் போனபோது கேட்டார்கள், "காணியின் உறுதிப்பத்திரம் கொண்டு வா" என்று. தலையைச் சுற்றிவிட்டது போலிருந்தது. நிலமையைச் சொல்லிப் புரியவைப்பதற்குள் போதும் போதும் என்று ஆகியது இரமணகிரிக்கு. காணியை, இலவசமாய்த் தாறதும் போதும் இப்படியே அலைக்கழிப்பதும் போதும், என இரமணகிரி மனதுக்குள் அடிக்கடி நினைத்துக் கொள்வான்.

அரசாங்கம் தந்த காசிலே காணியைத் துப்புரவு செய்து கொண்டு, வங்கியிலே கடன் கேட்டபொழுது "காணியின் உறுதிப்பத்திரம் இல்லாமல் கடன் கொடுக்க மாட்டோம்" என்று பதில் வந்தது. காணிப் பதிவு அலுவலகத்துக்குப் போய்க் கேட்டபொழுது "உறுதிப் பத்திரம் கொழும்பிலே பதிவு செய்துவர இரண்டு மூண்டு மாதம் எடுக்குமே..." என இழுத்தார்கள். சரி என்றுவிட்டு வந்து காத்திருந்ததுதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிச்சம். நாலு மாதமாகியும், “ஒன்றுமே வரவில்லை” என ஒரே வரியில் பதில் சொன்னான் ஒரு பொறுப்பான பதவியில் உள்ள அதிகாரி. இப்படி அப்படியே ஒருவருடம் ஓடி மறைந்தது. ஏதோ நேற்றுத் தான் தம்பலகாமத்திற்கு வந்தது போலிருக்கிறது. அதற்குள் ஒரு வருடம் எப்படி ஓடி மறைகிறது என நினைத்தபோது இரமணகிரிக்கு ஆச்சரியம் ஏற்பட்டது.

அரசாங்கம் தந்த மானியக் காசில் கொஞ்சம் மீதி இருந்ததால் ஒரு வருடம் வேறு வருவாயில்லாமல் சாப்பிட முடிந்தது. ஒரு வருடத்தினுள் பழையபடி புல்லும் பூண்டும் முளைத்து வயலை ஆக்கிரமித்து நின்றன.

அடிக்கடி ஊருக்குப் போய் வந்ததால் வயலிலே புல்லையும் பூண்டையும் இரமணகிரியால் கவனிக்க முடியவில்லை. பக்கத்து வயற்காரர்கள் இதைச் சுட்டிக் காட்டியபோது இரமணகிரிக்கு அது கடுமையான விடயமாகத் தெரியவில்லை. அனுபவம் இன்மை, வயது முறுக்கு, பிறகு பார்க்கலாம் என்ற சோம்பல் என்றெல்லாம் அடுக்கடுக்காய்ச் சொல்லிக் கொண்டே போகலாம். முழங்கால் அளவுக்கு வளர்ந்த புல்லும் பூண்டும் முழு வயலையுமே அடையாளம் தெரியாத அளவுக்கு மறைத்த போதுதான் இரமணகிரி விழித்துக் கொண்டான்.

பக்கத்து வயற்காரர் சிவராசா அண்ணை வந்து, “தம்பி இது என்ன கேவலமாயிருக்கு. வயல் எண்டால் மண் அப்பிடியே பதப்படுத்தியிருக்கவேணும். நீ இவ்வளவு புல்லும் பூண்டும் வளரும்வரை என்னப்பா செய்தாய்? உடனேயே பிடுங்கிவிடு. இல்லையெண்டால் இதிலை விழுந்த கொட்டையள் திரும்ப முளைத்துவிடும். மழைக்கு முன்பே துப்புரவு செய்துவிடு தம்பி” என்று உபதேசம் செய்திருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதைக் கேட்டவுடன் மனசிலே ஒருவிதப் பயம் இரமணகிரிக்குப் பிடித்தாட்டியது. தப்பித் தவறி மழை பெய்தால் போதும், அத்தனை புல்லும் பூண்டும் பல்கிப் பெருகிவிடும். சில நாட்களுள் முழுமூச்சாகப் பாடுபட்டு அத்தனையையும் அகற்றிப் பழையபடி இரமணகிரி பூண்டுக்காட்டை வயலாக்கியிருந்தான்.

அந்தக் கையோடு வங்கியின் கடனும், விதை நெல்லும் கிடைத்தன. "அட கடவுளே! இந்தக் காசும், விதை நெல்லும் முன்பு கிடைத்திருந்தால் போன வருடமே நெல்லை விதைத்து பயிர்ச்செய்கை பண்ணியிருக்கலாம்..." என இரமணகிரி பெருமூச்சு ஒன்றை விட்டு நினைத்துக் கொண்டான். "சரி, சரி ஏதோ இப்பாவது கிடைத்ததே பெரிய விடயம்..'' என அவனின் உள்மனம் உவகை கொண்டது. சிவராசா அண்ணை அடிக்கடி ஞாபக மூட்டியது இதைத்தான், "தம்பி, பருவத்தே பயிர் செய்." கிடைத்த காசிலே உழவு யந்திரம் பிடித்து உழுது விதைத்தவுடன் மழை பெய்து உதவியது.

மளமளவெனப் பயிர் முளைத்துப் பாத்திகளை அழகுபடுத்தியது. அடுத்தடுத்துப் பெய்த மழை பயிருக்கு உயிர் கொடுத்தது. இவ்வேளையிலேதான் எந்தப் பாவியின் கண்பட்டதோ தெரியவில்லை, பயிர்களின் குருத்து நுனிகள் மஞ்சள் நிறமாகிவிட்டன. உடனடியாகக் கிருமிநாசினி தெளித்துவிட, இரண்டு கிழமையில் அது பழையபடி பச்சைப் பசேலென வளர்ந்தது. நெற்கதிராகியபோது அதைக் கண்ட இரமணகிரியின் மகிழ்ச்சிக்கு அளவே யில்லை. திருகோணமலையிலிருந்து தம்பலகாமத்திற்கு பேருந்தில் வரும்போது வீதியின் இருபுறமும் வயல் வெளிகளிலே நெற்கதிர்களை இரமணகிரி கண்டிருக்கிறான். ஆனால் தன் சொந்த வயலில் விளைந்த நெற்கதிருக்கு அவை ஈடாகுமா? அதுவும் முதன் முதலில் விளைந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெற்கதிரின் மணிகள் அல்லவா? ஆசையோடு குனிந்து கதிர்களை அணைத்து முத்தமிட்டான். கடவுளே! திருக்கோணேஸ்வரத்தானே, இந்த விளைச்சல் நீ எங்கள் குடும்பத்துக்குத் தந்த பரிசாக நினைக்கிறேன். விளைஞ்சால் மட்டும் போதாது உருப்படியாக இது வீட்டுக்கு வந்து சேர வேணும் என மனதார வேண்டி நன்றி கூறினான்.

இரமணகிரியின் மனம் பூரிப்பிலே மிதந்தது. தேயிலைத் தோட்டத்திலே காலங்காலமாய் வாழ்ந்து யாரோ ஒரு முதலாளிக்கு உழைக்கும் கூலியாய்த் தோட்ட லயத்தில் நிரந்தர ஏழையாய் வாழ்ந்து மடிந்து தேயிலைச் செடிக்குப் பசளையாகும் சராசரி மலையகத் தமிழரின் வாழ்வின் அவலநிலையை எண்ணிப் பார்த்தான். இன்று நானோ காணி நிலமொன்றின் சொந்தக்காரனாகிப் பயிர் விளைச்சலையும், அல்லவா கண்ணாரக் கண்டிருக்கிறேன். மலையகத்துத் தமிழர்கள் எல்லோர்க்கும் அந்தப் பாக்கியம் கிடைக்க வேண்டும். நாட்டுப் பிரசாவுரிமை கூட பலருக்கு இல்லை. இந்த இலட்சணத்திலே சொந்தக்காணியா? மலையகத்துச் சராசரித் தோட்டத் தொழிலாளர்களில் எத்தனை பேருக்குச் சொந்தக்காணி மலையகத்திலே உண்டு? இந்தக் கேள்வியைச் சத்தமாகக் கேட்டால் பெரும்பாலானோர் அவ்விடத்தை விட்டே ஓடிவிடு வார்கள். மெதுவாக அணுகிக் கேட்டால் பலர் மறுபக்கம் பார்ப்பார்கள். தனிப்பட்ட முறையில் எவரையாவது கேட்டால் இரு கையையும் விரித்து மேலே பார்த்து, "ஆண்டவனுக்கே வெளிச்சம்" எனச் சொல்லாமல் சொல்லுவார்கள்.

இரமணகிரி தனது மனமகிழ்வை நீண்ட கடிதத்தில் எழுதி வீட்டுக்குப் போட்டான். எழுதிய கடிதத்திற்குப் பதில் வந்து தபாற்காரன் மணியை அடிப்பது போன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சத்தம் கேட்டுத் திடுக்குற்றான். அப்போதுதான் தான் கனவு கண்டதைத் தெரிந்துகொண்டான். காலை உணவை முடித்துவிட்டு வீட்டுத் திண்ணையின் சுவரோரம் சாய்ந்த படி பழைய நினைவுகளில் மூழ்கிய வேளையிலேதான் திடுக்குற்றுக் கண்விழித்தான். எழும்பிச் சோம்பல் முறித்தபடி நேரத்தைப் பார்த்தான். மதியம் பன்னிரண்டு மணியாகியிருந்தது.*

*"இன்று மத்தியானம் என்னத்தைச் சமைப்பது?" என்று யோசித்த இரமணகிரி பின் மனதைத் திடப்படுத்தியபடி சமையலை ஒருவாறு முடித்திருந்தான். அப்போதுதான் அவனின் மனதிலே ஒரு கேள்வியெழுந்தது. வழமையாக வீட்டிலிருந்து வரும் கடிதமெல்லாம் முன்பு தங்கை காவேரி எழுதினாள். இப்போது சில மாதங்களாகத் தங்கை எழுதுவதில்லையே, ஏன்? என்ற சிந்தனை மனதிலே ஓடியது. அம்மாதான் எழுதுகிறா, பொதுவாக எல்லோரும் நலமே என்றுதான் கடிதம் வருகிறது. வீட்டுப் புதினங்கள் பற்றியெல்லாம் விலாவாரியாக எழுதும் அம்மா காவேரியைப் பற்றித் தனியாக எதுவும் இல்லை, என்றே துணிவாக எழுதுகிறா. அப்படியாயின் காவேரி அங்கு வீட்டிலே என்னதான் செய்கிறாள்? நாலுமாதமாய் அம்மா எழுதும்போது இவள் மட்டும் அதிலே ஒருவரி கூட எழுதவில்லையே. என்மீது ஏதும் கோபமா அன்றி உண்மை யிலேயே நேரமில்லையா? முன்பெல்லாம் தோட்டத்திலே கொழுந்து பறிக்கப் போவாள். இப்பொழுது அதுகூட இல்லை. லயத்திலே சும்மாவிருந்து சமைத்துச் சாப்பிடுறதை விட றேடியோ கேட்பாள். இதைவிட வேறென்ன வேலை வேண்டிக்கிடக்கிறது இவள் காவேரிக்கு? இரமணகிரியின் மனம் நாலாதிசையிலும் சுழன்று சிந்தித்தது. பதிலில்லாத தால் அடுத்த கடிதத்திலே இதைப் பற்றி விளக்கமாய் எழுதவேண்டும் எனத் தீர்மானித்தான்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமநலத் திணைக்களத்திலிருந்து ஓர் உத்தியோகத் தருடன் உள்ளூர் கமநல உத்தியோகத்தரும் சேர்ந்து வயலைச் சுற்றிப் பார்த்தார்கள். இரமணகிரியுடன் பலப்பல விடயங்களைப் பற்றிப் பேசினார்கள். தொழில் நுட்ப ஆலோசனைகளை வழங்கியபோது அறுவடை பற்றித் தீர்மானித்தார்கள். முற்றிய நெற்கதிர்களில் நன்கு கொழுத்த கதிர் ஒன்றை வெட்டித் தமது மாதிரிக்காகக் கமத் திணைக்களத்திற்கு எடுத்துச் சென்றார்கள்.

நாட்கள் பல ஓடி மறைய அறுவடையும் வந்தது. சிவராசா மட்டுமல்லாது அக்கம்பக்கத்து வயற்காரர்களின் ஒத்தாசையுடன் கூலிக்கும் சிலரைப் பிடித்து அறுவடை முடிந்தது. முதலில் நான்கு மூடை நெல்லை வீட்டிற்கு எடுத்துச் சென்ற இரமணகிரி மீதியை வயலில் வைத்தே மொத்த விலைக்கு விற்றான். மொத்த வியாபாரி ஒரு பார ஊர்தியிலே நெல் மூடைகளை ஏற்றும்போது பார்க்கச் சிறிய அளவு போலத் தோற்றமளித்தது. ஆனால், அவை விலையாகப் பார்க்கும்போது பெரிய தொகையாகவிருந்தது. அதில் விதை நெல், மருந்து, கூலி, உரம் என்று கணக்குகள் போக மிஞ்சியது சில ஆயிரங்களே. கையிலே இத்தனை ஆயிரங்களைச் சுளையாக வாங்கியபோது ஏற்பட்ட இன்பத்திற்கு இணை ஏதுமில்லை.

போன வருடம் சேனைப் பயிர் விதைத்தபோது, "ஏதோ விளைந்தது கொஞ்சம் வீடு வந்தது சேர்ந்தது" என்றே இரமணகிரி நினைத்திருந்தான். அவற்றை ஆசையோடு வீட்டிற்குக் கொண்டுபோய்க் காட்டியபோது எல்லோரும் அதிசயப்பட்டார்கள். பெருமைப்பட்டார்கள். "டேய் இரமணகிரி எப்பிடியெடா இது மாதிரி விளைகிறது? யாருடைய கண்ணும் படக்கூடாது" என்றுகூடப் பேசிக் கொண்டார்கள் வீடு தேடி வந்த நெருங்கிய உறவினர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*விளைஞ்ச கொஞ்சநஞ்சச் சேனைப் பயிரை விற்காமல் அப்படியே வீட்டிற்குக் கொண்டுபோனதால் மருதம்மா "ஏன்டா இரமணகிரி இதுகளை வித்த காசு இல்லையா?" எனக் கேட்டாள். இரமணகிரிக்குச் சிரிப்புத் தாங்க முடியவில்லை. "இல்லையம்மா விளைஞ்சதே இவ்வளவு தான். இதை வித்து என்ன வரப்போகுது. அதைவிட நாமளே சாப்பிடலாம் தானே. அதுதான் சுமந்து கொண்டு வந்தேன்" என்றான் இரமணகிரி. போன வருடத்து ஞாபகச் சுழி, அவனை இழுத்துச் செல்ல, அதிலிருந்து மீண்டுவந்த இரமணகிரிக்கு அப்போதுதான் தான் வீட்டுத் திண்ணையில் இருப்பது தெரிந்தது.*

*"அறுவடை செய்யவிருக்கிறேன்" என்று கடிதம் போட்டிருந்தான். ஆனால் விளைந்த நெல்லையும் விற்ற காசையும் கொண்டுபோய் காட்டும்போதுதான் வீடே மகிழ்ச்சியடையும். பொதுவாகவே மலையடிவாரத்திலிருந்து மேலே ஒரு சிறு வாகனம் வரும் சத்தம் கேட்டாலே போதும், முழு லயமுமே எட்டி எட்டி வேடிக்கை பார்க்கும். ஏதாவது வந்தால் போதும், உடனேயே அச்செய்தி லயங்களுக்குள் மட்டுமல்ல, மலைப்பிரதேசம் எங்கும் காட்டுத்தீயைப் போலப் பரவிவிடும். நல்ல செய்தியோ, கெட்ட செய்தியோ அது பரவும் வேகத்தை எவரும் கணக்கிட முடியாது. லயங்களிலே வாழும் வாழ்க்கை முறைக்கும் வயல், தோட்டம் என விவசாயம் உள்ள இடத்து வாழ்க்கை முறைக்கும் தலைகீழ் வித்தியாசமுண்டு. இதை நினைத்துப் பார்த்தபோது இரமணகிரிக்குச் சிரிப்பும் வியப்பும் வந்தது.*

*தபாற்காரனின் மணிச்சத்தம் கேட்டு வாசலுக்கு வந்த இரமணகிரியிடம் கடிதமொன்றைத் தபாற்காரன் நீட்டினான். மருதம்மா எழுதிய கடிதத்தைப் பிரித்து வாசித்தான். "தம்பி இரமணகிரி நெல்லை அறுவடை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்போறேன் என எழுதிய கடிதம் கிடைத்தது. ரொம்பச் சந்தோசம். அறுவடையைப் பார்க்க ஆசையாயிருக்கு. இன்னும் இரண்டு நாளில் நாம இரண்டு பேரும் தம்பலகாமகத்திற்கு வருகிறோம். மீதி நேரில்...'' என்று புறப்படும் அவசரத்திலே தாய் சுருக்கமாய் எழுதியது கண்டு இரமணகிரிக்கு கடும் அதிர்ச்சி ஏற்பட்டது.

கடிதம் எழுதிய திகதியுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் மூன்று நாட்களுக்கு முன் அவர்கள் இங்கு வந்து சேர்ந்திருக்க வேண்டும். ஆனால் வந்து சேரவில்லை. அப்படியாயின் என்ன நடந்தது? வரும் வழியிலே ஏதும் நடந்திருக்கலாம். இதை எங்கே போய் யாரிடம் கேட்பது? முதலில் கடிதத்தின்படி சரியான திகதியில் புறப்பட் டார்களா என்று தெரிய வேண்டுமே. என்ன செய்யலாம் என மூளையைக் குழப்பாமல் ஆறுதலுக்கு யாரிடமாவது கேட்டு விசாரித்தால்தான் முதலிலே மனம் ஆறுதலடையும் என நினைத்த இரமணகிரி, பக்கத்து வயற்காரரான சிவராசா அண்ணரிடம் சென்று விசயத்தைச் சொன்னான். ஆனால் சிவராசா அண்ணை பதட்டமில்லாமல் சொன்னார், "தம்பி முதல் வேலையா இரண்டு பேரும் அட்டனிலிருந்து எப்போது வந்தார்கள் எண்டு அறிய வேணும்.''

இரமணகிரிக்கு இதைக் கேட்டபோது சரியெனப் பட்டது. இருவரும் உடனடியாகவே தம்பலகாமத் திலிருந்து தொலைபேசியில் அட்டனுக்குத் தொடர்பு கொண்டார்கள். அட்டனில் தெரிந்தவர் ஒருவர் தோட்டத்திற்குச் சென்று வீட்டில் விசாரித்துவிட்டு வந்து தொடர்பு கொண்டார். "தகப்பன் சண்முகமும் தாய் மருதம்மாவும் நாலு நாட்களுக்கு முன்னமே போய்விட்டார்கள். இன்னும் வந்து சேரவில்லையா?'' எனக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டார் தொலைபேசியில். இதைக் கேட்டதும் இரமணகிரிக்குத் தலை சுற்றியது.

நிலமையைப் புரிந்துகொண்ட சிவராசா அண்ணை முதுகில் தட்டியபடி "தம்பி பதட்டப்படாமல் பொலீசுக்குப் போவம்..." என்றார். இரமணகிரிக்கு அழவேண்டும் போலிருந்தது. "அண்ணை இப்ப என்ன செய்யுறது...?" என இரமணகிரி நா தழுதழுக்கக் கேட்டான்.

"இரமணகிரி! நீ பயப்படாதை. இரண்டு பேரும் பாதுகாப்பா இருப்பினம். இளம் ஆக்களுக்குத்தான் பயம். இவையள் பற்றிப் பயப்படத் தேவையில்லை" என்று ஆறுதல் வார்த்தைகளோடு காவல் நிலையத்திற்குச் சிவராசா அண்ணை இரமணகிரியைக் கூட்டிச் சென்றார்.

அங்கு கடமையிலிருந்த காவல்துறையினருக்குத் தமிழ் தெரியாது. ஒருவர் மட்டும் இரமணகிரியின் முறைப்பாட்டை அரைகுறையாக விளங்கிக் கொண்டார். முறைப்பாட்டைச் சிங்களத்தில் மட்டும் எழுதிவிட்டுக் கீழே கையெழுத்திடுமாறு கேட்டார். சிங்களத்தில் ஒரு சொல்லுக் கூடத் தெரியாத இரமணகிரியும் சிவராசா அண்ணையும் ஒருவரையொருவர் பார்த்து விழிபிதுங்கி நின்றார்கள். உடனே பக்கத்திலே தேநீர்க்கடை வைத்திருந்த தமிழர் ஒருவரைக் கூட்டிவந்து மொழிபெயர்த்துச் சொன்ன போதுதான் விசயமே புரிந்தது. கையெழுத்திட்டபோது, "திருகோணமலைக் காவல் நிலையத்தில் சென்று விசாரிக்கவும்" எனச் சொன்னார்கள்.

அங்கே சென்று கேட்டபோது "இரண்டு பேரைப் பிடிச்சிருக்கிறோம், வந்து பார்" என்றார் இன்ஸ்பெக்டர். கூண்டுக்குள் எட்டிப் பார்த்தபோது தாயும் தகப்பனும் நிலத்திலே படுத்திருந்தார்கள். இரமண கிரியைக் கண்டதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய் மருதம்மா வாய்விட்டழுதாள். இரமணகிரிக்கோ அழுகை தொண்டையை அடைத்தது. தகப்பன் சண்முகமோ சோகமே உருவாக நிலத்தில் தலை குனிந்தபடியிருந்தார். சிவராசா அண்ணை உடனே "என்ன நடந்தது...?" என மெதுவாகக் கேட்டார்.

"திருகோணமலையிலை வந்து பஸ்சிற்கு நிண்டோம். பொலிஸ்காரன், அடையாள அட்டையிருக்கா எண்டு கேட்டான். பையுக்குள்ளே பார்த்தால் அது இல்லை. எங்கே போறாய், எங்கிருந்து வாறாய் எண்டு துருவித்துருவி விசாரிச்சான். அடையாள அட்டையை வீட்டிலை விட்டிருக்க வேணும் என்று சொன்னபோது இங்கே கொண்டுவந்து அடைச்சிட்டாங்கள். உன் அப்பா நோயாளி எண்டு சொல்லியும் அவங்களுக்கு விளங்கவில்லை போலை..." என்று தாய் மருதம்மா சொல்லியழுதாள்.

"சரியம்மா அவங்களோடை கதைச்சுப் பார்ப்போம்" என்று தாய்க்கு ஆறுதல் சொன்ன இரமணகிரிக்கு காவல்துறை மீது கடும்கோபமும் ஆவேசமும் ஏற்பட்டன.

"இவங்களைச் சும்மா விடக்கூடாது" என்று இரமணகிரி பல்லை நெருமினான். பக்கத்தில் நின்ற சிவராசா அண்ணை, "இரமணகிரி, முள்ளுக்கு மேலை சேலை விழுந்திருக்கு. அதைப் பக்குவமாய்த்தாய் எடுக்கவேணும். இதுவும் அது மாதிரித்தான். ஆத்திரம், அவசரம் காட்டாமல் பக்குவமாய் வெளியே இவையளை விடுவிக்க வேணும்" என்றார்.

முகத்திலே தெரிந்த ஆவேசத்தை அடக்கிக்கொண்ட இரமணகிரி, "பொறுப்பதிகாரியோடு மனம் விட்டுப் பேசினான். மன்றாடிக் கேட்டபோது தம்பலகாமத்திற்குத் தொலைபேசியில் பேசினான். கடைசியில் மனம் மாறிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பதிகாரி, "இனிமேல் அடையாள அட்டை யில்லாமல் திரியக்கூடாது" என்று எச்சரித்தபின் கூட்டிச் செல்ல அனுமதித்தான்.

அப்பாவும், அம்மாவும் என்னென்ன கஷ்டங்களை அனுபவித்தார்களோ என நினைத்தபோது இரமணகிரிக்குத் தாங்க முடியாது துக்கம் தொண்டையை அடைத்தது.

சிவராசா மட்டும் சில ஆறுதல் வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டு நடந்தார். அதுவே தேறுதலாகவும் அந்த நேரத்திலே மூவருக்கும் நடந்து செல்வதற்குக் கூடத் தெம்பாகவும் இருந்தன.

இரமணகிரி மனதைத் திடப்படுத்திவிட்டு, "அப்பா சாப்பிட்டீங்களா..." எனத் தயங்கியபடி கேட்டான். அதற்குப் பதில் சொல்ல முடியாது சண்முகம் சங்கடப் படுவதைக் கண்ட மருதம்மா, "அதை ஏன்டா தம்பி கேக்கிறாய்? அந்தக் கண்றாவியை எப்படிச் சொல்லுறது? ஒரு நாளுக்கு இரண்டு நேரம் கூட ஒழுங்காகச் சாப்பாடு தண்ணி தரவில்லை" என்றாள் கலங்கிய கண்களோடு. இதைக் கேட்ட இரமணகிரிக்கு ஆத்திரம் பொங்கி யெழுந்தது. "என்ன செய்யுறது இப்பவாவது விட்டாங்களே போதும் அது" எனத் தன்னையறியாமலே இரமணகிரி பேசியபடி நடந்து வந்தான். இதற்கிடையில் அங்கே ஒரு சாப்பாட்டுக்கடை இருப்பதைக் கண்ட சிவராசா அண்ணை எட்டிப் பார்த்துவிட்டு, "தம்பி சாப்பிட இங்கே போவம்..." என்று சொல்லி அந்தக் கடைக்குள் நுழைய, ஏனையோர் பின்தொடர்ந்தார்கள்.

இரமணகிரியின் கமத்திற்கு அனைவரும் வந்துசேர இரவாகிவிட்டது. அட்டனிலிருந்து புறப்பட்டபோது உடுத்த உடைகளுடன் நான்கு நாட்களாக முகம் கூடக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கழுவாது அடைபட்டிருந்ததால் உடல் முழுவதும் அழுக்கும் வியர்வை நாற்றமும் கண்டிருந்தது. குளித்து விட்டு இரவு உணவுண்ட பின் உறங்கினார்கள். ஒழுங்கான நித்திரையில்லாமல் அலைந்து திரிந்ததில் இரமணகிரி படுத்தவுடனேயே ஆழ்ந்த நித்திரையானான். மகனின் வீட்டுக்கு வந்து சேர்ந்ததில் இனம் காணாத மகிழ்விலே சண்முகமும் மருதம்மாவும் காணப்பட்டனர். இதை ஒருவருக்கொருவர் காட்டிக் கொள்ளாவிடினும் அவர்களின் முகங்கள் காட்டிக் கொடுத்தன.*

*காவல் நிலையக் கூண்டில் வெறும் தரையில் படுக்க முடியாமல் இருவரும் அழுத கண்களோடு ஒருவரின் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு நித்திரை யின்றியிருந்ததை நினைத்துப் பார்த்தார்கள். "ஏதோ பெரிய தொகை இலஞ்சத்தை எதிர்பார்த்து நம்மளை இப்பிடி அடைச்சு வைச்சுச் சித்திரவதை பண்ணுறான். இல்லையென்றால் சிங்களம் தெரிஞ்சாலும் விட்டிருப்பான்" என்றெல்லாம் கூண்டுக்குள் இருந்தபோது இருவரும் ஒருவருக்கொருவர் பேசிப் பேசிப் பொழுதைக் கழித்திருந்தார்கள்.*

*அட்டனில் கடைக்குட்டியான கிருஷ்ணியையும், காவேரியையும் தேவிகாவின் பாதுகாப்பில் லயத்திலே விட்டு வந்தோம். நாம இங்கே இவனிடம் மாட்டுப் பட்டால் அவர்களின் கதி என்னவாகும்? அதுவும் இரமணகிரி வீட்டிலே இல்லாத நேரத்தில் நிலமை எப்படியிருக்கும், என்றெல்லாம் நினைத்த போது இருவருக்கும் கவலையைத் தவிர வேறெதுவுமே வரவில்லை. மகன் இரமணகிரியும் சிவராசா அண்ணையும் வந்து சேரும்வரை சண்முகத்திற்கும் சரி, மருதம்மாவுக்கும் சரி, வெளியே வருவோம் என்பதில் துளியளவும் நம்பிக்கை இருந்ததில்லை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குள் காவல்துறையினர் ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொருவராக வந்து வெவ்வேறு விதமான மிரட்டல்கள் விட்டுப் பார்த்தார்கள். காவலில் உள்ள சந்தேக நபர்கள் மிரட்டினால் கேட்டதைக் கொடுத்துவிடுவாங்கள், என்பது காவல் நிலையங்களிலே உள்ள பாரம்பரியம் போலும். இன்ஸ்பெக்டரிடம் மருதம்மா, “ஐயா எங்களிட்ட இப்ப கைவசம் இல்லாதது நீங்க கேக்கிற அடையாள அட்டை. எப்போதுமே இல்லாதது பணம். இல்லாததைக் கேட்டு ஏன் ஐயா அடைச்சிருக்கிறீங்க...? நாம என்ன செய்ய... நீங்களே சொல்லுங்க” என்று பரிதாபமாகக் கேட்டாள்.

இதைக் கேட்ட பொறுப்பதிகாரி கையைக் காட்டி, “பாக்கலாம்” என்பது போல் சென்றான். ஆனால் அங்குள்ள உயரதிகாரியோ, கையை அமர்த்திக்காட்டி “இப்போது வேண்டாம்” என்பது போல் தலையை ஆட்டிக் காட்டினான். அவனது பார்வையே சரியில்லாத ஒன்று. எப்போதும் சிகரெட் நாற்றமே அடிக்கும் அவனது முகம் எவனாவது இளிச்சவாயன் அகப்படமாட்டானா? என ஏங்குவதுபோல இருக்கும். “எங்க இரண்டு பேரையும், பிணையெடுக்க இரமணகிரியோ அல்லது எவராவது வரும்போது அவங்களிடம் கேட்டுப் பணம் பிடுங்குவாங் களோ?” என்று சண்முகம் மெதுவாக மருதம்மாவிடம் கூறியிருக்கிறார். ஆனால் கடைசியில் ஏதோ ஒரு விதத்தில் மனம் மாறி காசைக் கறக்காமலே ஆளை விட்டான், அதுவே போதும்.

அதே நேரம் சண்முகத்திற்கு இன்னோர் பயமும் ஏற்பட்டதுண்டு. “வயசான எங்களையே புடிச்சு உள்ளே வைச்சவனுக்கு இரமணகிரி மாதிரி இளந்தாரியைப் புடிச்சு உள்ளே வைக்க எவ்வளவு நேரம் ஆகும்...” எனப் பயந்தார். ஆனால், இதையெல்லாம் மருதம்மாவிடம் சும்மா கூடக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைத்ததில்லை. சொன்னால் அவ்வளவுதான், தானும் பயந்து மற்றவர்களையும் பயமுறுத்திவிடுவாள் என்ற பயம் வேறு அவருக்கு.

விடிந்து எல்லோரும் எழும்பி வயலைப் பார்த்தார்கள். மருதம்மாவுக்குப் பார்த்ததுமே மனசெல்லாம் நிறைந்து இனம் காணாத பூரிப்பிலே கண்கள் குளமாகின. அதை வெளிக்காட்டாது இரமணகிரியுடன் வயலின் வரம்பு மேலே நடந்து வந்தாள். “அம்மா, இது அறுவடை செய்த வெறும் வயல்தான். பத்துப் பன்னிரண்டு நாளைக்கு முன்பு வந்து பாத்திருந்தால் கண்கொள்ளாத காட்சிதான் அம்மா. நெல்லையும் வயலையும் பாக்கவேணுமே. அம்மாடி, அதை எப்பிடிச் சொல்லுறது. என் கண்ணே பட்டுவிடும் போலிருந்தது. நான்தான் நெல்லையும் காசையும் கொண்டு லயத்துக்கு வர இருந்தேன் என்று இரமணகிரி மன மகிழ்விலே வாயில் வந்ததையெல்லாம் வார்த்தைகளால் வார்த்தெடுத்தபடி வரம்பு வழியே, வழிகாட்டியபடி நடந்து வந்தான். சண்முகமோ மெதுவாக நிதானமாக நடந்து வந்தார். இவர்கள் நின்று பேசிக் கொண்டிருப்பதைக் கண்ட பக்கத்து வயற்காரர்கள் ஒவ்வொருவராக வந்து சேர்ந்தார்கள். பேசிக் கொண்டிருந்ததில் நேரம் போனதே தெரியவில்லை.

சண்முகம் வீட்டிற்கு வந்ததும் “தம்பி இரமணகிரி நாம இங்கே வந்து சேர்ந்ததை அட்டனுக்கு ரெலிபோனிலை சொல்லிவிடு. ஏனெண்டால் ரெலிபோன் எடுத்து எங்களைப் பற்றிக் கேட்டிருக்கிறாய். காவேரியும் கிருஷ்ணியும் பயந்து போயிருல்லாம்...” எனச் சொன்னார். மருதம்மாவும் கூட நின்று, “அதைத்தான் நானும் சொல்ல நினைச்சேன்...” என இழுத்தாள். இரமணகிரி யோசித்து விட்டு “அது சரி, ரெலிபோன் பண்ண அதை எடுக்கிறவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய் வீட்டில் சொல்லச் சிரமப்படுகிறான். பேசாமல் தந்தி அடிச்சு விடுகிறேன்" என்றான் முடிவாக. உடனடியாகவே தபால் நிலையத்திற்கு விரைந்து தந்தியை அனுப்பினான். வீட்டுக்குத் தேவையான சாமான்கள் பலவற்றையும் வாங்கி வந்தான். சிவராசா அண்ணையிடம் மிதிவண்டியை இரவல் பெற்றுக்கொண்டு சென்றதால் உடனடியாகவே வீட்டுக்குத் திரும்பிவிட்டான். இல்லையென்றால் இரமணகிரி பாடு நடைராஜாதான்.

## 3

**அ**ந்திக்கருக்கல் என்பார்களே, அது தெரிய ஆரம்பித்தது. பக்கத்து மலைகூட மங்கலாகத்தான் தெரிந்தது. வீதிகள் சற்றுப் பரபரப்பாகவேயிருந்தன. தேயிலைக் கொழுந்து பறித்துவிட்டு வீட்டுக்குப் போவோரும் வீடுகளிலிருந்து கடைகளுக்குப் போவோரும் எனச் சந்தடி காணப்பட்டது. ஆட்களை அடையாளம் காணாதளவுக்கு இருட்டாகியது. என்னவோ தெரிய வில்லை. இன்று நேரத்திற்கே இருட்டாகி விட்டது, பகலும் கூட வெயில் குறைவுதான்.

முத்தையாபிள்ளையின் கடையிலே வாயிலை அடைத்தபடி சனக்கூட்டம் இருந்தது. கிருஷ்ணி கடையை நோக்கி நடந்து வந்தாள். காவேரி, "தேயிலையும் உப்பும் வாங்கி வா" என்று அனுப்பியிருந்தாள். இன்றுதான் முதன்முதலாக முத்தையாபிள்ளையின் கடைக்குக் கிருஷ்ணி போகிறாள். அந்தப் பாதையால் போகும்போது இதுதான் அவரின் கடை என்று தெரியும். ஆனால் கிருஷ்ணி ஆளை நேரிலே பார்த்ததில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைக்குள் ஒருவர் நிற்கிறார். கொஞ்சம் வயதான தோற்றம், நரைத்த முடிகள், தொப்பை வயிறு மற்றும் காதிலே ஒரு பென்சில் சொருகியிருந்தது. ஒரு கடை முதலாளிக்குரிய தோரணையில் வாடிக்கையாளர்களிடம் கேட்டு வியாபாரம் செய்து கொண்டிருந்தார். உள்ளே எரிந்துகொண்டிருந்த பெற்றோல்மாக்ஸ் வெளிச்சத்தில் கடை தெளிவாகத் தெரிந்தது. படியிலேறிய கிருஷ்ணி நின்றவர்களிடையே புகுந்து தலையை நீட்டினாள். யார் யாருக்கு என்னென்ன சாமானுகள் குடுக்க வேண்டும் என்பதை ஞாபகத்திலே வைத்துக்கொண்டு ஓடியாடிச் சாமான்களை நிறுத்துக் கட்டிக் கொண்டிருந்தார் முத்தையா பிள்ளை. கிருஷ்ணியைக் கண்டதும் திரும்பத் திரும்பப் பார்த்தார். அருகே வந்தபோது, “பிள்ளை உனக்கு என்ன வேணும்?” என்று கேட்டார். கிருஷ்ணி கையில் வைத்திருந்த துண்டை நீட்டினாள். வாங்கிப் பார்த்தார். “கால் கிலோ தேயிலை, அரைக்கிலோ உப்பு” என வாசித்தார். அதில் எழுதிய எழுத்தை வைத்து ஊகித்துவிட்டு, “நீ சண்முகத்தின்ரை கடைசி மகளோ?” எனக் கேட்டார். திகைத்துப்போன கிருஷ்ணி “ஆம்” என்பது போல தலையை அசைத்தாள்.

“வழக்கமா அம்மாதானே வருவா...?” என்று முதலாளி முத்தையாபிள்ளை கேள்வியை நீட்டினார். கிருஷ்ணிக்குப் பயம் பிடித்தது. சாமான் பட்டியல் துண்டைப் பாத்தவுடன் என்னை யார் எண்டு அடையாளம் கண்டுவிட்டாரே. என்னென்னவெல்லாம் கேட்கப் போறாரோ தெரியாது என எண்ணித் திருதிருவென விழித்தாள். உப்பையும் தேயிலையையும் நிறுத்தபடி முத்தையாபிள்ளை திரும்பவும், “அம்மா வரேல்லையா...?” எனக் கேட்டார். தெரியாததுபோல் கிருஷ்ணி நின்றாள். “ஏன் எங்கே போட்டா...” என முதலாளி கேட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருஷ்ணி, இண்டைக்கு இவர் விளக்கம் அறியாமல் என்னை விடமாட்டார் போல இருக்கு என நினைத்துக் கொண்டாள். “அப்பாவும் அம்மாவும் அண்ணனோட கமத்துக்குப் போட்டினம். அதுதான் அக்கா என்னை அனுப்பினா...” என்று கிருஷ்ணி வாயைத் திறந்தாள். இதற்குள் மற்றவர்களின் பொருட்களைக் கொடுத்தனுப்பி விட்டு கிருஷ்ணியுடன் மட்டும் பேசிக் கொண்டிருந்தார். “ஏன் பிள்ளை, உன் அண்ணன்காரன் எப்போ வாறான் ஊருக்கு?” எனக் கேட்டார்.

“அண்ணாதான் வர இருந்தார். அம்மாவும், அப்பாவும் வயல்ல அறுவடை பாக்கப் போயிருக்கினம்...” என கிருஷ்ணி வார்த்தைகளை விழுங்கினாள்.

“ஓ அப்போ அறுவடைக்காலமா இப்ப நடக்குது. நம்மளுக்கு மலைதான் வாழ்க்கை. மலையை முகில் மூடினமாதிரி நாட்டிலை என்ன நடக்குதென்றே தெரியாது” என்று கூறியபடி பொருட்கள் இரண்டையும் கொடுத்தார். இனியும் நின்றால் இந்த மனிசன் மேலும் மேலும் கிண்டிக் கிளறிக் கேட்டபடியே இருப்பார் என்று நினைத்துவிட்டு காசைக் கிருஷ்ணி நீட்டினாள். முத்தையாபிள்ளையும் “சரி போட்டு வா பிள்ளை. இருட்டு கவனமாய்ப் போ” என்று மனமுருகி வழி அனுப்பினார்.

வெளியே கிருஷ்ணி வந்தபோது நன்கு இருட்டி விட்டது. கீழ் மலையிலுள்ள கூட்டுறவுச் சங்கக் கடையிலே கூப்பன் சாமான்களை வாங்கிய பல பெண்கள் சென்றார்கள். அவர்களைக் கண்டதும் கிருஷ்ணிக்கு நெஞ்சினிலே ஒரு நிம்மதி வந்தது. கிட்டப் போய்ப் பார்த்தபோதுதான் தெரிந்தது. எல்லோரும் அக்கம் பக்கத்து லயன்களைச் சேர்ந்த தெரிந்தவர்கள் என்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களோடு சேர்ந்து நடந்துவந்ததால் பயமின்றிக் கிருஷ்ணி காணப்பட்டாள். லயத்து வாசலுக்கு வந்தபோது ஒரு ஆண் லயத்தை விட்டு வெளியே வந்தான். கூட வந்த பெண்களிலே ஒருத்தி, "யாரடி இது ஆம்பிளையில்லாத லயத்திலை இந்த நேரத்திலை ஒரு ஆள்... யார் இது...?" என்று சத்தமாகச் சொன்னாள். இன்னுமொருத்தி, "அடடே இது தந்தி குடுக்கிற பியோன்" என்றாள். அப்பொழுது அந்த நபர் "தந்தி வந்தது குடுத்திருக்கிறேன்" என்றார் சுருக்கமாக.

"இந்த ஆள்தான் வழக்கமா தந்தி குடுக்கிறவர். இண்டைக்கு பிந்திப் போச்சுது" என்று இன்னுமொருத்தி சொன்னாள்.

கிருஷ்ணி லயத்தினுள் வந்தபோது அக்கா காவேரி கையிலே தந்தியை வைத்திருந்தாள். கிருஷ்ணியைக் கண்டவுடன் "அம்மாவும் அப்பாவும் தம்பலகாமத்துக்குப் போய்ச்சேர்ந்ததாய் அண்ணை தந்தி குடுத்திருக்கிறார். நேற்றுத்தான் வந்ததாய் இருக்கு. அப்ப இடையிலை மூண்டு நாள் எங்கே போயிருப்பினம்? இதைத்தான் யோசிக்கிறேன்" எனச் சொன்னாள். அங்கிருந்த தேவிகா தான் காவேரியக்காவின் மனதில் இந்தச் சந்தேகத்தைக் கிளறியிருக்கவேணும், இது கிருஷ்ணியின் ஊகம்.

காவேரியின் அகத்திலே கிளர்ந்தெழுந்த சந்தேகங்களும் பீதியும் முகத்திலே தெரிந்தன. அதைப் பார்க்கப் பார்க்கக் கிருஷ்ணிக்கு ஒருவகைப் பயம் ஏற்பட்டது. தன் மன ஆறுதலுக்காக, "தேவிகா அக்கா, உனக்கு ஏன் இந்த வேலை? சின்னச் சந்தேகத்தையே பெரிசாக்கி எல்லாரையும் கலக்கியடிக்கிற அக்காவைக் குழப்பியிருக்கிறாய்" எனத் தேவிகாவைச் சீண்டினாள். அதுவரை வாளாவிருந்த தேவிகா, "அடியே கிருஷ்ணி இங்கே பார், வந்த தந்தியைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி நான் இதுவரை வாயே திறக்கேல்லை. இவள் காவேரி தான் அப்பிடியிப்படி இருக்குமோ எண்டு கேட்டாள். அவ்வளவுதான்” என்றாள்.

சிறிது மௌனத்தின் பின்னர் காவேரி, “சரி இன்னும் கொஞ்ச நாளில் எல்லாரும் சேர்ந்து வரேக்குள்ள கேட்டு அறியலாம், அதுவரை மண்டையைப் போட்டுப் பிய்க்க வேண்டாம்...” என்று சொல்லிவிட்டுத் தன் அலுவல்களைப் பார்த்தாள். அப்போது காவேரியின் உள்ளத்திலே, “எனக்கு நானே மன ஆறுதல் சொன்ன மாதிரியிருக்குதே” என்ற எண்ணம் மெல்ல ஊசலாடியது. என்ன செய்வது நாட்டு நிலமை அப்படியிருக்கே. தமிழன் ஒருவனுக்கு வீட்டுக்கு வெளியேயும் சரி வீட்டுக்குள்ளேயும் சரி, உயிருக்கு உத்தரவாதமில்லாத நிலமையிலே நாடிருக்குது. காவல்துறை, ஆயுதப் படைகள் அல்லது ஆயுதப்படை என்று சொல்லி மிரட்டுவோர் என்று எவரின் கையிலாவது அப்பாவித் தமிழன் மாட்டுப்பட்டால் அவ்வளவுதான். ஒன்று உயிர் போகும் அல்லது உள்ளுக்குப் போட்டுவிட்டால் இலட்சக்கணக்கில் காசை இறைக்க வேண்டிவரும். இல்லையென்றால் சித்திரவதையில் இறக்க வேண்டிவரும்.

நிலமை இவ்வளவுக்கு மோசமாயிருக்கச் சிங்களம் தெரியாத இரண்டு அப்பாவித் தமிழர் முன்பின் தெரியாத இடத்துக்கு கைச்செலவுக்கு மட்டும் சொற்ப காசுடன் போவது எவ்வளவு ஆபத்து எனத் தெரியும். இரண்டு பேரும் பயணம் போகும்போது சொல்ல வேண்டும் என மனம் துடித்தது. ஆனால் ஏனோ துடித்த அளவுக்கு மனம் தூண்டவில்லை. சொல்லிவிட்டால் சில நேரம் பயணம் போகிறவர்களைப் பயமுறுத்திவிட்டது போல் ஆகிவிடும். அடுத்தது உள்ளூரில் அட்டன் நகரையே ஒழுங்காகத் தெரியாத இரண்டு பேரும் துணிந்து வந்த பயணம் தானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்புக்கு நான் வேலைக்குப் போனபோது வழிக்கு வழி, “கவனம் பிள்ளை, கவனம் பிள்ளை” என்று சொல்லி வழி அனுப்பிவைத்த அப்பாவும், அம்மாவும் புறப்படும் போது நான் எப்படி அவர்களுக்குப் புத்தி சொல்வது? காவேரியின் மனம் நாலாதிசையிலும் சிந்தனையிலே உழன்றது.

தேவிகா அருகிலே வந்து அமர்ந்தபோதுதான் காவேரி விழித்துக் கொண்டாள். அதுவரை சிந்தனை வசப்பட்டிருந்ததை உணர்ந்தாள். “அடியே காவேரி, தெரியாமத்தான் கேக்கிறேன், உனக்கு இந்தத் தோட்டம், லயத்து வாழ்க்கை எல்லாம் உண்மையில பிடிச்சிருக்கா? இல்லை இங்கேயே பிறந்தாச்சு வேறை வழியில்லை, வாழ்ந்துதான் ஆக வேணும் எண்டு நினைக்கிறியா?” எனத் தேவிகா புதிர்போல வினாவொன்றைக் கேட்டாள். தேவிகாவின் முகத்தையே காவேரி பார்த்துப் பார்த்துச் சிரித்தாள்.

சிரித்தது தேவிகாவுக்குப் பிடிக்கவில்லைப் போலும். மேலும் சீண்டினாள். “சரி என்னதான் நிசமாய் நினைக்கிறாய்?” எனக் கேட்டாள். அதற்குள் அங்கு திடீரென வந்து தலையை நீட்டிய கிருஷ்ணி “என்ன திரும்பவும் கொழும்புக்கா போறீங்க?” என்று கேட்டாள். காவேரிக்கு வந்த சினம் சீறியது. “போடி, போய் பாக்கிற வேலையைப் பார்...” எனத் தங்கையைக் காவேரி விரட்டினாள். ஏதோ ஒரு விதத்திலே உண்மையைத்தான் தங்கை உணர்த்தியுள்ளாள் என்று காவேரியின் உள்மனம் பேசிக்கொண்டது.

தேவிகா விட்டபாடாய் இல்லை “அப்பிடி என்னடி மண்டையைப் போட்டுப் பிய்க்கிறாய்” என்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவேரிக்கு மனம் ஒரு நிலையில் இல்லை. "தேவிகா எதுக்கு இப்பிடிக் கேக்கிறாய்?" எனக் காவேரி கேள்வியைத் திருப்பினாள். பதில் தெரியாத தேவிகா, "சே இதை ஏன் இவளிடம் நான் கேட்டேன்?" என நினைத்தாள். இவள் தேவிகா எதையோ மனசிலை வைச்சுத்தான் இப்படியெல்லாம் கேட்கிறாள் எனக் காவேரி அனுமானித்தாள். சரி, இவள் என்னத்தை மனதில நினைச்சாளோ? என்றெல்லாம் நினைத்த காவேரி "சொல்லடி நீ என்ன நினைக்கிறாய்...?" எனக் கேட்டாள். தேவிகா திடீரெனச் சிரித்துவிட்டு, "மனதிலை வைச்சு ஒளிச்சுப் பேசமாட்டேன். உள்ளதைச் சொல்கிறேன். எனக்கு இந்த மலையும் லயத்து வாழ்க்கையும் வெறுப்பாயிருக்கு. வெளியே போய்ப் பிழைப்புத் தேடலாம் போலிருக்கு" என்று சொன்னாள்.

காவேரி குறுக்கிட்டு "தேவிகா என்னடி வெளி நாட்டுக்கா...? கொழும்புக்குப் போய்வரவே நகையை வித்தோம். இந்த இலட்சணத்திலை வெளிநாட்டுக்கா? அடிசக்கையடி, காசு எங்கேயிருந்து வருமாம்...?" எனப் பொரிந்து தள்ளினாள்.

அப்போது தேவிகா விழுந்து விழுந்து சிரித்தபடி, "நான் வெளியே எண்டு சொன்னது வெளிநாடல்ல, வெளியூர்" என்று சொன்னாள். காவேரி விடவில்லை. "அடியே கொழும்பை மறந்திட்டியா அதுக்குள்ள" என்று கேட்டாள். தேவிகா தைரியத்தை மனதிற்கொண்டு, "சரி ஏதோ ஒரு சந்தர்ப்பத்திலே எங்களுக்குச் சறுக்கினதுதான், அதுக்காக எல்லாம் அப்படியா? முயற்சி பண்ணுவோம், வேறு வழியில்லை. வழியை நாமதான் கண்டுபிடிக்கவேணும்..." என்று உபதேசம் செய்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவிகாவின் உபதேசம் காவேரிக்குக் கேட்கும்போது அலட்சியமாகவும் நினைத்துப் பார்த்தபோது அவசியமாகவும் தென்பட்டது. ஆனால் கொழும்புக்குப் போனதும் வெறுங்கையோடு திரும்பியதும் மறக்க முடியாதவொரு கெட்ட கனவாகவே காவேரியின் மனதிலே உறைந்திருந்தது. அதனால் என்னவோ மறுபடியும் புறப்படுவது என்பதை நினைத்துப் பார்க்கவே காவேரியால் முடியவில்லை. அப்பாவும் அம்மாவும் வீட்டில் நின்றிருந்தால் தேவிகாவின் அபிப்பிராயத்துக்குச் காரசாரமான பதிலடி உடனடியாகவே கிடைத்திருக்கும். “என்ன, நாங்கள் குமரிகள் இதைப் பற்றி மனம் விட்டுச் பேசியாவது எங்களுக்குள் ஆறுதல் கிடைக்குது. அம்மாவும் அப்பாவும் அப்பிடியில்லையே, அப்படியே பழைய முறையையே பின்பற்றுபவர்கள். சீர்தூக்கிப் பார்க்கத் தெரியாது. நாங்கள்தான் பக்குவமாய் எடுத்துச் சொன்னால் காது குடுத்தாவது கேட்பார்கள்.” இப்படியெல்லாம் காவேரியின் மனம் ஒரு தரம் சிந்தித்தது. தேவிகா திடீரென்று தோளிலே தட்டியபோதுதான் காவேரி திடுக்குற்று “நாம இரண்டு பேரும் வாயால பணியாரம் சுட்டு ஒண்ணும் நடக்காது. அம்மா, அப்பா வந்த பிறகு சொல்லிப் பாப்பம், அதைப் பக்குவமாய்” என்று முடித்தாள் காவேரி.

பிழைப்புத் தேடித் தோட்டத்துக்கு வெளியே போவது அப்படி ஒன்றும் சுலபமல்ல என்பது காவேரிக்கும் தேவிகாவுக்கும் நன்கு தெரிந்த உண்மையாகிவிட்டது.

காலைப் பனிமூட்டம் எங்கும் வியாபித்திருந்தது. கிருஷ்ணி பள்ளிக் கூடத்திற்குப் போகத் தயாராகிக் கொண்டிருந்தாள். தேவிகாவும் காவேரியும் சமையலறையில் இருந்தார்கள். திடீரென லயங்களினூடே அவலக் குரல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டன. உடல் பதறியபடி காவேரியும் தேவிகாவும் லயத்து வாசலுக்கு ஓடிவந்து எட்டிப் பார்த்தார்கள். "ஓடுங்கடா தப்பி எங்காவது ஓடுங்கடா... நிக்க வேண்டாம்" என்ற குரல்கள் தெளிவாகக் கேட்டன. "என்னடி இது என்ன நடந்தது...?" எனக் காவேரி கேட்க, "இது யாரோட குரல் அவலக்குரலாயிருக்கே..." எனத் தேவிகா பதில் சொல்லியபடி வெளியே முற்றத்தில் நின்று அக்கம்பக்கத்து லயங்களைப் பார்த்தாள்.

சில லயங்களிலிருந்து பெண்கள் சிறுவர்கள் மற்றும் ஆண்கள் ஒன்றாக ஓடிவந்தார்கள். ஓடிவந்தவர்களிடம் தேவிகா, "என்ன நடந்தது?" என்று கேட்டபோது, "என்னமோ தெரியலை. எல்லாரும் குளறிக்கொண்டு ஓடுறாங்க. பக்கத்துப் பெரிய மலை லயங்களை ராவோட ராவாக் கொளுத்திப்போட்டாங்களாம்" என்று பதில் கிடைத்தது. பதில் சொன்னவரே ஓடி ஓடிக்கொண்டே சொன்னார். இது போதாது என்று பக்கத்து லயன்காரி பரபரப்பாக ஓடிவந்து, "கேட்டியா நேத்து ராத்திரி பக்கத்து மலை லயத்துக்கு நெருப்பு வைச்ச அரசாங்க ஜீப் மாதிரி ஒண்டு இப்பத்தான் நம்ம மலைக்கு வந்ததாம்... அதுதான் பயத்திலை சனங்க ஓடுது போல" என்றாள். அதற்குள் உள்ளேயிருந்த கிருஷ்ணியும் லய வாசலுக்கு வந்து எட்டிப் பார்த்தாள்.

வெளி நிலைமையைப் பார்த்ததவுடன் கிருஷ்ணி உள்ளூரப் பயம்வந்தவள் போல், "அக்கா, அக்கா கதவைச் சாத்திவிட்டு உள்ளுக்கு வா. இல்லாட்டி ஓடுறவையோடை சேந்து ஓடுவம். இப்பிடி வாசல்ல நிண்டு இந்த நேரம் லயத்துக்கு ஆபத்தைத் தேடாதை அக்கா..." என்று கெஞ்சிக் கேட்டாள். கிருஷ்ணி சொன்னதில் உண்மையிருக்கு. ஆனால் அவளுக்கு முன்னால நம்ம பயத்தைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*காட்டலாமா? காவேரியினதும் தேவிகாவினதும் மனங்களிலே அவ்வேளை முளைவிட்ட கேள்வி அது. அப்பா, அம்மா பக்கத்தில இல்லாத வேளையிலே என்ன நடக்குமோ என்ற பயம் ஒருபுறம் மூளையைக் குடைந்தது. காவேரி திடீரென்று "வாங்கடி உள்ளே, ஊர் வம்பு எதுக்கு எங்களுக்கு..." என்று சொல்லியபடி கதவைப் பூட்டி விட்டாள். பயத்தினால் கிருஷ்ணி பள்ளிக் கூடத்துக்குப் போகவில்லை. அது மட்டுமல்ல, காவேரியோ தேவிகாவோ லயத்துக்கு வெளியேவரத் துணியவில்லை. வழக்கமாக உரத்த குரலிலே பேசுபவள் காவேரி, அவளே இனறு அடக்கி வாசிக்கிறாள். இதைக் கண்ட தேவிகாவும் கிருஷ்ணியும் பெட்டிப் பாம்பாகி விட்டனர். திடீரென மாலை நேரம் கதவு தட்டும் சத்தம் கேட்டதும், மூவரும் பயந்தே விட்டனர். அவர்களின் சகல நாடி நரம்புகளும் சில கணங்கள் செயலிழந்தன. கதவைத் திறப்பதா அல்லது "யாரது?" என்று கேட்டறிந்த பின் திறப்பதா என்பதில் முதலிலே இழுபறிப்பட்டார்கள். கதவைத் தட்டியவரும் குரலைக் காட்டவில்லை. மேலும், பதற்றத்தாலும் பயத்தாலும் தன்னையறியாமலே கிருஷ்ணி "யாரது கதவைத் தட்டுறது...?" எனக் கேட்டாள் நடுங்கிய குரலில்.*

*"அது நான்தான் லட்சுமி. கதவைத் திற புள்ளை" என்றொரு குரல் கேட்டதும் மூவருக்கும் நெஞ்சினிலே பால் வார்த்தது போலிருந்தது. தேவிகா கதவைத் திறந்ததும் லட்சுமி உள்ளே வந்தாள். காவேரி, "ஏனக்கா கதவைத் தட்டிப் பயமுறுத்தாமல் குரலைக் காட்டியிருக்கக் கூடாதா?" என்று கேட்டாள். லட்சுமியோ, "அடி நீ வேறை. நானோ பயத்திலை மெதுவாகக் கதவைத் தட்டினேன். குரலையும் காட்டவோ?" என்றாள் கைகளை உதறியபடி. தேவிகா புன்சிரிப்போடு, "விளக்கு வைக்கிற நேரம் பாத்து லட்சுமி வந்து வாசல் கதவைத் தட்டி உள்ளே வந்திருக்கிறா.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வம் கொழிக்கப் போகுது...” என்றாள். இதைக் கேட்ட மூவரும் பயத்தையும் மறந்து பெரிய சத்தமாகச் சிரித்தார்கள்.

லட்சுமி தேவிகாவையும் காவேரியையும் பார்த்து, “நிசமாத்தான் சொல்லுறேன். இண்டைக்கு இல்லாட்டி ஏதோ ஒரு நாள் உங்க வீட்டிலை லட்சுமி வந்து அமர்வாள். நானும் பாக்கத்தான் போறன். அப்ப செல்வச் செழிப்போடை இருப்பீங்கள்” என்று சொன்னாள். “லட்சுமியக்கா இதைச் சொல்லத்தான் கதவைத் தட்டினீயா? முந்தியும் இதைத்தானே சொல்லியிருக்கிறாய். அதே லயம், அதே வாழ்க்கை” என்றாள் கிருஷ்ணி. இதைக் கேட்டதும் மீண்டும் ஒரு முறை சிரிப்பொலி எழுந்தது. லட்சுமியின் வாய் ஓய்ந்தபாடாய் இல்லை, “என்றோ ஒரு நாள் நடக்கும். என் வாழ்த்துப் பலிக்கும் தெரியுமா?” என்றாள் கேள்விக்குறியோடு. மீண்டும் லட்சுமி, “வந்த விசயத்தை விட்டு என்னவோ சொல்லுறம், காவேரி உன்ர அம்மாட்ட வாங்கின காசு நாற்பது ரூபா இருக்கு. மறக்காமல் சொல்லிக் குடுத்துவிடு” என்றபடி காசை நீட்டினாள்.

லட்சுமி பேச்சோடு பேச்சாக “அதுபோக, கீழ் மலையில கிழமையில இரண்டு அல்லது மூண்டு நாள் வேலையிருக்கு. உங்களில ஒரு ஆள் போக விரும்பினால் சொல்லுங்கடி. சுணங்காமல் முடிவைச் சொல்லவேணும். வாற செவ்வாய்க்கிழமை வேலைக்கு நிக்கவேணும்” என்று சொன்னாள். தேவிகாவும் காவேரியும் ஒருவரின் முகத்தை ஒருவர் ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டார்கள். இருவரையும் இரு சோடி கண்கள் வேறு பார்த்துக் கொண்டன. தேவிகா லட்சுமியைப் பார்த்து “ஏனக்கா ஒரு ஆளுக்கு மட்டுமா வேலை?” என்று கேட்டாள். லட்சுமி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஒருத்தி வேலையை விட்டுப் போறாளாம். அதுதான் அந்த இடத்துக்கு...” என்று வார்த்தையை விழுங்கினாள் லட்சுமி.

தோழியர் இருவரும் ஒருவரின் முகத்தை ஒருவர் பார்த்த விதமே லட்சுமிக்குப் புரிந்துவிட்டது. அந்தப் பார்வையிலே பல அர்த்தங்கள் உண்டு என்பதை உணர்ந்தாள். இருவரும் மௌனித்த வேளையில் லட்சுமி, “சரி நான் போயிட்டு வாறேன். யோசிச்சுச் சொல்லுங்கடி...” என்று சற்று அழுத்தமாகச் சொல்லிவிட்டு வாசலுக்கு வந்தாள். வழக்கமாக லட்சுமி வந்துவிட்டுத் திரும்பும்போது வாசல்வரை வந்து வழியனுப்பாத தோழியர் இருவரும் இன்று வாசல் வரை வந்து வழியனுப்பினார்கள். ஒன்றுக்குப் பலமுறை, “சரியக்கா, லட்சுமியக்கா யோசிச்சு விட்டுச் சொல்லுறம்...” என்று இருவரும் ஏக குரலிலே பல்லிளித் தார்கள்.

இவற்றையெல்லாம் அப்படியே பார்த்துக் கொண்டிருந்த கிருஷ்ணிக்கு எதுவுமே புரியாத புதிராகவேயிருந்தது. “எதுக்கும் என் சந்தேகத்தைப் போக்குவோம்” என்று நினைத்தாளோ என்னவோ திடீரென “அக்கா நீதானே அந்த வேலைக்குப் போகப் போகிறாய்...” என்று கிருஷ்ணி கேட்டாள். “இப்ப வாயை மூடு” என்றாள் வெடுக்கென அக்கா காவேரி. இது தேவிகாவுக்குப் பிடிக்கவில்லை. அவளும் பதிலடி போல வெடுக்கென “ஏனடி காவேரி கிருஷ்ணியை அதட்டுறாய்? அவள் அப்பிடி என்னத்தைக் கேட்டு விட்டாள்?” என்றாள் சற்றுப் புன்னகையோடு. பதில் ஏதும் சொல்ல முடியாதவளாகக் காவேரி மௌனித்தாள்.

இப்போதுதான் கிருஷ்ணிக்குப் புரிய ஆரம்பித்தது. “என்னால் முடியாது நீ வேணுமெண்டால் போ...” என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரும் நினைக்கிறார்கள் போலும் என்ற முடிவுக்கு வந்த கிருஷ்ணி "உங்களால முடியல்லையா, நான் இருக்கிறேன் மறக்க வேண்டாம்" கலகலவெனச் சிரித்தபடி நையாண்டி செய்தாள். இந்த நையாண்டியை இரசிக்கும் மனநிலையில் காவேரி இல்லை. மாறாக எரியும் நெருப்பிலே எண்ணெய் ஊற்றியது போலவே இருந்தது. எதற்கும் பொறுமை காப்போம் என்பதாய் அமைதியாய் நின்றாள்.

தேவிகாவின் குரல் அமைதியைக் கலைத்தது. "கிருஷ்ணி, நாமதான் குடும்பக் கஷ்டம், படிக்க முடியலை. உன்னையாவது நல்லாப் படிப்பிக்கலாம் எண்டு எல்லாருமே நினைக்கிறோம். உன்ரை படிப்பைக் குழப்பியடிச்சு இப்பிடிக் கூலி வேலைக்கு, அதுகூட இரண்டு மூண்டு நாளுக்கு மட்டும் எண்டால் வேண்டவே வேண்டாம். படிப்பைக் கைவிடாதை. அக்காவும் அண்ணனும் பிச்சையெடுத்தாவது உன்னைப் படிப்பிப்பாங்க. இந்த வயதிலை கூலி வேலை எண்டு அலையாதே. போடி போ போ" என்று உபதேசம் செய்தாள்.

இந்த உபதேசம் சரியெனக் காவேரிக்கு இருந்தது. நான் சொல்ல நினைச்சதை இவளே சொல்லியிருக்கிறாள் என மனதிலே ஒருவகை நிம்மதி பிறந்தது. உபதேச விடயத்தில் கிருஷ்ணி, அக்கா காவேரியுடன் என்றால் வாதாடலாம் சண்டை பிடிக்கலாம். ஆனால் தேவிகாவுடன் என்றால் அப்படி முடியாதே என்பதால் வாயடைத்து விட்டது. இப்போதைக்கு எதுவும் பேசக்கூடாது. சந்தர்ப்பம் வரட்டும் அப்போதுதான் வாயைத் திறக்க வேண்டும் என நினைத்தாள். முக்கியமாக நான் வேலைக்குப் போக வேணுமெண்டால் அதைப் பற்றி முடிவெடுக்க அப்பா, அம்மா, அண்ணன் மூவரும் இருக்கவேணும் எனக் கிருஷ்ணியின் மனதிலே ஓர் எண்ணம் உதித்தது. வேறு எவர் எடுக்கும் முடிவும் நடைமுறைக்கு உதவாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவேரியின் எண்ணங்கள் லட்சுமியக்கா சொன்ன வேலையைப் பற்றி வலம் வந்தன. என்ன பெரிய அரச உத்தியோகமா சுளையாக மாதச் சம்பளம் வாறதுக்கு? கீழ் மலையில இருக்கிறானே ஒரு கங்காணி, அவன் படுபாதகன் என்று கேள்வி. அவனைப் பாத்துப் பல்லு இளிக்கிற பொம்பிளைக்கு சலுகையா அள்ளி அள்ளிக் குடுப்பானாம். மற்றப் பொம்பிளையள் நேர்மையாகப் பாடுபட்டு வேலை செய்தாலும் கூட நாயைவிடக் கேவலமாய் நடத்துவானாம் என்று கேள்வி. என்ன செய்வது? கடவுளின் படைப்பிலே மனிதனும் இருக்கு, அரக்கனும் இருக்கு. நாமதான் நம்மைப் பாதுகாக்க வேணும், என்றெல்லாம் சிந்தனைகள் காவேரியின் மனம் போன போக்கெல்லாம் போயின. சும்மா வீட்டிலே இருந்தால் நாலு காசு கையில் வருமா? இப்படியொரு தருணம் வரும்போதுதான் பயன்படுத்த வேணும். எங்களுக்காவது அண்ணன் இருக்கிறார். ஆனால் தேவிகாவுக்கு யார்? இருந்த சித்தியும் உள்ளதைப் பறிச்ச பிறகு துரத்திவிட்டாள். தேவிகாவே இந்த வேலைக்குத் தகுதியானவள். அவளே போய் கையிலை சில ஆயிரங்களையாவது காணட்டும் எனக் காவேரி எண்ணினாள்.

தேவிகா அதே நேரம் இன்னோர் கோணத்தில் தன் சிந்தனைக் குதிரையைத் தட்டிவிட்டாள். நானோ அநாதை. என்னை வைச்சுப் பாக்கவேணும் என்று இவள் காவேரியின் தலைவிதியா என்ன? ஏதோ சின்ன வயதிலிருந்து பழகிய குற்றத்துக்காக எந்த வருமானமும் இல்லாத என்னை வைச்சுப் பாக்கிறாளே. இவளே இந்த வேலைக்குப் போய் கையில் நாலு காசு சம்பாதிக்கட்டும். நான் அவளுக்கு சமைச்சு வீட்டு வேலைகள் பாக்கமாட்டேனா?

எங்க இரண்டு பேருக்கும் விதி ஒரே மாதிரியாக விளையாடுது. இரண்டு பேரும் கொழும்புக்குப் போய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலையையும் காசையும் இழந்து வந்தோம். இன்றுவரை வேலையில்லை. வீட்டிலேயே இருக்கிறோம். என்னை வீட்டிலே தங்கவைக்கிறதுக்காக யார் யாரோடு எப்படி யெல்லாம் வாதாடுகிறாளோ தெரியாது. இவள் வாழவேணும், இவளே இந்த வேலைக்குப் போகட்டும். இப்படியெல்லாம் காவேரியைத் தன் மனதில் ஓர் நல்ல உயர்ந்த இடத்தில் தேவிகா வைத்திருந்தாள். கொழும்பிலே இழந்த காசை முதலிலே உழைக்கட்டும் என்ற விடயம் தேவிகாவின் அடிமனதிலே உறைந்து விட்டது. இவளின் கஷ்டம் தீர்ந்தால் என்னையாவது வைச்சுப் பார்ப்பாள். என் கையில் காசு இருந்தால் அது எனக்குக்கூடப் பயன்படாமல் போகலாம். எப்படியாவது இவளையே இந்த வேலைக்கு அனுப்ப வேண்டும் எனத் தேவிகா முடிவே பண்ணியபடி காவேரியிடம் சென்றாள்.

அங்கே காவேரியும் கிருஷ்ணியும் இரகசியமாகப் பேசிக் கொண்டிருப்பது அரைகுறையாகத் தேவிகாவின் காதிலே விழுந்தது. "அக்கா இந்த வேலையை தேவிகா அக்காட்டைக் குடுத்துவிட்டு நீ என்ன வீட்டில நிண்டு அடுப்பு ஊதப்போறியா?" வெடுக்வெடுக்கெனக் கிருஷ்ணயின் குரல் கேட்டது. காவேரி அதட்டினாள், "இது பெரிய ஆளுங்களோட வேலை விசயம். நானும் தேவிகாவும் கலந்து பேசினால் ஒரு முடிவு எடுக்கலாம். வாயால் ஊதிப் பெருக்கிக் கெடுத்திடாதே" என காவேரி பேசுவதும் கேட்டது. லயத்தின் பின்புறக் கொல்லையிலே சட்டி பானைகளைக் கழுவியபடி இருவரும் பேசியதை லயத்து முற்றத்து ஓரமாய் நின்ற தேவிகா கேட்டபோது மனம் தடுமாறியது. இப்படியே விட்டால் அக்காவும் தங்கையும் வாக்குவாதத்தைத் தொடர்வார்கள் போலிருந்தது. திடீரெனக் "காவேரி, காவேரி" என்று குரல் கேட்டு அக்காவும் தங்கையும் திகைத்து நின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவிகா அவர்களிடம் நடந்து வந்தாள். இருவரும் தேவிகாவின் வரவை எதிர்பார்க்கவில்லை. அதை அவர்களின் கண்களே காட்டிக் கொடுத்தன. "நாங்கள் பேசிக் கொண்டது இவள் தேவிகாவின் காதிலே விழுந்திருக்குமோ" எனச் சுருக்கென்றோர் கேள்வி காவேரியின் உள்ளத்திலே உறைத்தது. "இல்லை, கேட்டிருக்காது. இப்பத்தானே வந்தாள்..." எனக் காவேரியின் மனமே சமாதானம் கூறியது போலிருந்தது.

கிருஷ்ணியின் குற்ற உணர்வுகள் வெளியே வர, "தேவிகா அக்கா கூப்பிட்டீங்களா...?" எனக் கேட்டாள் முந்திரிக் கொட்டையாய். "இல்லை. லயத்துக்கை காணேல்லை, அதுதான் இங்கே..." எனத் தேவிகா சமாளித்தாள். சில விநாடிகள் யாரும் எதுவுமே பேசவில்லை. தேவிகா தன் குரலைச் சரிப்படுத்தியபடி, "காவேரி நீதான் அந்த வேலைக்குப் போ. என்னால முடியாதடி..." என்றாள். காவேரி உடனேயே "இல்லையில்லை நான் போக மாட்டேன், நீதான் போடி. நல்லதொரு சந்தர்ப்பம்தானே" என்றாள். கிருஷ்ணி இருவரின் முகங்களையும் மாறி மாறிப் பார்த்தாள். "சபாஷ் சரியான போட்டி" என்றது போல இருந்தது. இவர்களில் யார் யாருக்கு விட்டுக்கொடுக்கப் போகிறார்கள்? கிருஷ்ணியின் மனம் வேகமாக அடித்துக் கொண்டது. முடிவிலே தேவிகா தானே அந்த வேலைக்குப் போவதாய் ஒத்துக் கொண்டாள்.

காவேரிக்கு முகத்திலே ஒரு புன்முறுவல் தென்பட்டது. காவேரி, "அடியே போய் முதலில் லட்சுமியக்காட்ட சொல்லு. சம்பளம், வேலை இதைப்பற்றி விபரமாய்க் கேள்" எனத் தேவிகாவிடம் சொன்னாள். உடனேயே லட்சுமியக்காவின் லயத்துக்குத் தேவிகா விரைந்தாள். கிருஷ்ணியும் சேர்ந்து சென்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவேரிக்கு மனதிலே ஒருவகைச் சுகம் தெரிந்தது. தேவிகாவுக்கு என்று ஒரு வேலையைத் தேடிக் கொடுத்துவிட்ட நிம்மதி மனதெல்லாம் நிறைந்திருந்தது. கொழும்புக்குப் போய்த் திரும்பியபோது கூட மனதிலே ஒரு பெரிய தாக்கம் இருந்தது. ஆனால் தேவிகாவை அவளின் சித்தி வீட்டை விட்டுத் துரத்தியடித்தபோது வேதனை பல மடங்காகிவிட்டது. வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சியதை விடக் கொடுமையாயிருந்தது. தேவிகாவுக்கோ போக்கிடமில்லை, ஆதரிப்பார் யாருமேயில்லாதபோது தங்க இடம் கொடுத்தோம். இப்படி ஒரு வேலையும் கிடைக்குது. தேவிகா ஏதோ பிழைத்துக் கொள்வாள். காவேரியின் மனம் தனக்குள் பேசிக்கொண்டிருந்தது.

தேவிகாவுக்குள்ள தேவை தனக்கும் இருக்கிறது. ஆனால் அவளின் நிலமை பரிதாபகரமானது. லட்சுமியக்கா தந்த வேலையை தேவிகாவுக்கு விட்டுக் குடுத்திருக்கிறேன், அவ்வளவுதான். என் சக்திக்கெட்டியவரை தேவிகாவுக்கு ஒத்தாசை செய்கிறேன். மனம் விட்டுப் பேச ஒரு பெண் அவளுக்கென்றால் அது நான்தான். காவேரிக்குத் தன் தீர்மானம் சரியெனப்பட்டது. நீண்ட பெருமூச்சொன்றை விட்டாள். அதிலே சூடான காற்று சுழன்றடித்துச் சென்றது.

## 4

மதிய வெயில் கொளுத்தியது போல உடலெங்கும் எரிந்தது. சண்முகம் இப்படியான புழுக்கத்தை இப்பொழுதுதான் பார்க்கிறார். மலைநாட்டிலே இல்லாத புழுக்கமா? ஆனால் அது உடம்பு எரிவது போல இருந்ததில்லை. மருதம்மாவுக்கும் அதே நிலைதான். ஆனால் வெளிக்காட்டவில்லை. சண்முகம் சேட்டைக் களைந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு, துவாய் கொண்டு விசிறினார். இரமணகிரி இவர்களைப் பார்த்துவிட்டு, "அம்மா இது ஓலையால் வேய்ந்தபடியால் ஓரளவு வெயிலைத் தாங்குது. தகரம் அடித்திருந்தால் அவ்வளவுதான்..." என்று சொன்னான். மருதம்மா தன் பங்கிற்கு "இந்த ஊரில இதுதான் சுவாத்தியம். என்ன செய்யமுடியும். சமாளிச்சுத்தான் ஆகவேணும்" என்று சொன்னாள்.

இரமணகிரி "அடுத்த மழை எப்ப வருமோ தெரியாது. அதுக்குப் பிறகுதான் வயலை உழவேணும். மழை இல்லை எண்டால் விவசாயமே இல்லை. நமக்கெல்லாம் மலை நாட்டிலை எப்பவுமே மழை பெஞ்சு பெஞ்சு வறட்சி எண்டால் எதுவென்றே தெரியாது" என்று அடுக்கிக் கொண்டே போனான்.

"சரியாகச் சொன்னாய் இரமணகிரி, அது வருசம் முழுக்க பெய்யுற மழை. இது என்ன மாரிக்கு மட்டும்தான் பெய்யுமாமே" என்று சண்முகம் தனக்குத் தெரிந்ததைச் சொன்னார். "அதுதான் சொல்லுவாங்க வானம் பாத்த பூமி எண்டு. இதுதானே...?" என்று மருதம்மா பீடிகை போட்டாள். "மருதம்மா எல்லா நிலமும் வானத்தைத்தான் பாக்குது. ஆனால் இந்தப் பூமி வானத்தை நம்பி இருக்குது. அவ்வளவுதான்" என்று சண்முகம் முடிவாகச் சொன்னார்.

"சரி சரி நமக்குள்ள எப்ப மழை பெய்யும் எங்கே பெய்யும் எண்டு பட்டிமன்றம் வைச்சுப் பிரயோசன மில்லை. பாக்க வேண்டிய அலுவல்களைப் பாப்பம்..." என்று சொல்லிக்கொண்டு இரமணகிரி எழுந்து அருகேயிருந்த தூணில் சாய்ந்தபடி யோசித்தான்.

அப்போது வயலின் வரப்புகளினூடாக இருவர் நடந்து வருவது தூரத்திலே தெரிந்தது. முற்றத்திலே நின்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பார்த்தான் இரமணகிரி. யாரென்று தெரியவில்லை. கையிலே பையுடன் வரும் இருவரும் சற்றுத்தள்ளி கடை வைத்திருக்கும் அண்ணன் தம்பியர்கள். "இவை எதுக்கு எங்க வீட்டுக்கு வர்ராங்கள், விசயம் இல்லாமல் வரமாட்டாங்களே..." என இரமணகிரி யோசிக்க இருவரும் முன்னால் வந்து, "என்னப்பா இரமணகிரி இண்டைக்குச் சமையல் முடிஞ்சுதா?" என்று சிரித்தபடி கேட்டனர். "இல்லையே இனித்தான் சமையல் சாப்பாடு எல்லாம்" என்று இரமணகிரி தயங்கியபடி சொன்னான்.*

*அதற்குள் அவர்கள் பையிலிருந்து இரண்டு காட்டுக் கோழிகளை வெளியே எடுத்து நிலத்திலே போட்டார்கள். இதைக் கண்டதும் இரமணகிரியின் முகத்திலே மெல்லிய புன்முறுவல் பூத்தது. "விடியக்காலை வேட்டைக்குப் போனபோது பிடித்தது. உனக்கும் பிடிக்கும் எண்டு தெரியும். அதுதான் கொண்டு வந்தோம், சமைச்சு ஒரு பிடி பிடிச்சுப் பார் தம்பி..." என்று விட்டு இருவரும் புறப்படத் தயாரானார்கள்.*

*"அண்ணை வந்தீங்கள் இறைச்சியைத் தந்தீங்கள். அதுக்குள்ள ஓடுறீங்களே?" என்று இரமணகிரி இடைமறித்தான். "கடையிலை ஆக்கள் இல்லை, பூட்டியிருக்கு. இனித்தான் போய்த் திறக்கவேணும்" என்று பதில் சொன்னார்கள்.*

*"எனக்காக இரண்டு கோழியையும் கொண்டு இவ்வளவு தூரம் வந்திருக்கிறீங்க. உள்ளுக்கு வாங்கோ. என்ன குடிக்கிறீங்க?" என்று கேட்டபடி இரமணகிரி வீட்டுக்குள் நுழைந்தான். "இண்டைக்கு இந்த காட்டுக் கோழி, முயல் எல்லாம் சமைச்சுச் சாப்பிடும்வரை சாராயம் தான் குடிப்போம் தாறியா தம்பி..." என்று சொல்லிவிட்டு அண்ணன்காரன் தன் காவிப்பல்லைக் காட்டி இளித்தபடி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டான். "அண்ணை இருக்கிறதைக் கேக்காமல் இல்லாததைக் கேக்கிறீங்களே?" என இரமணகிரி அவர்களின் அருகே இருந்து கேட்டான். "நாங்கள் சும்மா கேட்டோம். வாய் கொப்பளிக்கத் தண்ணி தா தம்பி" என்று கேட்டனர்.

மருதம்மா சமையலறையிலிருந்து தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தாள். இரமணகிரி தனது கையிலிருந்து ஏதோ ஒன்றை அவர்களின் தம்பிக்காரனின் கையிலே திணித்தான். தம்பிக்காரன் கையைத் தள்ளிவிட்டு, "இல்லை தம்பி. இதென்ன காசெல்லாம் குடுக்கிறாய்? நாம வேட்டைக்குப் போனபோது கிடைச்சுது. அவ்வளவுதான். நீயும் போனால் தரமாட்டியா?" என்று உரத்துச் சிரித்தபடி சொன்னான். மருதம்மாவும் தன் பங்கிற்கு, "இல்லைத் தம்பி கோழிக் காசு, வாங்குங்கோ..." என்று சொல்லிவிட்டு மகனைப் பார்த்தாள்.

அதற்குள் அண்ணனும் தம்பியும் எழுந்து, "போயிட்டு வாறம்" என்று சொல்லியபடி நடையைக் கட்டினார்கள். அப்போது இரமணகிரி, "அம்மா எத்தினையோ மாதங்களுக்குப் பிறகு இண்டைக்குக் காட்டுக்கோழி சாப்பிடப் போறேன்" என்றான் உற்சாகமாக.

"அடடா இண்டைக்கு வெள்ளிக்கிழமை. நான் விரதம். அப்பாவும் நீயும் காட்டுக் கோழிக்கறியைச் சாப்பிடுங்கோ. நான் விரதம் இல்லாத நாளிலே இப்பிடி வேட்டை இறைச்சியைக் கொண்டுவரக்கூடாதா?" என்று மருதம்மா அங்கலாய்த்தாள்.

அதற்குள் அவ்விடத்திற்கு வந்த சண்முகம், "தாயும் மகனும் இறைச்சியை ருசிச்சு ரசிச்சு சாப்பிடுறது பற்றியே பேச்சு. ஒண்டுக்கு மூண்டு வயதுக்கு வந்த குமருகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிய வீட்டிலை விட்டு வந்திருக்கிறோமே எண்டு நினைச்சு நான் பயந்து போயிருக்கிறேன். நாம் மட்டும் காட்டுக் கோழி சாப்பிட்டாப் போதுமா...?” என்றார் நிதானமாக.

மருதம்மாவும் இரமணகிரியும் வாயடைத்து நின்றனர். அவர்களின் மௌனம் சண்முகத்தின் அபிப்பிராயத்தை ஆமோதிப்பது போலிருந்தது. இரமணகிரி, “இல்லை நீங்க இரண்டு பேரும் வந்து நிக்கிறபோது, காட்டுக்கு நானே போய் வேட்டையாடிவந்து சமைக்க வேணும் எண்டு நினைச்சேன். சரி சரி இப்ப இது ஆவது கிடைச்சுதே. அம்மா! கொஞ்ச இறைச்சியை அவிச்சு வைச்சால் நாளைக்கும் சமைக்கலாம்...” என்று சொல்லியபடி இரண்டு கோழிகளையும் எடுத்துக்கொண்டு வீட்டின் பின்புறம் சென்றான்.

மருதம்மா சற்று யோசித்தாள், தான் விரதம் என்று சொல்லியும், கணவர் தன் மேல் ஏன் குற்றம் சாட்டுகிறார்? மூன்று பேரையும் தனியே விட்டு வந்தது மனதுக்கு ஏதோ நிம்மதி இன்றியே பொழுது கழிகிறது. அதிக நாட்கள் இங்கே தங்கக் கூடாது. தங்கவும் முடியாது. மூன்று பெண்களும் வளர்ந்தவர்கள்தான். இருந்தாலும் அங்கே என்ன நடக்குது என்பதை அறிய முடியாதே. எல்லாரும் சேர்ந்து வந்திருந்தால் பரவாயில்லை. பேசாமல் இரண்டொரு நாளில போய்விட வேண்டும். மருதம்மாவின் மனம், தான் போன போக்கிலே சிந்தித்தது. ஏதோ முடிவுக்கு வந்தவள் போல் மகன் முன்னிலையில், “இரமணகிரி அங்கே வீட்டிலை என்ன பாடோ? சமையல் சாப்பாடு என்னவோ தெரியாது. நாம இரண்டு பேரும் இரண்டொரு நாளிலை வீட்டுக்குப் போய்விட வேண்டும்...” என இழுத்தாள்.

இரமணகிரிக்குப் புரிந்துவிட்டது, எதுக்கு இவ்வளவு அவசரம் என்று. “அம்மா எனக்குத் தெரியும் ஏன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அவசரப்படுறீங்கள் எண்டு. நெல்லு அறுவடை தான் பாக்க முடியேல்லை. கொஞ்ச நாள் ஆவது நிண்டு போகலாம் தானே...” என இரமணகிரி வாய்க்குள் முணுமுணுத்தான். ஏதோ சிந்தித்துவிட்டு அவன் தாய்க்குக் கிட்டச் சென்று “என்னம்மா அப்பா அவசரப்படுகிறாரா...?” என்று இரகசியமாகக் கேட்டான். மருதம்மா ஆச்சரியத்துடன், “இல்லையே, அவர்தான் சொல்லமாட்டாரே. அவருக்கு நேரத்துக்கு ஊருக்குத் திரும்ப வேணும், அவ்வளவுதான். அவர் வாய் திறக்கமாட்டார். அதுதான் நானே கேட்டேன்...” என அனைத்திற்கும் முற்றுப்புள்ளி வைத்தாள்.*

*உடனடியாக மறுநாளே திரும்புவது என்றபோது சிவராசா அண்ணையும் வீட்டுக்கு வந்தார். பேருந்திலே ஏறும்வரை வந்து மூட்டை முடிச்சுகளையெல்லாம் தூக்கி உதவி செய்தார். மூவரையும் வழியனுப்பிவிட்டு வந்து நெல் மூடைகளை வேறு வண்டியில் அட்டனுக்கு அனுப்பி வைத்தார். இரண்டு நாட்களிலே அட்டனில் உரியவரிடம் ஒப்படைக்கப்படும் எனச் சொல்லியிருந்தார்கள். இப்படி ஒரு உதவி செய்ய இது ஓர் அரிய சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு சிவராசா மகிழ்ச்சி கொண்டார்.*

## 5

*இரவிலே குளிர்வதுடன் காலையிலே பனிமூட்டமும் இருந்த அந்த மலைமுகட்டிலே கடும் வெயில் அடித்தது. நிலம் காய்ந்திருந்தது. மதியம் தாண்டி மாலையாகியபோது மழை வருவது போலிருந்தது. வாரக்கணக்கிலே மழை பெய்யாததால் அது அவசியமானதொன்றாய் எதிர்பார்க்கப் பட்டது. மழையை நம்பி வளர்ந்த மரங்கள், செடிகள் சோர்ந்து காணப்பட்டன.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடருந்திலே, இரமணகிரியும் பெற்றோரும் அட்டனிலே வந்து இறங்கிப் பேருந்தில் ஏறியதுதான் தெரியும். காற்றுடன் மழை இலேசாகத் தூறியது. "நிலம் நனையப் போதுமானது இந்தச் சாரல்" என வீதியில் நின்றோர் விமர்சனம் செய்தனர்.

பேருந்திலிருந்து இறங்கி நடந்துவந்து லயத்தையடைய இருட்டி விட்டது. லயத்து வாசலில் நின்று இரமணகிரி "கிருஷ்ணி, கிருஷ்ணி" என்று கூப்பிட்டான். உடனேயே வாசல் கதவு திறக்கப்பட்டது. மூவரும் கொண்டுவந்த பொருட்களை வைத்துவிட்டு அளவளாவினார்கள். காவேரியும் கிருஷ்ணியும் இவர்கள் கொண்டுவந்த பொருட்களையே உற்றுப் பார்த்தார்கள். அண்ணன் இரமணகிரியோடு அப்பாவும் அம்மாவும் வந்தபடியால் பெரிதாக ஏதாவது வாங்கியிருப்பார்கள், என்ற எதிர்பார்ப்பு இருவரிடமும் இருந்தது.

லட்சுமியக்கா சொன்ன வேலையைப் பற்றிக் காவேரி விவரித்தாள். இதைக் கேள்விப்பட்டதும் மூவரின் முகத்திலும் ஒருவித மலர்ச்சி காணப்பட்டது. மருதம்மா "காவேரி சந்தோசமடி, தேவிகா பாவம் உழைக்கட்டும். ஒரு அவசர கைச்செலவுக்குக் கூட மற்றவையை எதிர்பார்க்க வேண்டிய நிர்ப்பந்தம் அவளுக்கு" என்று சொன்னாள். சண்முகத்தினதும் இரமணகிரியினதும் மௌனம் மருதம்மாவின் வார்த்தைகளை ஆமோதித்தது போலிருந்தது.

தேவிகா, "இதே மாதிரி ஒரு வேலைக்குத்தானே தேடியலைஞ்சு கொழும்புக்கும் போய் திரும்பி வெறும் கையோடை வந்தோம். எப்பவோ இதுமாதிரி ஒரு வேலை கிடைச்சிருந்தால் இவ்வளவு அலைச்சல் வந்திருக்குமா?" என்று தன் பங்கிற்குச் சொல்லித் திருப்தியடைந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவிகாவின் எண்ணத்தை அறிந்த இரமணகிரி உடனே "தேவிகா, நீ லட்சுமியோடை போய் தோட்டத்திலை வேலையின் விவரத்தை நல்லாத் தெரிஞ்சுகொள். இவங்களைப் பற்றித் தெரியும்தானே? கொஞ்சச் சம்பளம் குடுத்து பெரிய வேலையாய் வாங்குற ஆளுங்கதானே இவங்கள். கவனமாய் இருந்துகொள்..." எனப் புத்திமதி சொன்னான்.

தேவிகா திடீரென "அது மட்டுமில்லை. நாம எல்லாருமே வெறும் கூலித் தொழிலாளியாய் இப்படியே எவ்வளவு காலத்துக்கு இருக்க முடியும். சந்ததி சந்ததியாய் நாம கூலித் தொழிலாளி, அவங்க மட்டும் சந்ததி சந்ததியா முதலாளியாய் இருந்து நம்மளை அடக்குறாங்க. இதுக்கு முடிவே இல்லையா? விடிவே கிடையாதா?" என்று தன் ஆதங்கத்தைச் சொன்னாள்.

மருதம்மாவும் சண்முகமும் சில நாட்கள் வீட்டில் இல்லாதபோது காவேரி, கிருஷ்ணி, தேவிகா மூவரும் சந்தித்தித்த சம்பவங்கள் அவர்களால் வாழ்க்கையிலே மறக்க முடியாதவை. காவல் நிலையத்திலே தடுத்து வைத்தது முதல் தம்பலகாமத்து வயல் பார்த்தது வரை இருவரும் மாறி மாறிக் கதையைச் சொன்னார்கள். பயணக் களைப்பு ஒருபுறம் உடலைச் சோர்வடையச் செய்தது. இரமணகிரி அயர்ந்து தூங்கினான்.

அதே லயத்தின் இன்னோர் மூலையிலே தேவிகா காவேரி கிருஷ்ணி மற்றும் மருதம்மா படுத்திருந்தார்கள். தேவிகாவுக்கு இது ஒருவிதமான அசௌகரியத்தை உணர்த்தியது. பன்னிரண்டுக்குப் பத்தடி பரப்பளவு கொண்ட லயமே மொத்த வீடு. சமையலறையை வேறாக வைத்திருப்பதால் சிறு பகுதி இடம் மிச்சமானது. அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லயத்திலே இத்தனை பேர் படுக்க வேண்டும் என்பது என்ன எங்கள் தலைமேல் எழுதிவைத்த தலைவிதியா?

அதுவும் ஒரு வாலிபனும் வயதுவந்த அந்நியப் பெண்ணும் இப்படி ஒரு லயத்துள் வாழ்வது என்பது எவ்வளவு கொடுமையானது? தேவிகாவின் மனம் நாலா திசையெங்கும் சிந்தித்துச் சிறகடித்தது. தேயிலைத் தோட்டங்களை வெள்ளைக்காரன் உருவாக்கியபோது போட்ட லயங்களிலேயே ஏழைத் தொழிலாளர்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்தே ஆகவேண்டிய கட்டாயம் உருவாக்கப்பட்டுள்ளது.

தம்பலகாமத்திலிருந்து சிவராசா அண்ணை அனுப்பி வைத்த இரமணகிரியின் நெல் மூடைகள் லயத்துக்கு வந்து சேர்ந்தன. பாரவூர்தி வந்து நின்று நெல் மூடைகளை இறக்கியபோது அக்கம்பக்கத்து லயன்களிலேயிருந்து வந்த ஏராளமானோர் வேடிக்கை பார்த்து நின்றார்கள். அப்போது அங்கு தற்செயலாக வந்த லட்சுமியக்கா, “என்ன இது நெல்லு மூடையைப் பாத்ததில்லையா?” என அங்கு கூடி நின்று வேடிக்கை பார்த்தோரிடம் நகைச்சுவையாகச் சிரித்தபடியே கேட்டாள். அதில் நின்ற முதியவர் ஒருவர், “இல்லை லட்சுமி, நம்மளோடை தேயிலைத் தோட்டத்திலே வேலை செய்து, பிறகு அதை இழந்து வெளியூர் போய் அதுவும் சொந்த நிலத்திலை விவசாயம் செய்யுறது சாதாரணமானதல்ல. அதுக்குப் பலனாகத்தான் இந்த நெல்லைக் கொண்டு வந்திருக்கிறான் நம்ம பையன் இரமணகிரி. இது எல்லோருக்கும் பெருமைதானே. இதை ஏன் மத்தவங்ளும் பின்பற்றக்கூடாது” என்று தன் ஆதங்கத்தைச் சொன்னார்.

லயத்தினுள் நெல் மூடைகளை வைத்தவுடன் சண்முகம் மகனைப் பார்த்து, “மழை பெரிசா அடிச்சுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொட்டினால் நம்ம லயத்துக்குள் மழை ஒழுக்கு விழுகுது. நெல்லு நனைஞ்சால் முளைச்சுவிடுமே..." என வினாவினார். "நனையாமல் பாதுகாக்க வேணும். அதுக்கு ஏதாவது வழி பண்ண வேணும்..." என இரமணகிரி பதில் சொன்னான்.

லயத்தினுள் வந்த லட்சுமியக்கா, "காவேரி அடுத்த செவ்வாய்க்கிழமைதான் வேலைக்குப் போகவேணும் அதுதான் ஞாபகப்படுத்த வந்தேன். தேவிகா எங்கே?" எனக் கேட்டாள். மருதம்மாவுடன் பேசிக்கொண்டிருந்த தேவிகா எழுந்துவந்து "லட்சுமியக்கா செவ்வாய்க்கிழமை தானே, இரண்டு பேரும் சேர்ந்தே போவம்..." என்று சொன்னாள். மருதம்மாவுடன் சில நிமிடங்கள் பேசிக்கொண்டிருந்த லட்சுமி பின்பு வீட்டிற்குச் சென்றாள்.

தேவிகாவும் லட்சுமியும் கீழ்மலைத் தோட்டத்திலே வேலை செய்து கொண்டிருந்தார்கள். பறித்துக்கொண்டு தொழிற்சாலைக்கு வரும் தேயிலைக் கொழுந்தைத் தரம்பிரித்து வைத்தல், பதப்படுத்தல், அரைத்தல், துப்புரவு செய்தல் என்று ஏகப்பட்ட வேலைகள் தேவிகாவுக்கென்று காத்திருக்கின்றன. கூட வேலை செய்யும் இன்னுமோர் பெண் "தேவிகா, இண்டைக்குத்தானே பிள்ளை வேலை துவங்கிறாய்? இந்த நிருவாகம் ரொம்ப மோசம். இந்த முழுப்பாக்ரறியையும் பார்க்கிறானே இந்த சூப்பவைசர் அவன் பரவாயில்லை. ஆனால் அவனோடை ஒரு வால் திரியுது கண்ணாடியை மாட்டிக் கொண்டு, அவன்தான் மோசமானவன்..." என்று சொல்லிவிட்டுப் புன்னகைத்தாள். தேவிகா சாதாரணமாகப் புன்னகைத்தபடி, "சரியக்கா எல்லாமே கேள்விப்பட்டதுதான்...." என்றாள். அப்போது சுவரின் மூலையிலே நின்ற ஒருவன் முறைத்துப் பார்த்தபடி கிட்ட நடந்து வந்தான். அவனது சப்பாத்து ஓசை "டொக் டொக்" எனப் பலமாகக் கேட்டது. நடுத்தர வயதையுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் கோட்டின் மேல் பித்தான்கள் திறந்திருந்தன. சேட்டின் கைகள் முழுக்கையாக இருந்தது. சிகரெட் நாற்றம் வயிற்றைக் குமட்டுவதுபோல் தேவிகாவுக்கு இருந்தது.

தேவிகாவின் அருகே நெருக்கமாய் வந்தவன் ஏற இறங்கப் பார்த்தான். தேவிகா எதுவிதப் பதற்றமின்றித் தன் வேலையைச் செய்தாள். வந்தவன் கோபத்திலே கண்கள் சிவக்க "ஏய் உன்னைத்தான்.." என்று கத்தினான். தேவிகா நிமிர்ந்து அவனைப் பார்த்தபோது "நீ என்ன செவிடியா கூப்பிட்டது கேக்கேல்லையா?..." என்றான். தேவிகா சிரித்தபடி "இவ்வளவு பேர் பொம்புளையள் வேலை செய்யுறம். உன்னைத்தான் என்றால் யாரை என்று எடுக்கிறது? பெயர் தெரியாதா?" என்று கேட்டாள். கூட நின்ற ஏனைய பெண்கள் எல்லோரும் சிரித்து விட்டார்கள். வந்தவனுக்கோ அவமானமும் கோபமும் ஒன்றுசேர, "நீதான் தேவிகாவோ? என்னவோ? இப்படி வா..." என்று சற்றுத் தள்ளி அழைத்துச் சென்றான்.

அந்தப் பகுதியிலே நின்றோர் எல்லோரும் ஏக காலத்தில் இருவரையும் பார்த்தார்கள். இவனுக்குக் கோபம் வர, "உங்க வேலையை மட்டும் பாருங்க" என்று இரைந்தான். இடுப்பிலே கைகளை வைத்தபடி, சில விநாடி மௌனித்த பின், "நீ இண்டைக்குத்தான் வந்திருக்கிறாய்; இடத்துக்குப் புதுசு. இவங்க யாரும் சொல்லுறதைக் காதிலை வாங்கக் கூடாது. இல்லாததையும் பொல்லாததை யும் சொல்லி, உன்னைக் கெடுத்துப் போடுவாங்க. கவனமாயிரு... சரியா... போய் வேலையைப் பார்" என்றான். தேவிகாவுக்குச் சிரிப்பு வர, அவனின் முகம் கடுப்பேறியது. "இந்தா பார், இங்கே எல்லாமே நான்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குப் பிடிக்கேல்லையெண்டால் உடனேயே வெளியே போகவேண்டியதுதான்” என்று கூறினான்.

தேவிகா பயமில்லாமல் “அப்ப சுப்பவைசர், சுப்பிரன்ரன் எல்லாம் யார்...” என்று வஞ்சகமில்லாமல் கேட்டாள். அவன் தடுமாறிக் கைபிசைந்தபொழுது, “சுப்பவைசருக்குப் பின்னால் இண்டைக்குக் காலையில நடந்துபோனது நீங்கள்தானே...” என்று கேட்டாள். “அது... உனக்குத் தேவையில்லை. வந்த வேலையை மட்டும் பார்...” என்று சொன்னபடி அவன் அவ்விடத்தை விட்டு அகன்றான்.

அதைப் பார்த்துக் கொண்டிருந்த ஏனைய தொழி லாளர்கள் தேவிகாவைச் சூழ்ந்து கொண்டனர். அவர்களுள் ஒருத்தி, “வந்த முதல் நாளே நல்ல மருந்து இவனுக்குக் குடுத்திருக்கிறாய்...” என்று சொன்னாள். இதைக் கேட்ட இன்னொருத்தி, “அது சரிதானக்கா சொல்லேக்குள்ள நல்லாயிருக்கும், அவன் வேலையை விட்டுத் தூக்கினால்... அப்பத்தான் தெரியும்” என்று பயமுறுத்தினாள். தேவிகாவோ கொஞ்சமும் சஞ்சலமின்றி “சுப்பவைசர், சுப்பிறின்ரன் எண்டால் கூடப் பரவாயில்லை. இந்த வாலுக்கு எதுக்கு நாம பயப்படவேணும்?” என்று பொதுவாகக் கேட்டாள். “இதைத்தான் நான் எப்பவோ சொன்னேனே... யாராவது கேட்டங்களா?” என்றாள் முதலிலே நியாயம் பேசியவள். “அது சரியக்கா நியாயம் இருக்கட்டும்... நமக்குள்ள பேசத்தான் அதுசரி. இவனுகளுக்கு முன்னால அதெல்லாம் புஸ்வாணம்தான், யாராவது நியாயம் கேட்டிருக்கிறோமா? இல்லையே. அதனாலதான் இவன் மாதிரி எடுபிடிகளுக்குக் கூட நாம பயப்பிட வேண்டிருக்கு...” என்று மற்றொருத்தி இரகசியக் குரலில் கிசுகிசுத்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசாமல் நான் உண்டு என் வேலையுண்டு என்றிருந்தால் எவருக்கும் பயப்பிட வேண்டியதேயில்லை என்று நினைத்தாள் தேவிகா. இவர்களிலேயே நல்லவர் கெட்டவர் யார் அறிவார்? அன்று வேலை முடிந்து மாலை லட்சுமியக்காவுடன் வீட்டிற்கு வந்து சேர்ந்தாள். வரும் வழியிலே லட்சுமியக்கா ஒரேயொரு தரம் கேட்டாள், “எப்பிடி வேலை? பிடிச்சிருக்கா?” என்று. தேவிகா மலர்ந்த முகத்தோடு, “ம்ம் சும்மா பரவாயில்லையக்கா...” என்று சமாளித்தாள்.

லட்சுமியக்கா சிரித்துவிட்டு “தேவிகா, வேலைக்கு வந்த முதல் நாளிலே பரவாயில்லை வேலை எண்டு சொல்லுற முதல் ஆள் நீதான்...” என்றாள். தேவிகாவின் மனம் குழம்பியது. எதுக்கு இப்பிடிச் சொல்லுறாய்? தேவிகாவின் மனக்கோலம் முகத்திலே தெரிந்தது. அது கண்ட லட்சுமியக்கா, “தேவிகா அதுக்கு ஏன் பயப்பிடுறாய்? இந்தக் கங்காணியள் எல்லாருமே இப்பிடித்தான். கெஞ்சினால் மிஞ்சுவான், மிஞ்சினால் கெஞ்சுவான். உன் வேலையில பிழை பிடிக்காதவரை உன்னை ஒண்ணும் பண்ண முடியாது” என்று சொல்லித் தைரியம் கொடுத்தாள்.

வீட்டிற்கு வந்து சேர்ந்தபோது அமர்க்களமான வரவேற்புக் கிடைத்தது. வாசலிலே காத்துநின்ற கிருஷ்ணி வந்ததும் வராததுமாய் “தேவிகா அக்கா எப்பிடி...” என்று இழுத்தாள். அங்கே லயத்தின் வெளியே நின்ற மருதம்மா, “தேவிகா நல்ல வேலைதானே...” என்றாள். காவேரி மட்டும் எதுவும் பேசவில்லை. மாறாக தேவிகாவின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். முகத்திலே புன்னகை பூத்திருந்தது காவேரிக்கு.

தேவிகாவின் அகத்திலுள்ளதை அப்படியே அளந்து சொல்லக்கூடியவள் காவேரி. அவ்வளவுக்கு இருவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழகிய விதம் அப்படி. மீண்டும் புன்முறுவலுடன் காவேரி, "தேவிகா வேலை உனக்குப் பிடிச்சிருக்கு. யாரோ சில பேருடன் ஏதாவது வாக்குவாதம் நடந்ததா...?" எனக் கேட்டாள். தன் நிலையை அப்படியே சொல்லிவிட்டாளே என நினைத்த தேவிகா மௌனித்து நின்றாள். தங்கள் கேள்விக்குப் பதில் கிடைத்தது போல நினைத்த கிருஷ்ணியும் தாய் மருதம்மாவும் ஒவ்வொருவராகச் சென்றார்கள், அவ்விடத்தை விட்டு.

தேவிகாவின் அடிமனதிலே, "இந்த வேலையை எக்கணமும் கைவிடக் கூடாது. எத்தனை நாள் வேலையானாலும் பரவாயில்லை. சும்மாவிருந்தபடி அடுத்தவர்களுக்குப் பாரமாய்ச் சாப்பிடாமல், ஏதோ உழைக்கிறேன்" என்று நிம்மதி வேண்டி நின்றது. காவேரியுடன் நீண்ட நேரமாகத் தேவிகா வேலையைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தாள். லட்சுமியக்காவும் இடையிடையே வந்து வேலையிடத்து நகைச்சுவைகளைச் சொல்லி எல்லோரையும் மகிழ்ச்சியிலே ஆழ்த்திச் சிரிப்பூட்டினாள். புது வேலைக்குப் போய்வந்தது ஏதோ புதிய உலகிலே சஞ்சரிப்பது போலத் தேவிகாவுக்கு இருந்தது. இப்படியே நாட்கள் பல நகர்ந்தன. சம்பள நாளும் வந்தது. தேவிகாவுக்கு மட்டும் சம்பளம் பேசிய தொகையை விடக் குறைவாக இருந்தது. அதிர்ச்சியும் அவமானமும் முகத்திலே கொப்பளிக்க, விறுவிறுவென லட்சுமியக்காவிடம் சென்றாள்.

"லட்சுமியக்கா இதுதான் சம்பளம் எண்டு சொல்லித் தந்தான். சொன்ன தொகையை விடக் குறையுதே..." என லட்சுமியக்காவிடம் அழாக்குறையாகச் சொன்னாள். லட்சுமியக்கா சற்றும் பதறாமல் "கையெழுத்து ஏதும் போட்டியா சம்பளம் வாங்கினபோது?" எனக் கேட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவிகா அக்கம் பக்கம் பார்த்துவிட்டு இல்லையென்றதாய்த் தலையை மட்டும் ஆட்டினாள். லட்சுமியக்காவின் முகத்திலே ஒரு புன்முறுவல் பூத்தது. "தேவிகா, இதை யாரிடமும் சொல்லாதே. அப்பிடியே விடு, என்ன மாதிரி அடுத்த சம்பளத்திலை திருகுதாளம் விடுகிறான் எண்டு பாப்பம்" என்று தேவிகாவின் காதருகே இரகசியம் பேசினாள். இது தேவிகாவிற்கும் ஒரு மன ஆறுதலை அளித்தது. வழமையைவிட அமைதியாக இருவரும் வீடு வந்து சேர்ந்தனர்.

வீட்டுக்கு வரும் வழியிலே லட்சுமியக்கா பக்கத்திலே வந்தும் இதுபற்றி எதுவுமே கேட்க முடியவில்லையே என்று தேவிகா நினைத்தாள். ஆனால் அதை வெளியே சிறிதும் கூடக் காட்டிக் கொள்ளவில்லை. தேவிகாவின் மனம் எதையோ தேடுவதை முகம் காட்டி நின்றது. வீட்டிற்கு வந்ததும் அன்றாடக் கடமைகளிலே ஈடுபட்டாள்.

கொழும்புக்குப் போய் காவேரியுடன் திரும்பிவந்த நாள் முதல் இன்றுவரை காசு என்று எதுவுமே தேவிகாவால் கொடுக்க முடியவில்லை. அதற்கு ஈடாக வீட்டு வேலைகளிலே ஒத்தாசை செய்தது உண்டு. சம்பளப் பணமாக வந்ததில் சிறிது தொகையைக் கைச்செலவுக்கு வைத்துக்கொண்டு மீதியைக் காவேரியிடம் கொடுத்தாள்.

காவேரி திகைத்தாள் ஒரு கணம். "இதென்னடி கூத்து? சம்பளத்தை எனக்குத் தாறாய். வேலையைச் செய்தது நீ, சம்பளம் மட்டும் எனக்கா?" எனக் காவேரி கேட்டாள் சிரித்தபடி. தேவிகா "இல்லை, எத்தனை நாளைக்கு நான் சும்மா சாப்பிட முடியும்... நீயே சொல்லடி..." எனச் சொல்லி முடித்தாள். காவேரி, "எனக்கு இந்தக் கணக்குத் தெரியாது. நீ போய் அம்மாவிடம் குடு" எனச் சொல்லி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசைத் திருப்பிக் கொடுத்தாள். தேவிகா வாங்காதபோது, காசை அவளின் கையில் திணித்தாள்.

தேவிகா திரும்பியபோது மருதம்மா அருகே நின்று இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தாள். "அம்மா! இந்தக் காசை நீங்களாவது வாங்கி ஆகவேணும் மறுக்கக்கூடாது..." என்றபடி அப்படியே மருதம்மாவின் கையில் தேவிகா காசைத் திணித்தாள். மருதம்மா மகிழ்வுடன் அதைப் பெற்றுக் கொண்டாள். இது மகள் காவேரியின் விழியை விரிய வைத்தது. தேவிகாவிற்கு, மனதிலே ஓர் சுமை இறங்கியது போல இருந்தது. மருதம்மாவும் காசை வாங்க மாட்டாளோ என்று நினைத்தவளுக்கு இதுவே போதும் என்றிருந்தது. அப்போது சண்முகத்தின் குரல் ஒலித்தது. மூவரும் அத்திசையை நோக்கினார்கள். அப்போது அவர்கள் கண்ட காட்சி அவர்களின் நெஞ்சை உறைய வைத்தது. வாசலிலே சண்முகம் குடிபோதையில் வந்து விழுந்து கிடந்தார்.

காவேரி விருட்டென வாசலை நோக்கி விரைய, மருதம்மா ஏதோ சொல்ல வாயெடுத்தாள். "எதுவும் சொல்ல வேண்டாம்" என்ற அர்த்தத்தில் சைகையைக் காட்டிய காவேரி "அப்பா இதென்ன புதுப்பழக்கம்? நல்லாத்தானேயிருந்தீங்கள். இதென்ன இது?..." எனக் கேட்டாள். அவளின் கண் கலங்கியிருந்தது. அதைக் காட்டிக் கொள்ளாமல் "நீங்க போய்க் குடிச்சீங்களா? இல்லை வேறு ஆராவது..." என்று கேட்டாள்.

மருதம்மா முந்திக்கொண்டு, "இதை வேறு யாரும் வாங்கிக் குடுப்பாங்களா? இதென்ன கச்சானா? ஐஸ்கிறீமா...!" எனக் கேட்டாள். சண்முகம் விழியை உருட்டியபடி "சொன்னா நம்பமாட்டீங்கள். என்னோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கூட முதல்ல தோட்டத்திலை வேலை செஞ்சான், என்ன பெயர் அவனுக்கு... அதுதான் அது வந்து பொன்ராசா வழியிலை கண்டான். சந்தோசம்தானே அண்ணே எண்டு கேட்டான். சந்தோசமடா தம்பி எண்டு சொன்னன். பக்கத்திலையிருந்த கடையிலை போய் சாராயம் வாங்கித் தந்தான். குடிச்சவுடனே எதுவும் தெரியேல்லை...'' என உளறினார்.*

*"உங்களுக்கு எங்கே போச்சுது புத்தி? குடிக்காத ஒருத்தருக்குக் குடிக்கக் குடுக்கிறது மகாதப்புத்தானே. அவன் பொன்ராசா படுபாவி, குடிச்சுத்தான் அழிவான்...'' என மருதம்மா விசும்பியழுதாள். "அம்மா குடிக்கிறதே பஞ்சமாபாதகத்திலை ஒண்ணுதானே. பிறகென்ன புது வியாக்கியானம்? சரி அப்பா, ஏதோ குடிச்சிட்டார். அதைப் பெரிசுபடுத்த வேண்டாம்...'' எனச் சமாதானம் செய்தாள் காவேரி.*

*சண்முகம் மீண்டும், "மகன் வயலிலை உழைக்கிறான், தேவிகாவும் வேலைக்குப் போறாளாம். இப்ப சண்முக அண்ணைக்குப் பரவாயில்லைத்தானே.... இப்பிடிச் சொல்லித்தான், அவன் பொன்ராசா சாராயம் தந்தான்...'' எனச் சொன்னதையே திரும்பத் திரும்பச் சொன்னார். அப்போது தேவிகா, "சரி சாப்பிட்டுப் போய்ப் படுங்கோ'' எனச் சொல்லிச் சண்முகத்தைக் கையிலே பிடித்து நிலத்தில் இருத்தினாள். காவேரி சாப்பாட்டைக் கொடுத்தபோது வாங்கிச் சாப்பிட்டார். "போதும் போதும்...'' என்றபடி கையை அலம்பிவிட்டுப் படுக்கைக்குச் சண்முகம் சென்றார்.*

*சில நாட்கள் போன வேகம் தெரியாமலே ஓடி மறைந்தன. அது ஓர் அந்தி மாலை, வெயில் சாய்ந்து இலேசாக இருள ஆரம்பித்தது. தேவிகா வேலை முடிந்து*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைத்து வியர்த்து லயத்து வாசலுக்கு வந்தபோது இளவயதுக்காரர் ஒருவர் நின்றிருந்தார். “சண்முகண்ணே சண்முகண்ணே...” என்று கூப்பிட்டுப் பார்த்தார். உள்ளே வானொலி அலறிக் கொண்டிருந்தது. “தைரியமாகச் சொல் நீ மனிதன் தானா இல்லை நீதான் ஒரு மிருகம் இந்த மதுவில் விழும் நேரம்...” என்ற பாட்டு சொல்லிவைத்தாற் போல காற்றலையிலே வந்தது.

தேவிகா வந்தவரைப் பார்த்து “நீங்க யார்... யாரைத் தேடுறீங்க...” எனக் கேட்கமுன்பே முந்திரிக் கொட்டையாக “நான்தான் பொன்ராசா... சண்முக அண்ணரைக் கூப்பிடுறியா புள்ளே” என்றார் சர்வசாதாரணமாக. தேவிகாவுக்கு அவரைப் புரிந்து கொள்ள முடிந்தது. “நீதான் அந்த சந்தோசப் பொன்ராசா வா?” என மனதுக்குள் பெரும் கேள்வி மின்னலென எழுந்தது. “ஐயோ ஐயோ” என அவளுக்கு அலற வேண்டும் போலிருந்தது. அழுது புலம்புவது பெண்களின் இயல்பு எனப் பெண் உலகமே பரிகாசம் செய்யும். வேண்டாம் அது எனத் துணிவை வரவழைத்த தேவிகா “அண்ணே சண்முகண்ணையை ஏன் தேடுறீங்கள் எண்டு எல்லாருக்கும் தெரியும். சாராயம் குடிக்கத்தானே... உங்களுக்கெல்லாம் வீட்டில பெஞ்சாதி புள்ளையளே இல்லையா... ஒழுங்காச் சாப்பிடுகினமா... இவ அம்மா உங்களைத்தான் தேடியிருக்கிறா... கையில கிடைச்சால் அவ்வளவு தானண்ணே...” எனப் படபடவெனப் பேசினாள்.

இதைச் சற்றும் எதிர்பார்க்காத பொன்ராசா பேச வாயெடுத்தார். ஆனால் வார்த்தைகள் வற்றிவிட்டன. நாவறண்டு வியர்த்துக் கொட்டியது. மெதுவாக அவ்விடத்தைவிட்டு நழுவினார். அப்போது வாசலுக்கு வந்த மருதம்மா தேவிகாவின் பேச்சை விளங்கியவளாய் “எங்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பொன்ராசாவோ பித்தளை ராசாவோ? ஆள் என் கையிலை அகப்பட்டால் அவ்வளவுதான்" எனக் கூக்குரலிட்டாள். மருதம்மாளின் குரல் பொன்ராசாவுக்குக் கேட்டதோ என்னவோ இருளோடு இருளாய் ஓடி மறைந்தான். மருதம்மா கணவரைத் தேடியபோது லயத்தினுள் அமைதியாக இருந்தார்.

தேவிகா தோட்டத்தில் லட்சுயமிக்காவுடன் வேலை செய்து கொண்டிருந்தாள். அலுவலகத்துக்கு அழைக்கப் பட்ட தேவிகா நிரந்தரப் பணியாளராக ஆக்கப்பட்டதாய் அறிந்துகொண்டாள். மகிழ்ச்சி பொங்க லட்சுமியக்காவிடம் முதலில் சொல்ல வேண்டும் என விரைந்து வந்து சொல்லி நன்றியை மீண்டும் தெரிவித்தாள்.

மாலை மறைந்து இருள் கவ்வும் நேரம் காவேரி முத்தையாபிள்ளை கடையிலே சில பொருட்களை வாங்கியபின் வீட்டிற்கு வந்தாள். ஒரு மரத்தடியில் வந்த பொழுது அங்கே தயாராகக் காத்துநின்ற இளைஞன் ஒருவன் காவேரியுடன் பேச ஆரம்பித்தான். காவேரி வெட்கத்துடன் தயங்கியபடி நாலு பக்கமும் பார்த்தபடி அவனுடன் பேசினாள். தங்களை அந்த வீதியின் ஓரத்து மரத்தின் கீழ் எவருமே பார்த்திருக்க மாட்டார்கள் என்ற துணிவில் இருவரும் வெளியேறி வீடுகளுக்கு விரைந்தார்கள்.

லட்சுமியக்காவுடன் தேவிகா வேலைக்குப் போய்க் கொண்டிருந்தாள். தோட்ட வாசலுக்கு வெளியே நின்ற இளைஞன் ஒருவன் ஓடிவந்து, "தேவிகா உன்னோடை ஒரு விசயம் பேசவேணும்..." எனச் சொல்லி ஓரமாகச் சைகை காட்டினான். இதைப் பார்த்த லட்சுமிக்குக் கோபம் வந்ததும் முறைத்தாள். தேவிகாக்கும் இது பிடிக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*“உன்னை யார் எண்டே தெரியாது றோட்டிலை என்ன பேச வேண்டியிருக்கு...” என்று கூறியபடி வேகமாக நடந்தாள். அவனும் வேகமாய் நடந்தபடி பதில் சொன்னான்.*

*லட்சுமி ஓரமாக நிற்க, இருவரும் சில வார்த்தைகள் பேசினார்கள். திடீரெனத் தேவிகா “ஏய் காவேரியைப் பற்றி என்ன நினைச்சாய், அவள் எந்த ஆம்பிளையையும் தலைநிமிர்ந்துகூடப் பாக்கமாட்டாள் தெரியுமா?” எனக் கடுமையான தொனியில் பேசினாள். அவன் சிரித்தான். தேவிகாவுக்குக் கோபம் மேலும் அதிகரித்தது. அவன் சிரித்துக் கொண்டே “தேவிகா, காவேரி என் மூஞ்சையை நிமிர்ந்து பார்த்தாளே. என் பெயரையும் சொல்லி இந்த விசயத்தையும் சொல்லு. என்ன அவள் சொல்லுறாள் பாப்பம்” என்று கிட்ட வந்து காதோடு காதாகச் சில விடயங்களைச் சொன்னான். அதைக் கேட்டதும் தேவிகா அதிர்ச்சியில் உறைந்து நின்றாள். அதற்குள் அந்த இளைஞன் திடீரென அவ்விடத்தை விட்டு மறைந்தான்.*

*“என்ன அவன் நம்ம காவேரியைப் பற்றி ஏதோ சொன்னானே...” என லட்சுமி பீடிகை போட்டாள். தேவிகாவுக்குத் தர்மசங்கடமாகி, என்ன செய்வது? எப்படிச் சமாளிப்பது எனக் கையைப் பிசைந்தாள். அவன் சொன்னதை அப்படியே லட்சுமியக்காவிடம் சொன்னால் ஊரெல்லாம் உளறிவிடுவாள். காவேரிக்குத்தான் மானம் போகும். லட்சுமியக்கா ஒரு ஓட்டைவாய். வெறும் வாயையே மெல்லுறவள், அவல் கிடைத்தால் விடுவாளா?*

*எப்படியும் சமாளித்தேயாக வேணும், “இல்லை லட்சுமியக்கா காவேரியின்ர அண்ணன் இரமணகிரியும் இவனும் ஒண்டாப் படிச்சவங்களாம். எப்ப வயல்ல இருந்து*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகிறார் எண்டு கேட்டான்...” என்று திடீரெனத் தேவிகா சொன்னாள். இது லட்சுமிக்குத் திருப்தியாகவில்லை. அதுக்கு அவன் ஏன் தனியாகத் தேவிகாவைக் கூப்பிட்டுக் கேட்கவேணும், அப்பிடியென்ன இராணுவ இரகசியம்? இப்படியொரு கேள்வி இலட்சுமியின் மூளையைக் குடைந்தெடுத்தது. அவள் ஏதும் பேசாது தேவிகாவுடன் சேர்ந்து நடந்து தொழிற்சாலைக்குள் சென்றாள். தேவிகாவுக்கு லட்சுமியக்காவின் முகத்தைப் பார்க்கும் போதெல்லாம் குற்ற உணர்வு மேலிடுகிறது. நான் சொன்னது பொய், ஆனால் அதை இலட்சுமியக்கா நம்பினாளா இல்லையா? நம்ப முடியாமல் மனம் குழம்பியதை இலட்சுமியின் வதனம் காட்டியது.

வீட்டிற்கு வந்து தேவிகாவின் மனம் அமைதியிழந்தது. அவன் சொன்ன விடயத்தை எப்படிக் காவேரியிடம் சொல்லுவது? தப்பித் தவறி இவளின் பெற்றோர் நாம் பேசும்போது கேட்டு விட்டால் என்னைத்தான் தப்பாக நினைப்பார்கள். இந்தச் சின்ன லயத்துக்குள் இரகசியம் பேச முடியாது. இவளை வெளியே கூட்டிக்கொண்டு போய்த் தான் இரகசியம் பேசவேண்டும் எனப் பலவாறு பல கோணங்களிலே எப்படிச் சொல்வது எனத் தேவிகாவின் மனம் அங்கலாய்த்தது.

வெளியே இருட்டிவிட்டது காவேரியை வெளியே வைத்துச் சொல்லலாம், எதற்கும் யாராவது நிற்கிறார்களா என எட்டிப் பார்த்தாள். இருளிலிருந்து இரு குரல்கள் தெளிவாகக் கேட்டது. ஒரு குரல் “அது யாரடி ஒருத்தன் என்னோட வந்த தேவிகாவை மறிச்சு ஏதோ கிசுகிசுத்தான் காதுக்குள்ள, உன்ர ஆளா? இல்லை அவளின்ர ஆளா?” எனக் கேட்டது. அதுக்குப் பதில், “... அவர் ... தேவிகாட்டை என்ன... கேட்டார்...?” என மற்ற குரல் வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லயத்தின் உள்ளே நின்ற தேவிகாவுக்கு யார் வெளியே இருட்டிலே பேசுகிறார்கள் என அடையாளம் காண அதிக நேரம் எடுக்கவில்லை. அதுக்குள்ள லட்சுமியக்கா இப்படி லயத்துக்குள்ள வந்து இவள் காவேரியை வெளியே கூப்பிட்டு விசயத்தை முந்திரிக் கொட்டை மாதிரி கக்குகிறாளே. தேவிகாவின் மனம் ஒரு கணம் ஆடிப் போனது.

லட்சுமியக்கா, "அவர் இவர் எண்டு சொல்லுற அளவுக்குப் போய்விட்டாயா? சந்தேகமில்லை அவரோ, எவரோ உன்ரை ஆளேதான், சந்தேகமில்லையடி. எனக்கே சொல்லாமல் மறைக்கிறியா...?" எனச் சிரித்தபடி கேட்டாள், தெளிவாகக் கேட்டது. "இல்லையக்கா அப்பிடியொண்டுமில்லை..." எனக் காவேரி மறுத்தபோதும் லட்சுமி விட்டபாடில்லை. தன்னைக் கண்டுவிட்டால் அவர்கள் இருவருக்கும் தர்மசங்கடமாகிவிடும் என நினைத்த தேவிகா உள்ளே வந்தாள்.

இரவு நெடுநேரமாகியும் இருவருக்கும் நித்திரை வரவில்லை. மாறாக நினைவலைகள்தான் முந்திக் கொண்டன. திடீரெனக் காவேரி, "அடியே என்ன நடந்தது வேலைக்குப் போற நேரம்...?" என மெல்லிய குரலில் மெதுவாகக் கேட்டாள். தேவிகா திடுக்குற்று ஏற இறங்கக் காவேரியைப் பார்த்தாள். அவளின் பார்வை காவேரிக்கு அச்சத்தை மூட்டியிருக்க வேண்டும். தேவிகாவின் முகத்தைப் பார்க்கத் திராணியற்றவளாய் வேறு பக்கம் பார்த்தாள்.

இலேசான இருட்டிலும் அவளின் அசைவுகளைத் தேவிகாவால் தெளிவாகப் பார்க்க முடிந்தது. லட்சுமி யக்காவுடன் இரகசியம் பேசியதைத் தான் பார்த்ததாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டி அவளை மேலும் சஞ்சலப்படுத்த வேண்டாம் என நினைத்த தேவிகா "விடியட்டும் ஆறுதலாகச் சொல்லுறேன், இப்ப பேசாமல் நித்திரையைக் கொள்..." எனச் சொன்னாள். பொறுமை இழந்த காவேரி, "அதைச் சொன்னால்தானடி நித்திரையே வரும் தெரியுமா?" எனச் சொன்னாள். தேவிகா தலையை நிமிர்த்திப் பார்த்தாள், சற்றுத் தள்ளி மருதம்மாவும் கிருஷ்ணியும் நித்திரையில் ஆழ்ந்திருந்தார்கள். லயத்தினுள் இரகசியம், அதுவும் அமைதியான இரவு நேரம் முடியாத காரியம் என உணர்ந்த தேவிகா "விடியட்டும் சொல்லுறேன்" எனச் சொல்லிவிட்டு நித்திரையானாள்.

காலையில் காவேரி தேவிகா சொன்ன விடயம் ஏற்கனவே லட்சுமியக்கா சொன்னதுதான். ஆனால் தேவிகா இல்லாததையும் பொல்லாததையும் சேர்த்துச் சொல்லுறாளா...? என நினைத்து மூளையைக் கலக்கினாள்.

"தேவிகாவுக்கென்ன, மனதில் எதையும் வைச்சிராமல் அவர் சொன்னதை அப்படியே சொல்லிவிட்டு வேலைக்குப் போய்விட்டாள். நான்தான் மனதைப் போட்டுக் குழப்புகிறேன்" எனக் காவேரி பல கோணங்களிலே நினைத்தாள். புதிராகவேயிருந்தது பதில் காணமுடிய வில்லை.

தொழிற்சாலையில் மதிய இடைவேளையின்போது, "தேவிகா இவள் காவேரியின் விசயம் தாய்க்குத் தெரிஞ்சால் பெரிய பிரச்சனையாகும், கவனமடி" என்று லட்சுமியக்கா தேவிகாவை எச்சரித்தாள். "நீ சொல்லுகிறாய் சரிதான், ஏதோ ஒரு நாள் இது தெரியத்தான் போகுது, என்ன செய்யலாம்? அவளுக்கும் இதையே விளக்கமாய்ச் சொல்லியிருக்கிறேன்" எனத் தேவிகா சொன்னாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலையில் இருவரும் கடமையிலே மும்முரமாய் இருந்தார்கள். அப்போது அங்கு வந்த சுப்பவைசரின் உதவியாளர் "உங்க ரண்டு பேரையும் சுப்பவைசர் கூப்பிடுறார்" என்றான். அலுவலகத்திற்குச் சென்றபோது தனித்தனியாக இருவரையும் உள்ளே அழைத்து வெற்றுத்தாளில் கையொப்பம் இடுமாறு சுப்பவைசரும் உதவியாளரும் கேட்டார்கள். மறுத்தபோது "வேலையை விட்டு நிற்பாட்டி விடுவேன்" என மிரட்டினார்கள். இரு பெண்களும் பயப்படாமல், "எதுக்குக் கையெழுத்துப் போடவேணும் சொல்லுங்க பதிலை" என்று குரலை உயர்த்திப் பேசினார்கள்.

உதவியாளர் லட்சுமியின் தலைமயிரைப் பிடித்தபடி, "பொட்டைக் கழுதை விளக்கம் சொன்னால்தான் போடுவியாடி கையெழுத்து..." எனக் கர்ச்சித்தான். தேவிகாவுக்கு இரத்தம் கொதித்தது. எட்டி அவனின் கையைத் தட்டிவிட்டாள். அப்போது அவன் தடுமாறிச் சுப்பவைசரின் மேல் விழுந்தான். சுப்பவைசர் தடுமாறியபோது பக்கத்திலேயிருந்த மேசையைப் பிடித்துக் கொண்டான்.

லட்சுமியின் சரீரம் நடுங்கியது. கலைந்த தன் கூந்தலைச் சரி செய்தபடி, "பொம்புளை மேல கைவைச்சால் என்ன நடக்கும் தெரியுமா?" என இரைந்தாள். தேவிகாவும் ஏதோ சொல்ல வாயெடுத்தாள். அதற்குள் உதவியாளர் "எங்களைப் பிடிச்சுக் குடுத்திடுவியாடி? எங்கே பாப்பம்?" என்று சொல்லிவிட்டு அடிக்க வந்தான். லட்சுமி அவனின் கையைப் பிடித்து பின்னே தள்ளிவிட்டாள். அவனோ மேசைக்கும் நாற்காலிக்கும் நடுவே வீழ்ந்தான். இவ்விரு பெண்களின் அஞ்சாமையையும் துணிச்சலையும் கண்டு உதவியாளரும் சுப்பவைசரும் நன்கு பயந்து விட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தி லட்சுமியும் தேவிகாவும் அலுவலகத்தை விட்டு வெளியேறினார்கள். லட்சுமி மெதுவாகத் தேவிகாவின் காதருகே குனிந்து, "இதை வெளியே சொல்லாதே, சொன்னால் நமக்குத்தான் அசிங்கம்..." என்றாள். தேவிகாவிற்குக் கோபம் வந்தது. அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் பொறுமையாக, "லட்சுமியக்கா இதென்ன தெரிஞ்சுதான் சொல்லுறீங்களா? நம்ம இரண்டு பேருக்கும் பெரிய அநியாயம் நடந்திருக்கு. இதை நாமளே மூடி மறைச்சி அந்தப் படுபாவியளைக் காப்பாத்தச் சொல்றியா?" எனக் கேட்டாள். பதில் சொல்ல முடியாமல் லட்சுமி மௌனித்தாள். "வேறு யாராவது பொம்புளைக்கு இதுமாதிரி நடந்திருந்தால் ஐயோ அம்மா எண்டு கத்திக் குளறி முழுப் பாக்டரியையும் கூட்டியிருப்பாள். நாமதான் ஆளுக்கு இரண்டு தட்டுத் தட்டிப்போட்டுப் போறமக்கா..." என்று சிரித்தபடி தேவிகா சொன்னாள். கடுமையாக யோசித்துக் கொண்டிருந்த லட்சுமி "அது சரிதான் தேவிகா. இதை இப்பிடியே விடக் கூடாது. இவங்களுக்குப் பாடம் படிப்பிக்க வேணும்..." எனச் சொன்னாள்.

அப்போது திடீரென அவர்கள் முன் தோன்றிய சக தொழிலாளர்கள் இருவரையும் சூழ்ந்து கொண்டார்கள். அவர்கள் ஏக குரலில் "என்ன நடந்தது...?" என்று கேட்டார்கள். லட்சுமியின் விளக்கத்தையடுத்து அனைவரும் ஆவேசம் கொண்டனர். அவர்களுள் ஒரு தொழிலாளி "லட்சுமி உனக்கே தெரியும், இப்படி... எத்தனை பேருக்கு இதே மாதிரி அக்கிரமம் நடந்திருக்கு. பொறுமைக்கும் ஒரு எல்லையிருக்கில்லை" எனக் கூறினாள்.

"இப்பிடியே சும்மா விட்டபடியாலதான் உங்களுக்கு இந்தக் கதி வந்தது. எப்பவோ இதை எல்லோரும் சேந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்த்திருந்தால் இவங்களுக்கு இப்பிடி ஒரு துணிவு வருமா?'' என்று முணுமுணுத்தாள் இன்னுமொரு தொழிலாளி.

அவர்களுள் வயதான ஒருவர், "ஏதாவது நடந்தால் இதுமாதிரிக் கூடிக் குமுறுகிறோம், புலம்புகிறோம் அவ்வளவுதான். அத்தனை பேரும் சேர்ந்து போய் நியாயம் கேப்போம். மறுத்தால் வேலை செய்ய முடியாது எண்டு உண்ணாவிரதம் இருப்போம். என்ன செய்து விடுவாங்க இந்தப் பாவிப்பயல்கள் பாப்பம்?'' என்று உரக்கப் பேசினார்.

அவரின் பேச்சை ஆமோதித்தது போல அனைவரும் "சரி அதையாவது செய்வோம்'' எனக் கூறினார்கள். அப்போது ஒரு குரல் "அடியே செல்வம் உனக்கும் பிரச்சினை வந்தபோது அழுது கொட்டினாய். இப்ப அடுத்தவரின் பிரச்சினைக்கு மட்டும் தலையை ஆட்டுகிறாய்...'' என ஒலித்தது. பதிலாகத் தொழிலாளி செல்வம் "நான் விட்ட பிழையை இப்பத்தான் உணருகிறேன். இனியும் நடக்கவிடக்கூடாது...'' என்று கூறிச் சமாதானம் சொன்னாள்.

எல்லோரும் சேர்ந்து அலுவலக வாசலில் உதவியாளரையும் சுப்பவைசரையும் சூழ்ந்து கொண்டார்கள். ஓட முயன்றார்கள், முடியவில்லை. "எங்களுக்குப் பதில் சொன்னால்தான் விடுவோம்'' என எல்லோரும் ஏக குரலில் முழங்கினார்கள். சுப்பவைசர் மேலும் கோபத்தோடு, "இப்படி மறியல் செய்தால் பொலிசுக்குப் போக வேண்டிவரும் தெரியுமா? சட்டத்தைப் பற்றி...'' என இரைந்தான். கோபமாகத் தொழிலாளி செல்வம் எழுந்தாள் "அப்பிடியா சங்கதி, நீ சொல்லுற சட்டமும் பொலிசும்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறும் பேப்பரில கையெழுத்துக் கேட்டு அவ தலைமயிரைப் பிடிச்சு இழுக்கச் சொன்னதோ? நாம எல்லோருமே பொலிசைத்தான் கூப்பிடப் போறோம். பரவாயில்லை நீங்களே கூப்பிடுங்கோ, நாம சாட்சிக்கு வர்றம்" என பதிலடி கொடுக்க, சுப்பவைசர் தலைகுனிந்து மௌனித்து நின்றான்.

மாலையானபோது தோட்ட முதலாளி வந்தார். பரபரப்பாக ஓடிவந்து அலுவலகத்தினுள் நுழைய முற்பட்டார். அப்போது தொழிலாளர்களின் இந்தப் போராட்டம் பற்றி அறிந்து கொண்டார். தொழிற்சாலைக் குள் வேலை செய்வோருக்கு நடந்த அநீதியைத் தோட்டங்கள் எங்கும் கேள்விப்பட்டபோது கொழுந்து பறிப்போரும் மற்றும் இதர தொழிலாளர்களும் போராட்டத்தில் இணைந்து கொண்டார்கள். அலுவலகத்தின் வாசல் மற்றும் தொழிற்சாலையின் கட்டடப் பகுதியெங்கும் தரையில் இருந்து முழக்கம் எழுப்பினார்கள். இத்தனைக்கும் சுப்பவைசரும், உதவியாளரும் நடுவே அமர்ந்திருக்கத் தொழிலாளர்கள் சூழ்ந்திருந்தார்கள்.

தோட்ட முதலாளியைக் கண்டதும் சில தொழிலாளர் மரியாதைக்காக எழுந்து நிற்க முயன்றார்கள். ஆனால், பக்கத்திலே இருந்த சக தொழிலாளர்கள், "உன் விசுவாசத்தைப் பிறகு காட்டு, இப்ப ஒற்றுமையாக மற்றவர்களோடு ஒத்துழையுங்க" எனச் சொன்னார்கள். இதனையடுத்து எவரும் எழுந்திருக்கவில்லை. அனைவரும் இருந்தபடியே உரத்த குரலிலே முழக்கம் எழுப்பினார்கள்.

தோட்ட முதலாளி முன்னே வந்து கையைக் காட்டி, "அனைவரும் அமைதி" எனச் சொன்னார். திடீரென

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதி நிலவியது. தோட்ட முதலாளி, "என்ன நடந்தது? இங்கே பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் தயவு செய்து தனது பிரச்சினையைச் சொல்லுங்க..." என்றார். சுப்பவைசரும் உதவியாளரும் எழுந்து ஏதோ சொல்ல முயன்றனர். சூழ இருந்த தொழிலாளர்கள் இவர்கள் இருவரையும் பார்த்து, "பாதிக்கப்பட்டது நீங்களில்லை. லட்சுமியும் தேவிகாவும் மட்டும்தான்..." என்றார்கள். தோட்ட முதலாளி முறைத்துப் பார்த்தபோது இருவரும் "பொத்"தென்று இருந்தார்கள்.

லட்சுமியும் தேவிகாவும் எழுந்து நின்று தமக்கு ஏற்பட்ட அவலங்களை எடுத்துச் சொன்னார்கள். அவ்வப்போது சுப்பவைசரும் உதவியாளரும் அவற்றை மறுத்தார்கள். இதைத் தோட்ட முதலாளி சினத்துடன் பார்த்துவிட்டு, "சொல்ல வந்ததைச் சொல்லட்டுமே? இடையில் யாரும் குறுக்கிடக் கூடாது..." என்றார். லட்சுமியும் தேவிகாவும் தொடர்ந்து பேசினார்கள். உடனேயே வேறு பலரும் எழுந்து தமக்கு முன்பு ஏற்பட்ட பிரச்சினைகளையும் அச்சுறுத்தல்களையும் சொல்ல முனைந்தார்கள். உடனே சுப்பவைசரும் உதவியாளரும் "இந்த இரண்டு பேரின் பிரச்சினையே முடியேல்லை, அதுக்குள்ள ஏன் மற்ற ஆக்கள் தலையிடுவான் இப்ப" என்று கூறினார்கள். ஏனைய தொழிலாளர்கள் ஏக குரலில் "உனக்கும் இதுமாதிரி பிரச்சினை வந்தால்தான் புரியும். இருக்கிற பிரச்சினையைச் சொல்ல வேண்டிய நேரமும் இடமும் வந்திருக்கு. நீங்கள் இரண்டு பேரும்தான் இதைத் தடுக்கிறீங்கள். ஏன் குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்குதோ?" என ஆளுக்கு ஆள் திட்டினார்கள்.

தோட்ட முதலாளி முறைப்பாடுகள் கூறியவர்களை தனது அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றார். மற்றைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளர்களுக்குத் தான் தக்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். ஏனையோர் கலைந்து சென்றார்கள். ஒவ்வொருவரையும் தனித்தனியாக அழைத்துப் பேசியபோது, "பிரச்சினை என ஒன்றிருந்தால் அதை உடனேயே தீர்க்க வேணுமே தவிர இப்படி வளர விடலாமா?" எனத் தோட்ட முதலாளி கடிந்து கொண்டார்.

சுப்பவைசரையும் உதவியாளரையும் முதலாளி அழைத்து எச்சரித்தார். "என்ன துணிவிருந்தால் வெற்றுப் பேப்பரில் கையெழுத்துப் போடும்படி நிர்ப்பந்தம் பண்ணுவீங்க? அதுவும் ஒரு பெண் தொழிலாளியை? அவர்கள் உங்க கொடுமைகளைத் தாங்கிச் சகித்தபடி வேலையைச் செய்திருக்கினம். பொலிஸ் கோடு எண்டு போனால் கம்பிதான் எண்ணுவீங்க தெரியுமா? உங்க ரெண்டு பேரையும் இரண்டு வாரம் வேலையை விட்டு தற்காலிக இடை நிறுத்தம் செய்கிறேன். லட்சுமிக்கும் தேவிகாவுக்கும் இதனால் ஏற்பட்ட மன உளைச்சலுக்கும் அசௌகரியத்திற்கும் நட்ட ஈடாகத் தொழில் நீதிமன்றம் சொல்லுகிற தீர்ப்பை ஏற்று நாமதான் அதைச் செலுத்த வேண்டியிருக்கும்" என அவர் சொன்னார். இதைக் கேட்டதும் சுப்பவைசரும் உதவியாளரும் விழி பிதுங்கி நின்றார்கள். ஒருவரையொருவர் பார்த்துத் தமக்குள் ஏதோ பேசிக்கொண்டார்கள். திடீரென உதவியாளர், "சுப்பவைசர்தான் எல்லாத்தையும் செய் எண்டு திட்டம் போட்டார். அதுதான் நானும் செய்யவேண்டி வந்தது" என்றான். உடனே சுப்பவைசர் எழுந்து "எனக்கு ஒண்டுமே தெரியாது, எல்லாம் இவர் செய்த வேலை..." என ஒருவர் மீது ஒருவர் மாறி மாறிக் குற்றம் சாட்டினார்கள்.

தோட்ட முதலாளி கோபத்தோடு "முதல்ல நிற்பாட்டுங்க உங்கள் குற்றச்சாட்டை. இரண்டு பேரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தினை வருசம் வேலை செய்றீங்க? நீங்க செய்ததை நினைச்சா வெக்கமாயிருக்கு...'' என்று சொல்லிவிட்டு அலுவலகத்தை விட்டு வெளியேறினார். தாமும் அங்கு நின்று என்ன பயன் என நினைத்தார்களோ, சுப்பவைசரும் உதவியாளரும் உடனே வெளியேறினார்கள்.

நாட்கள் சில சென்றன. தோட்ட முதலாளி அலுவலகச் சிற்றூழியனை அனுப்பி லட்சுமியையும் தேவிகாவையும் தன்னைச் சந்திக்கும்படி கேட்டிருந்தார். உடனே கூட வேலை செய்து கொண்டிருந்த தொழிலாளர்கள் சிற்றூழியனைச் சூழ்ந்து கொண்டார்கள். "என்னவாம் முதலாளி பேசப்போறார்...?'' என ஒருவன் கேள்வி கேட்டான். அதற்குள் பெண்களில் துடுக்கான ஒருத்தி, "முதலாளியும் தலை மயிரைப் புடிச்சி இழுக்கப்போறானா என்ன...?'' என்றாள் வெடுக்கென. சிற்றூழியனோ என்ன செய்வதென்று தெரியாமல் தவித்தான்.

தொழிலாளர்கள் இப்படியே ஆளுக்கொரு கேள்வி கேட்டுச் சிற்றூழியனைத் திணற வைத்தார்கள். சிற்றூழியனோ தாக்குப்பிடிக்க முடியாமல், "என்னைக் கொஞ்சம் பேசவிடுறீங்களா? இரண்டு பேரையும் கூட்டிக் கொண்டு வரச்சொன்னார் முதலாளி. என்ர கடமை வந்தேன், சொன்னேன். வருறது வராதது உங்க விருப்பம். நானும் உங்களைப் போல ஒரு தொழிலாளி தானே. என்னோடை ஏன் மல்லுக்கட்டிறீங்க?'' என மூச்சுவிடாமல் பேசிமுடித்தான்.

சில விநாடிக்கு ஒரே நிசப்தம் நிலவியது. லட்சுமி பேசினாள், "முதலாளி என்ன செய்யப்போறார் எண்டு பாப்பம். பேசிப்பாப்பம், இல்லையெண்டால் பிறகு யோசிப்போம்'' என்றாள். தேவிகாவும் லட்சுமிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரவாக, "சரி, என்னவென்று பாப்பம்..." என வார்த்தைகளை விழுங்கினாள்.

அலுவலகத்தினுள்ளே தோட்ட முதலாளிக்கு முன்பாக லட்சுமியும் தேவிகாவும் அமர்ந்திருந்தார்கள். யாரும் எதுவுமே சில விநாடிகள் பேசவில்லை. லட்சுமி தோட்ட முதலாளியின் முகத்தை உற்றுப் பார்த்தாள். அவரின் முகத்திலே ஒருவித அச்சம் நிலவியது. லட்சுமி நிசப்தத்தைக் கலைத்தாள். "ஏதோ விசயம் பேச வேணும் எண்டு கூப்பிட்டீங்களாம். அதுதான் இரண்டு பேரும் வந்திருக்கிறோம்..." என்றாள். தோட்ட முதலாளி தலையையாட்டிவிட்டு "உண்மைதான் லட்சுமி, நம்ம சுப்பவைசரும் உதவியாளரும் செய்த வேலையால எனக்குத்தான் மன நிம்மதியில்லாமற் போச்சுது" என்றார். குறுக்கிட்ட தேவிகா, "அப்ப எங்க நிம்மதியும் போச்சுதே தெரியுமா?" என்றாள் கோபத்தோடு.

தோட்ட முதலாளியோ சிறிதளவும் பதற்றமின்றிப் பேசினார், "எனக்கே இப்படியெண்டால் பாதிக்கப்பட்ட உங்களுக்கு எப்படி நிம்மதியிருக்கும்?" என்று கேட்டார். லட்சுமியும் தேவிகாவும் ஒருவரின் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். அதைத் தன் கடைக்கண்ணால் பார்த்துவிட்டு "உங்களுக்கு ஏற்பட்ட மனக்கஷ்டத்துக்கு ஈடாக ஒரு தொகை காசு தர இருக்கிறோம். அதை வாங்குவீங்க எண்டு நம்புறேன்..." எனத் தோட்ட முதலாளி சொன்னார். திடுக்குற்ற இருவரும் ஒருவரை ஒருவர் மீண்டும் பார்த்தார்கள். வார்த்தைகள் எதுவும் வரவில்லை. தேவிகாவினதும் லட்சுமியினதும் மனநிலைமையைப் புரிந்தவராய் தோட்ட முதலாளி "வீட்டில போய் யோசிச்சு உங்க முடிவைச் சொல்லுங்கோ" எனச் சொன்னார். தான் கொடுக்கப்போகும் நட்ட ஈட்டுத் தொகை பற்றிய விவரங்களைக் காட்டினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*லட்சுமியும் தேவிகாவும் வந்தபோது ஏனைய தொழிலாளர்கள் சூழ்ந்து கொண்டு ஆவலோடு "என்ன பேசினீங்க?" எனக் கேட்டார்கள். லட்சுமி விளக்கம் கொடுத்தாள். "தோட்ட முதலாளி சொல்லுறார் என்னெண்டால் நாங்க இரண்டு பேரும் இது சம்பந்தமாகப் பொலிஸ் வழக்கு அல்லது தொழிலாளர் நீதிமன்றம் எண்டு போய் அலைஞ்சால் சொற்பத் தொகை ஈடாக் கிடைக்கும். அவங்க இரண்டு பேருக்கும் தண்டனை கிடைக்கும். அலைச்சலுக்கும் செலவழிக்கிறதுக்கும் போதாது கிடைக்கிற காசு. நட்ட ஈடாகத் தானே காசு தாறாராம்...." எனச் சொன்னபோது ஏனையோர் முணுமுணுத்தார்கள். அதற்குள் ஒரு குரல் பலமாக ஒலித்தது. "நாம் தொழிற்சங்கம் தொடங்குவது பற்றி கேட்டோமே பதில் இல்லை இதுவரை. நட்ட ஈடு குடுத்திட்டா எல்லாம் சரியாகி விடுமா?" என அதை ஆமோதித்துப் பலர் "ஆமா" போட்டனர்.*

*அப்போது அவற்றையெல்லாம் ஆமோதிப்பது போல தொழிற்சாலை மணி ஓங்கி அடித்தது. எல்லோரும் பரபரப்பாக வெளியே வந்தார்கள். கூட்டம் கூட்டமாக நின்று இதைப்பற்றியே பேசிக் கொண்டனர். அவர்களுள் அனுபவஸ்தர் ஒருவரின் குரல் திடீரென ஒலித்தது. "அது சரி, முதலாளி இறங்கி வார நேரமிது. இப்பத்தான் நாமளும் கொஞ்சம் இறுக்கிப்பிடி பிடிக்க வேணும்" என்றார். எல்லோருக்கும் ஏதோ புதிர் போடுவது போல இருந்தது. ஒருவரை ஒருவர் ஆச்சரியத்துடன் பார்த்தார்கள்.*

*அவர் பேசினார், "தொழிற்சங்கம் அமைக்கவே, போராட வேண்டியிருக்குது. போராடியது போதும். இப்பவாவது தொழிற்சங்கம் தொழிலுக்கு ஒன்று தேவை என உணர்ந்திருக்கிறோம் அனுபவத்திலே. தொழிற்சங்கம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைக்கச் சம்மதித்தால் மட்டுமே இந்தக் காசை வாங்க வேணும். இல்லையெண்டால் வழக்குப் போடுவோம் என்ற நிபந்தனையைச் சொல்லவேணும் கண்டிப்பாக.'' எல்லோரும் ஏகக்குரலிலே, "இது நியாயமான நிபந்தனைதான். எப்போவோ இதைச் சொல்லி விட்டிருந்தால், தேவிகாவும் லட்சுமியும் இதையே சொல்லியிருக்கலாம்'' என அபிப்பிராயப்பட்டனர். லட்சுமியும் தேவிகாவும் இந்த ஆலோசனையை ஏற்றதாய்த் தலையை அசைத்தனர்.

## 6

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லார் தொழுதுண்டு பின் செல்பவர்'' எனும் வாக்கியம் எத்தனை உண்மையை எடுத்துச் சொல்கிறது என்பதற்கு அச்சாரமாய் வேளாண்மையில் இறங்கிய பிறகு இனம் காணாதவொரு நிம்மதி மனதிலே தென்படுவதை இரமணகிரி உணர்ந்தான். அதுவும் கடந்த போக விளைச்சலும் விலையும் நன்றாயிருந்தன. கையில் காசுப்புழக்கமும் தாராளமாக இருந்தது. அதுவும் ஒரு வகையிலே மனதைக் குளிர வைத்தது. வயலுக்குத் துணிந்து செலவு செய்து நெல்லை விதைக்கும் வசதியுள்ளவர்களே வியக்கும்படி ஏழை விவசாயி இரமணகிரியின் அறுவடை செழுமையாக இருந்தது.

"சிவராசா அண்ணை..." என்ற குரல் கேட்டு சிவராசா அண்ணை திரும்பிப் பார்த்தபோது அயல் வயற்காரர் ஒருவர் வந்து, "அண்ணை ஆத்தங்கரைப் பக்கமாய் காணிகள் குடுக்கப் போறாங்களாம், கேள்விப்பட்டியா?'' என்றார் பரபரப்பாக. சிவராசா அண்ணை ஏதுமறியாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வராய், "தெரியாது..." என இழுத்தார். கேட்டவருக்குத் திருப்தியில்லை என்றிருக்கவேணும். மீண்டும் "இல்லை யண்ணை காட்டுக்காணியள்தான். வெளிமாவட்டங் களிலிருந்து வந்து குடியேறினால் காணியும் உதவிக்காசும் குடுக்கப் போறாங்களாம், பேப்பரில வந்தது, அதுதான்..." என வாயெல்லாம் பல்லாகச் சிரித்தார். இதைக் கேட்டதும் சிவராசா அண்ணைக்கு மட்டற்ற மகிழ்ச்சி ஏற்பட "அடிசக்கை அப்ப இன்னும் பல கமக்காறர் வரப் போகினம்" என்றார். அருகே நின்று இவற்றைக் கேட்டுக் கொண்டிருந்த இரமணகிரிக்கு உடனே மனதில் திட்டம் ஒன்று உதயமானது. "மலையகத்திலுள்ள எமது உறவுகளில் ஒரு குடும்பத்தையாவது இங்கே காணி எடுத்துக் குடியேற்ற வேண்டும்" என மனதைத் திடப்படுத்திக் கொண்டான்.

அதற்குள் சிவராசா அண்ணை "வேணுமெண்டால் இருந்து பாருங்கோ சிங்களக் குடும்பங்களைத்தான் கொண்டு வருவான் குடியேற்ற..." என்றார். இரமணகிரி, "சே என்ன இவர், நான் ஏதோ நினைக்க, இவர் ஏதேதோ சொல்லுகிறார், அதுவும் அபசகுனம் போல" என மனதுக்குள் நினைத்துக் கொண்டான். அப்போது சிவராசா அண்ணையின் மனைவி மூன்று பேருக்கும் தேநீர் கொண்டு வந்தார். சிவராசா அண்ணையின் வயலின் பின்புறமாக அவரது வீடு அமைந்துள்ளது. மனைவி அண்மையில்தான் ஊரிலிருந்து வந்துள்ளார். சிறிய வீடு இருவருக்கும் போதுமானது. முற்றத்துச் சிறு பலாமர நிழலில் போட்ட கயிற்றுக்கட்டிலில் மூவரும் இருந்து தேநீர் பருகினார்கள். அவ்வட்டாரத்திலுள்ள வயல்காரர்கள் பெரும்பாலானோர் தனியாட்களாகவே இருக்கின்றனர். பலரது குடும்பத்தினர் ஊரிலே வாழ்கின்றார்கள். இன்னும் சில வயல் வேலைகள் இருந்தால் மட்டும் வந்து தங்கி வேலைகள் முடிந்ததும் திரும்பிவிடுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நாட்கள் சில ஆரவாரமின்றி நகர்ந்தன. இரமணகிரி யின் மனம் அமைதியின்றி ஏதோ இனம் காணாதவொரு சஞ்சலத்தில் அல்லாடியது. விடை காண அவனே விழைந்தான். அறிவுக்கெட்டியவரை எதுவும் புலப்பட வில்லை. அன்று காலை முதல் இதைத் தவிர அவன் எதுவும் உருப்படியாகச் செய்ததில்லை. மாலையில்தான் இந்த இலவசக் காணி விடயத்தில் என்ன செய்வது என்று தான் போட்ட திட்டம் ஞாபகத்திற்கு வரவில்லையே என உணர்ந்து கொண்டான். மறுநாள் காலையில் சிவராசா அண்ணருடன் மாவட்டச் செயலகத்திற்குச் சென்ற இரமணகிரி வழங்கப்படவிருக்கும் காணிகள் பற்றிய விவரங்களைச் சேகரித்தான். இரமணகிரி துருவித் துருவி விசாரித்த விதம் சிவராசா அண்ணைக்குச் சிரிப்பாக இருந்தது. "என்ன தம்பி இன்னுமொரு காணி எடுக்கப் போறியா?" எனக் கிண்டலடித்தார். சிரித்துக்கொண்டே இரமணகிரி, "அண்ணே, உங்களுக்குத் தெரியாதா?" என வினாத்தொடுத்தான்.*

*அங்கே பெற்ற விண்ணப்பப் படிவங்களைப் பத்திரமாக எடுத்துச் சென்றான். அடுத்த வாரம் அவற்றையும் எடுத்துக் கொண்டு அட்டனுக்குப் புறப்பட்டான். அப்போது பேருந்து நிலையம்வரை வழியனுப்ப வந்த சிவராசா அண்ணை "தம்பி இரமணகிரி, மலைநாட்டிற்கு வெளியே அரசாங்கம் குடுக்கிற காணிகள் பற்றிய விவரங்கள் பெரும்பாலும் மலைநாட்டுச் சனத்துக்குத் தெரியாது. தெரியவிடாமல் அரச மட்டத்தில் பார்த்துக் கொள்ளுறாங்கள். அதையும் தாண்டி விண்ணப்பித்தாலும் கூட மலையகத்தாருக்குக் காணிகள் கிடைப்பது குதிரைக் கொம்புதான் இரமணகிரி. அதனால நீ தெரிஞ்ச எல்லாருக்கும் தெரியப்படுத்து இந்தக் காணியள் பற்றி. ஏதோ அதிட்டமுள்ளவனுக்காவது கிடைக்கட்டும்" என்று ஒரு பிரசங்கமே செய்துவிட்டார்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அண்ணை! இது ஒரு பொது விடயம். என் வீட்டு விடயம் மட்டுமல்ல. நம்ம சமுதாய விடயம். பொது நலத்தோட என்னால முடிஞ்சளவுக்கு எல்லாருக்கும் தெரியப்படுத்துறேன்” என்று இரமணகிரி பதில் சொன்னான். சிவராசா அண்ணைக்கு உச்சி குளிர்ந்தது போலிருந்தது. மிதிவண்டியை மிதித்தபடி சிவராசா அண்ணை பல விடயங்கள் பற்றிப் பேசினார். பேருந்து வந்து ஏற்றிச் செல்லும்வரை நின்றுவிட்டுச் சென்றார். இரமணகிரியின் வீட்டையும் வயலையும் சிவராசா அண்ணையே கவனித்தார். இரமணகிரியின் மாடுகளைத் தன் மாடுகளுடன் சேர்த்துத் தன் வீட்டிலே பாதுகாப்பிற்காக வைத்திருந்தார். வயற்வெளியில் உள்ள வீட்டில் இரமணகிரியின் பெறுமதியான பொருட்கள் என்று எதுவுமில்லை.

ஒரு வாரம் ஒருவாறு கழிந்தது. சிவராசா அண்ணையின் வீட்டு முற்றத்தில் இரமணகிரி வந்து நின்ற போதுதான் அவரின் மனைவி கண்டார். சிவராசா அண்ணை வந்து குசலம் விசாரித்து அளவளாவினார். அப்போது இரமணகிரி, தான் பலரது விண்ணப்பப் படிவங்களைக் கொண்டுவந்ததை சிவராசா அண்ணையிடம் சொன்னான். அவர்... “உன்ர பொதுச் சேவையைப் பாராட்டுறன், உன் பரந்த மனசுக்கு நீ நல்லாயிருப்பாய் தம்பி...” என்று வாழ்த்த, இரமணகிரிக்கு மனமெல்லாம் நெகிழ்ந்தது.

கிராம சேவையாளரிடம் விசாரித்தபோது பாராளு மன்ற உறுப்பினரிடம் விண்ணப்பப் படிவங்களைக் கொடுக்குமாறு கேட்டுக் கொண்டார். இரமணகிரியும் சிவராசா அண்ணையும் பாராளுமன்ற உறுப்பினரைச் சந்தித்துக் கையளித்த விண்ணப்பப் படிவங்களுக்குப் பற்றுச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீட்டு வழங்கினார் பாராளுமன்ற உறுப்பினர். மாதங்கள் பல உருண்டோடி மாயமாய் மறைந்தன. சீரற்ற காலநிலை நிலவியது. வானம் மப்பும் மந்தாரமுமாய் சுழற்காற்றோடு மழை பொழிந்தது. வேளாண் மக்கள் மகிழ்ந்தனர்.

இப்போதைக்கு உழுவதற்கு, இந்த மழை போதுமானது, என நினைத்துக்கொண்டு உழுவதற்குத் தயாரானார்கள். இரமணகிரியும் சிவராசா அண்ணையும் சேர்ந்து ஒருவருக்கு ஒருவர் உழவில் உதவினார்கள். கொஞ்ச நாளாக மழையின்றிக் கிடந்த வறண்ட மண்ணும் அதனுள்ளே முளைக்க முனையும் செடிகளும் புற்களும் பரவிக் கிடந்தன. உழுதபோது அவை அனைத்தும் மண்ணிற்கு மேலே வந்து தலையை நீட்டின. அன்று வீசிய காற்றும் எறித்த வெயிலும் மண்ணைக் காயவைத்தன.

மறுநாட்காலையில் மீண்டும் இரமணகிரி வயலில் இறங்கிக் காய்ந்த புல் பூண்டுகள் மற்றும் குப்பைகளை அகற்றினான். வரம்புகளிலே நடந்து சென்றபோது வயல் அழகாகத் தெரிந்தது. உழுது புரட்டிவிட்ட மண் காய்ந்ததும் பளபள என்றிருந்தது. பக்கத்தில் நின்று பார்ப்பதை விடச் சற்றுத் தள்ளி நின்று பார்க்கும்போது வயலின் மண்ணை இருகைகளாலும் அள்ள வேண்டும் போல இருக்கும்.

சிவராசா அண்ணையின் நண்பர் ஒருவர் அவரிடம் வந்தார். வந்ததும் வராததுமாய் “சிவராசா அண்ணை விசயம் ஒண்டு கேள்விப்பட்டியா?” என்றார். பக்கத்தில் இருந்த இரமணகிரி விழிகளை அம்பாக்கி, வந்தவரின் முகத்தை உற்றுப் பார்த்தான். சிவராசா அண்ணையும் ஆவலோடு “என்ன சொல்லு?” என்றார். “வயல் காணிக்கு எழுதப் போட்டீங்கள், ஞாபகமா? காணியள் எல்லாம் குடுத்து முடிஞ்சுதாம்” எண்டு கேள்விப்பட்டேன் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த நண்பர் பெரிய குண்டொன்றைப் போட்டார். இரமணகிரிக்கும் சிவராசா அண்ணைக்கும் தலையில் யாரோ அடித்தது போல முகம் வெளிறியது. "சே, எவ்வளவோ கனவுகளோடு குடுத்த அப்ளிகேசன், யாரோ ஒருத்தருக்கு ஆவது கிடைக்கட்டும் எண்டெல்லாம் நினைச்சோம். எல்லாமே வீணாகிப் போச்சுதா அண்ணை..." என்று மனம் வெறுத்து இரமணகிரி கூறினான்.

சிவராசா அண்ணையும் நண்பரும் சிரித்தார்கள். அது வெறுப்பும் விரக்தியும் கலந்த சிரிப்பு. சிவராசா அண்ணை, "இப்பிடியெல்லாம் நடக்கிறது ஒண்டும் புதிசில்லை. எதுக்கும் நேரே போய் அறிய வேணும், அல்லது நமக்கு ஒரு கடிதமாவது வந்திருக்க வேணும். எதை வைச்சு முடிவு எடுக்க முடியும்?..." என வினா எழுப்பினார். வந்த நண்பருக்கு முகம் கறுத்துவிட்டது. தான் வந்து சொன்ன விடயத்தை முழுசாக நம்பவில்லையே என்ற ஆதங்கம் போலும் அந்த நண்பருக்கு.

இரமணகிரி, "அண்ணை எதுக்கும் முதல்ல அந்த எம்பியிடம் கேப்போம் யார் யாருக்குக் கிடைச்சது எண்டு..." எனக் கூறினான். அடுத்த நாள் இரண்டு பேரும் போய் எம்பியின் அலுவலகத்தில் விசாரித்தனர். அலுவலகத்தில் இரமணகிரியின் பற்றுச்சீட்டைப் பரிசீலித்துவிட்டுச் சொன்ன பதில் புதிராகவிருந்தது. உடனே அப்பதில் இரமணகிரிக்குத் தலையைச் சுற்றியது. அதாவது காணிகள் கிடைத்த ஒரு பகுதியினருக்குக் கடிதம் அனுப்பியிருக்கு. மீதிப் பேருக்குத் தீர்மானிக்கவில்லையாம். இரமணகிரிக்கு வந்த கோபம் தலைக்கேறியது. அங்கிருந்த அலுவலரிடம், "மீதிப் பேருக்கு எப்ப காணி கிடைக்கும்...?" என இரமணகிரி கேட்டான். அலுத்துக் கொண்ட அலுவலர், "தம்பி, எம்.பி.யின் சிபாரிசு எல்லாம் முடிஞ்சுது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்ப பைல்கள் மினிஸ்ரியில் இருக்கு. அவங்கள் தான் காணி குடுக்கிறது. எங்களுக்குப் பதில் கிடைச்சால் உங்களுக்குக் கடிதம் போடுவோம்'' என்றார் பொறுமையாக.

அந்தப் பதில் இருவருக்கும் ஒருவகையில் ஆறுதலையளிக்க வீட்டுக்குத் திரும்பிவரும் வழியில் ஆதிகோணேஸ்வரர் கோவிலுக்குச் சென்றனர். மிதிவண்டியில் வந்த களைப்பாற முதலில் கால், கை அலம்பி தண்ணீர் குடித்துவிட்டு ஆலயத்தை வழிபட்டனர். அப்போதுதான் சிவராசா அண்ணை, "இந்தக் கோயிலின்ர வரலாறு சரித்திர காலத்துக்கு முற்பட்டது. கோணேஸ்வரத்துக்கு முன்பு கட்டிய கோயில் இது... அப்பாடா எத்தினை ஆயிரம் வருசம்...'' எனக் கோயிலின் தொன்மையின் தன்மையைச் சொன்னார்.

இரமணகிரி வீட்டுக்கு வந்ததும் அவசரமாகக் கடிதம் எழுதித் தபாலிற் சேர்த்தான். காணி விண்ணப்பம் சம்பந்தமாய்க் கடிதம் ஏதும் வந்தால் உடனடியாகப் பதில் போடவும் அல்லது நேரில் வரவும் என விவரமாக இரமணகிரி கடிதத்திலே குறிப்பிட்டிருந்தான்.

நெல் விதைப்புக்காலம் ஆதலால் அட்டனுக்குப் போய்வர விரும்பாத இரமணகிரி மும்முரமாக நெல் விதைப்பிலே ஈடுபட்டான். அத்துடன் தனக்கு வயலிலே ஒத்தாசை செய்த பல அயலவர்களுக்கும் உதவிகள் செய்ததில் பல நாட்கள் வெகுவேகமாக ஓடிச்சென்றன.

நெற்பயிர் வளர்ந்து முற்றிய கதிர்கள் இடையிடையே தெரிந்தன. இதைக் கண்ட இரமணகிரிக்கு உற்சாகமும் மகிழ்ச்சியும் பொங்கின. விதை விதைத்த நாள் முதல் எப்போது முளைவிடும் என்று காத்திருந்து, பின்பு பயிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செழிப்பாய் வளர வேணுமே என்று எதிர்பார்த்து உரம், மருந்து பாவித்துக் கதிர்கள் முற்றிவருவது என்பதை நினைக்க இரமணகிரிக்கு நெஞ்சம் நிறைந்தது. கந்தளாய்க் குளத்துப் பாசனமும் உரிய நேரத்தில் கிடைத்தால் பயிரும் முற்றிய கதிர்களும் பார்ப்போரைப் பிரமிக்க வைத்தன. கடவுளே அறுவடை முடியும்வரை மழை பெய்க்கக்கூடாது என வேண்டி ஆலையடி பத்தினியம்மனை மனதாரப் பிரார்த்தித்தான். இம்முறை விளைச்சலும் விலையும் சாதகமாய் அமைய, இலாபம் அள்ளிக்குவித்தது. அதுபோல் தம்பலகாமத்தைச் சூழ்வுள்ள கிராம விவசாயிகள் மகிழ்ந்தனர்.

## 7

இளங்காலை நேரம் தேயிலைத் தோட்டப் பகுதி யெங்கும் சுறுசுறுப்பான மக்கள் நடமாட்டம் காணப் பட்டது. பள்ளிக்கூட மாணவர்கள், தோட்டத் தொழிலாளர்கள் என அவசரமாக நடந்து சென்றனர். தேயிலைத் தோட்டத் தொழிற்சாலை வாசலில் சிலர் நின்று ஏதோ பேசிக்கொண்டார்கள். அப்போது அங்கு வந்த லட்சுமியும் தேவிகாவும் அவர்களுடன் சேர்ந்துகொண்டு ஏதோ முக்கியமான விடயத்தைப் பற்றி மெல்லிய குரலில் பேசினார்கள். அப்போது அங்கு வந்த முதியவர் ஒருவர், இவர்கள் இரகசியம் பேசுவதை அறியாமல் உரத்த குரலில், “ஏய் புள்ளை லட்சுமி, இண்டைக்கு இவர் முதலாளி வருவாரா அதைப் பற்றிப் பேச...” என இழுத்தார்.

அங்கே கூடநின்ற ஒருவர் “உஷ்... உஷ்...” என்று கைமூலம் சைகை காட்டினார். அதைப் புரிந்தவராய் முதியவர், அருகில் சென்று மெதுவாகப் பேசினார். சிறிது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரத்தில் எல்லோரும் தொழிற்சாலைக்குள் சென்று தமது கடமைகளை ஆரம்பித்தார்கள். மதியம் போல் அலுவலகச் சிற்றூழியர் வந்து லட்சுமியையும் தேவிகாவையும் அலுவலகத்திற்கு வருமாறு அழைத்துச் சென்றார். தோட்ட முதலாளியின் முன்பு இருவரும் அமர்ந்தபோது சிற்றூழியர் அங்கிருந்து வெளியேறினான். பிறகு முதலாளி பேச ஆரம்பித்தார். பல பிரச்சினைகள் பற்றி இரு தரப்பும் பேசிக் கொண்டனர். அப்போது தேவிகா "ஒரு முக்கியமான விசயத்தைப் பற்றிப் பேச இருக்கிறோம்" என்றாள் துணிவாக! முதலாளி ஆச்சரியத்தோடு "தேவிகா சொல்லு என்ன விசயம்?" என வினாவினார்.

தேவிகா லட்சுமியின் கையில் இரகசியமாகச் சுரண்டிவிட்டு "நாம ஒரு தொழிற்சங்கம் வைக்கவேணும் எண்டு கோரிக்கை வைச்சோம். இதுவரையில் பதில் உங்க பக்கத்திலிருந்து வரவேயில்லை. நாம இங்கே வேலைக்கு வரமுன்பே எத்தனையோ வருசமா கோரிக்கை வைச்சும் பிரயோசனமில்லை... இது உங்களுக்குத்தான் தெரியும்" என்றாள் ஆணித்தரமாக. தோட்ட முதலாளிக்கு முகம் கறுத்துவிட்டது. அதற்குள் லட்சுமி, "தொழிலாளர் சங்கம் எண்டு ஒன்று இருந்திருந்தால் இவங்க இரண்டு பேருக்கும் இவ்வளவு துணிச்சல் வந்திருக்குமா நீங்களே சொல்லுங்க. உங்க தாமதம் உங்களுக்கே கெட்ட பெயரையும் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பின்மையையும் உண்டு பண்ணுது" என விளக்கம் சொன்னாள்.

இதுவரை வாளாவிருந்த முதலாளி "தொழிற்சங்கம் இருந்தால் உருப்படியாகத் தொழிலைச் செய்ய முடியாது. தொழிலாளர்கள் அடிக்கடி வேலை நிறுத்தம், ஊக்கத் தொகை குடு, லாபத்திலை பங்கு எண்டு துவக்கினால் தேயிலைத் தோட்டத்தை இழுத்து மூடவேண்டியதுதான்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று முணுமுணுத்தார். தேவிகா விடவில்லை, "ஒரு முதலாளியைப் பற்றிச் சொல்லுறீங்களே. நூற்றுக்கணக்கான தொழிலாளர்களையும் குடும்பங்களையும் பற்றி நினைத்துப் பாருங்க" என்று பதிலடி கொடுத்தாள்.

லட்சுமி குறுக்கிட்டு, "சரி, சரி எதுக்கு வாதம்? நீங்க குடுக்கிற காசை நாம வாங்கவேணுமென்றால், தொழிற் சங்கம் தொடங்கச் சம்மதிக்க வேணும். இல்லையெண்டால் சட்டரீதியாக, நாம் இப்பிரச்சினையை அணுகுவதைவிட வேறு வழியில்லை..." என்று சொல்லிவிட்டு அமைதி யானாள். அப்போது தோட்ட முதலாளி தர்மசங்கடமான நிலையில் இருந்தார்.

லட்சுமிதான் அமைதியைக் கலைத்து, "இந்தத் தொழிற் சங்கவிடயத்தில் எல்லாத் தொழிலாளர்களும் உறுதியாகவே நிற்கிறோம். உங்கள் முடிவில்தான் நம்ம எல்லோரின் எதிர்காலமும் இருக்கு..." என்றாள். தோட்ட முதலாளி எழுந்து அலுவலகத்தின் குறுக்கே அங்கும் இங்கும் நடந்தபடி யோசித்தார். சில நிமிடங்களின் பின் "இது சம்பந்தமாய் ஒரு முடிவு இன்றே எடுப்போம், அதுக்கு நேர அவகாசம் தேவை. போய் வேலையைச் செய்யுங்கள். நானே கூப்பிடுகிறேன்" என்று சொன்னார். லட்சுமியும் தேவிகாவும் "சரி" என எழுந்து வேலைக்குச் சென்றார்கள்.

தோட்ட முதலாளி அலுவலக நிர்வாகிகளுடன் இரகசியக் கூட்டம் நடாத்திவிட்டுத் தொழிற்சாலைக்குள் வந்து அனைவரையும் ஒன்றுகூடுமாறு அறிவித்தார். முழுத் தோட்ட தொழிலாளர்களும் தமது கடமைகளை முடித்து விட்டு ஒன்றுகூடினார்கள். தொழிலாளர்கள் மத்தியில் ஒரே பரபரப்பு. தோட்ட முதலாளி சம்பளத்தைக் கூட்டித்தரப் போறாரா? தொழிற்சங்கம் கேட்டோமே அதுவா? இல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த சுப்பவைசரும் மத்த ஆளும் பற்றி ஏதாவது சொல்லப் போறாரோ? என ஆளுக்கு ஆள் பேசிக்கொண்டார்கள்.

தோட்ட முதலாளி பேசுகையில் "நீண்ட நாளாக இருந்த உங்க கோரிக்கையான தொழிற்சங்கம் தொடங்க இந்த நிர்வாகம் இணங்கியுள்ளது" என்றார். உடனே தொழிலாளர்கள் மகிழ்ச்சி பொங்கக் கரகோசம் செய்து ஆர்ப்பரித்தார்கள். தோட்ட முதலாளியும் வேறு வழியில்லாமல் தானும் அவர்களோடு சேர்ந்து கைதட்ட வேண்டியதாயிற்று.

அலுவலகத்தினுள் அழைத்த முதலாளி லட்சுமியையும் தேவிகாவையும் பார்த்து ஒரு பத்திரத்தை நீட்டி, "இதை நல்லா வாசியுங்கோ விளக்கம் தேவையெண்டால் கேளுங்கோ தாராளமாக..." என்றார். பத்திரத்தின் பிரகாரம் சுப்பவைசரும் உதவியாளரும் மேற்கொண்ட அடாவடி சம்பந்தமாய் தொழில் நீதிமன்றத்துக்குப் போனால் எவ்வளவு நட்ட ஈடு கிடைக்குமோ அதேயளவு தொகையை நீதிமன்றத்திற்குப் போகாமலே நிர்வாகம் வழங்க முன்வருகிறது என்றிருந்தது. இருவரும் தோட்ட முதலாளியிடம் மேலதிக விளக்கம் கேட்டபோது அவர் தெளிவுபடக் கூறினார். அதற்குச் சம்மதித்த இருவரும் மகிழ்வுடன் ஒப்பமிட்டு அப்பத்திரத்தை ஒப்படைத்தனர்.

தொழிற்சாலை வாசலில் வேலை முடிந்தவுடன் வழக்கமாக ஒன்றுசேர்ந்து வீட்டுக்குத் திரும்பும் பெண்கள் பலர் புறப்பட்டார்கள். வரும் வழி நெடுக கிடைத்த நட்ட ஈட்டுப் பணத்தைப் பற்றியே பேசினார்கள். லட்சுமியும் தேவிகாவும் தங்கள் லயத்தடிக்கு வந்தபோதுதான் மனம் விட்டுப் பேசமுடிந்தது. லட்சுமி "பாத்தியா தேவிகா இவளவை எல்லாருக்குமே எங்களுக்குக் கிடைச்ச காசு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணை உறுத்துகிறதோ? எனச் சினம் கொண்டாள் பொய்க் கோபத்தோடு. தேவிகா சிரித்தபடி, “இந்தா பாரக்கா இந்தப் பொய்க் கோபம் எல்லாம் வேண்டாம். நமக்குக் காசு கிடைச்சது சந்தோசம்தானே. பிறகு என்ன? இதை வைச்சுப் பிழைக்கிற வழியைப் பாப்பம்” என்ற போது லட்சுமியும் வாய்விட்டுச் சிரித்தாள்.

அப்படியே இருவரும் பேசிக்கொண்டு தேவிகாவின் லயத்தினுள் நுழைந்தார்கள். அப்போது காவேரியும் தாய் மருதம்மாவும் லயத்து வாசலில் காத்து நின்றனர். தேவிகாவைக் கண்டதும் காவேரி தாங்க முடியாத மகிழ்ச்சியிலே ஓடிவந்து தேவிகாவின் கையைப் பிடித்துக் கொண்டு “பாத்தியாடி உன் கவலையெல்லாம் ஒரே நாளில் இப்பிடியொரு அதிஷ்டம் வந்து இல்லாமல் போச்சுதே” என்றாள். காவேரியைக் கண்டதும் உணர்ச்சி வசப்பட்ட தேவிகாவின் கண்களிலே ஆனந்தக் கண்ணீர் கொட்டியது.

மருதம்மா, “சரி சரி முதல்ல எல்லாரும் உள்ளே வாங்க” என்றபோது உள்ளே வந்தார்கள். அப்போதுதான் தேவிகா தன் கண்களைத் துடைத்துவிட்டு, “அடி காவேரி ஞாபகமிருக்கா, லட்சுமியக்கா முன்பு ஒருநாள் வந்து கதவைத் தட்டினபோது எல்லோரும், லட்சுமி வந்து கதவைத் தட்டியதால் செல்வம் வரப்போகுது என்று கிண்டலடிச்சோம்” என்று கேட்டாள். எல்லோரையும் பார்த்துவிட்டு, “லட்சுமியக்காவின் வாக்குப் பொய்க்கவே யில்லை” என்று ஒரு குரல் கேட்டுத் திரும்பியபோது அனைவரும் கிருஷ்ணியைக் கண்டார்கள். “அது சரியடி காவேரி எங்களுக்கு நட்ட ஈடு கிடைச்ச கதை எப்படி உங்களுக்குத் தெரிஞ்சுது...” என லட்சுமி வினாவினாள். “இந்த மலை முழுக்க எல்லாருக்கும் தெரியும் இந்தக் கதை, லயத்துக்கே ஆக்கள் வந்து விடுப்புப் பாத்தாங்கள் பாரேன் லட்சுமி” என்று மருதம்மா அதற்குப் பதில் அளித்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தனையையும் அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்த சண்முகம், “லட்சுமி இந்தத் தொகைக்காசு உங்கள் இரண்டு பேருக்கும் கடவுள் தந்ததாய் நினைச்சு இதை ஒரு முதலாக வைச்சு இரண்டு பேரும் முன்னேற வேணும். இப்பிடிக் கிடைக்கிறது பெரிசில்லை. அதைப் பிரயோசனமாக்கிறதுதான் பெரிய வேலை. உங்க திறமையை அதிலை காட்டுங்க” என்று குட்டிப் பிரசங்கம் செய்தார். “அண்ணை இதைப் பற்றித்தான் தேவிகாவும் நானும் பேசிக்கொண்டு வந்தோம்” என்றாள் லட்சுமி.

“நம்மளப் போல ஏழையளுக்கு இது ஒரு பெரிய தொகைக்காசுதான். இதை வைச்சு ஏதாவது சின்னத் தொழில் செய்யலாமே தவிர வீடு கட்டப் பத்தாது...” என்றாள் காவேரி. “எங்க கதைகளை யாராவது கேட்டால் சிரிப்பாயிருக்கும். இந்த யானையைப் பாத்த குருடன் வர்ணிச்சது போல ஆளுக்கு ஒண்டு சொல்லுறம். என்ன செய்யவேணும் எண்டு யாருமே சொல்லவில்லை” எனச் சொல்லிவிட்டுக் கொல்லென மருதம்மா சிரித்தாள். அப்போது சண்முகம் “நீங்க எதுக்கும் கிராம சேவையாளரைச் சந்திச்சு அரசாங்க உதவி ஆலோசனை இவை ஏதாவது எப்படிக் கிடைக்கும் எண்டு விசாரியுங்கோ. அவரின் ஆலோசனை உதவும்...” எனக் கூறினார்.

கிராம சேவையாளரிடம் சென்று ஆலோசனை கேட்டபோது அவர், “உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்குப் போய் தொழில்நுட்பவியலாளரைக் கண்டு பேசுங்கோ...” என்று சொல்லி சிபாரிசுக் கடிதம் கையிலே கொடுத்துவிட்டார். தொழில்நுட்பவியலாளரின் வழிகாட்டலில் கோழிப் பண்ணை அமைக்க லட்சுமி சம்மதித்தாள். கிடைத்த காசில் அரைவாசியை முதலிட்டபோது முதலில் சிறிய கோழிக்கூண்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணையை ஆரம்பித்தாள். லட்சுமியின் லயத்து வாசலிலே இருந்த வெறுங்காணியை குத்தகைக்கு எடுத்திருந்தாள்.

நாட்கள் வேகமாக ஓடின. லட்சுமி இருபத்து நான்கு மணி நேரமும் ஓய்வு இன்றி உழைத்தாள். காலையில் தொழிற்சாலைக்குப் புறப்பட முன்பே கோழிப் பண்ணையின் வேலைகள் அனைத்தையும் முடித்து விடுவாள். மாலையிலே வீட்டிற்கு வந்ததும் கோழிப் பண்ணையிலே அதிக நேரத்தைச் செலவு செய்தாள். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் கோழிப்பண்ணை மிக நன்றாக வளர்ச்சி காண ஆரம்பித்தது. இதைப் பொறுக்காத சிலர் பொறாமை பொங்க "ஏய் லட்சுமி, கோழிப்பண்ணையிலை நிக்க நேரமில்லை எண்டெல்லாம் சொல்லுகிறாய். பிறகு எதுக்கு தோட்ட வேலை, பேசாம அதை விடு..." என்றெல்லாம் சொன்னார்கள்.

ஆனால் லட்சுமியோ அரசனை நம்பிப் புருசனைக் கைவிட்ட கதை நினைவுக்கு வந்தபோது எத்தனை கஷ்டம் வந்தாலும் தோட்ட வேலையை விடக்கூடாது என மன உறுதி கொண்டாள். கோழிப்பண்ணை ஒரு வகை வியாபாரம் போன்றது. ஒருநாள் எழலாம், இன்னொரு நாள் விழலாம். அதை மட்டும் நம்பி இருக்கிற தோட்டத் தொழிற்சாலை வேலையை விட்டு விட முடியாது என்றெல்லாம் அடிக்கடி நினைத்துக் கொள்வதுண்டு.

பல வருடங்களாக லட்சுமியின் கணவர் வீட்டைக் கவனித்ததில்லை. ஏதோ கிடைக்கிற கூலி வேலையைச் செய்வது, காசு இருக்கிற நேரம் குடிப்பது, இருக்கிற சாப்பாட்டைச் சாப்பிட்டுவிட்டு படுத்துறங்குவது என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்திருந்த மனிதர் இப்போது மீதிக் காசிருந்தால் அதைப் பக்குவமாய் லட்சுமியிடம் கொடுத்துவிடுகிறார். லட்சுமி எவ்வளவோ நேரம் மணிக்கணக்கிலே கோழிப்பண்ணையில் வேலை செய்தாலும் ஒரு தரமாவது எட்டிக்கூடப் பார்க்காத கணவர் இப்போதெல்லாம் லட்சுமிக்கு ஒத்தாசை செய்கிறார். இவற்றையெல்லாம் லட்சுமி கவனிக்காமலில்லை. முதலில் இம்மாற்றம் ஏதோ புரியாத புதிராக இருந்தது. சொல்லப்போனால் லட்சுமிக்குத் தன் கண்களையே நம்ப முடியவில்லை.

ஏதாவது வியாழக்கிரக மாற்றம் அல்லது சனிக்கிரக இடப்பெயர்ச்சி வந்துவிட்டதோ என்று லட்சுமி பலமுறை நினைத்துத் தனக்குள் சிரித்ததுண்டு. திருந்தவே மாட்டாரா? என நினைத்து ஏங்கியிருந்தபோது இப்படியாவது திருந்தியதே பெரிய விடயமாக லட்சுமிக்கு மனதிலே தெரிந்தது.

மலையகத்திலே ஆண்களிடம் காணப்படும் பொது வானதொன்று என்றால் இந்தக் குடிப்பழக்கம்தான். வசதியுள்ளவனிடம் ஏன் குடிக்கிறாய் என்றால் குடித்தால்தான் சமூகத்திலே மதிப்பு என்கிறான். கஷ்டப் பட்ட ஏழைக் கூலித் தொழிலாளி மிக மலிவான சாராயத்தைக் குடிக்கும்போது ஏன் குடிக்கிறாய்? என்றால் உடம்பு அசதிக்குக் குடிக்கிறேன் என்கிறான். மொத்தத்திலே குடிப்பதற்குப் பானத்தைத் தேடுவதைவிடக் குடிப்பதற்குக் காரணத்தைத் தேடுவதில் ஆண்கள் அதிக நேரம் செலவிடுகிறார்கள் போலும்.

லட்சுமியின் மகன் மட்டும் இடையிடையே தாய்க்கு உதவிகள் செய்து வந்தான். இப்போது உதவிகள் அதிகம் என்பதால் லட்சுமிக்கு ஒரு நிம்மதி கிடைத்தது. கோழிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணையிலிருந்து முட்டையும் அதிகளவில் வரத் தொடங்கியது. ஆரம்பத்திலே முத்தையாபிள்ளையின் கடைக்குக் கொஞ்ச முட்டைகளை ஒவ்வொரு நாளும் விற்கக் கொடுத்தாள். இப்போது அட்டன் நகரம் மற்றும் பல பகுதிகளுக்கும் முட்டைகளை அனுப்பி வியாபாரத்தைப் பெருக்க வழி பிறந்துள்ளது. கையிலே காசுப் புழக்கம் தாராளமாக இருந்தது. அப்படியிருந்தும் தோட்டத் தொழிற்சாலை வேலைக்குக் கிழமையில் இரு நாட்களாவது சென்றாள்.

மிகக் குறுகிய காலப்பகுதிக்குள் தன்னிடம் உள்ள காசைப் பயன்படுத்தித் தன்னை வளர்த்துக்கொண்ட லட்சுமியை நினைக்கும் போதெல்லாம் தேவிகாவின் எண்ணங்கள் அலைபாயச் செய்தன. அதேயளவு தொகைப் பணம் எனக்கும்தான் கிடைத்தது. அதை அப்பிடியே வங்கியில் வைப்பிலிட்டு விட்டுச் சாதாரணமாய் வேலைக்குப் போய் வருகிறேனே. லட்சுமியோ இன்று ஒரு குட்டி முதலாளியாளி விட்டாள். இந்தத் தோட்ட வேலையிலே கிடைக்கிற அற்ப சம்பளம் அவளுக்கு ஒரு தூசு மாதிரி. லட்சுமியக்காவைப் போல நானும் இருக்கிற காசை ஏதாவது முதலீட்டில் போட்டேயாக வேண்டும். லட்சுமியக்காவிற்குப் பரவாயில்லாமல் வியாபாரம் நடக்கிறது இலாபத்தோடு.

தேவிகாவின் மனதின் இன்னோர் மூலையிலே வித்தியாசமான கேள்வி ஒன்று எழாமல் இல்லை. முதலிட்ட வியாபாரம் இலாபம் வராமல் நட்டமானால் செய்வதற்கு எதுவும் இல்லாமல் போகலாம். உண்மையிலே முதலிட விரும்புபவர்கள் நட்டத்தை நினைத்துப் பயந்தால் உலகத்திலே வியாபாரம் என்ற ஒன்று இருக்குமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதாவது வியாபாரம் எப்படித் தொடங்குவது என்று அடிக்கடி லட்சுமியக்காவிடம் தேவிகா கேட்பதுண்டு. அவளோ சிரித்துவிட்டு "அவங்கள் சொன்ன ஆலோசனையை வைத்துக் கோழிப் பண்ணை துவக்கினேன். வியாபாரம் பரவாயில்லை. எனக்கு இதைத் தவிர வேறு வியாபாரம் பற்றி எதுவும் தெரியாது தேவிகா. வேண்டுமென்றால் சொல்லு, திரும்பவும் ஆலோசனைக்கு என அவனிடம் போய்க் கேட்போம். உனக்குப் பிடிச்சால் வியாபாரத்தைத் தொடங்கு" என உற்சாகம் ஊட்டினாள்.

தொழில்நுட்பவியலாளரின் ஆலோசனைகளைக் கேட்ட தேவிகாவுக்கு எந்தத் துறையிலே காசை முதலீடு செய்வது என மனம் அலைந்தது. "உனக்குப் போட்டியாகக் கோழிப் பண்ணை துவங்கமாட்டேன்" எனத் தேவிகா லட்சுமியிடம் சொல்லிவிட்டுச் சிரித்தாள்.

தேவிகாவுக்குக் காவேரி சொன்ன சில விடயங்கள் நினைத்துப் பார்க்ககூட முடியாதவை எனத் தோன்றியது. "பலசரக்குக் கடை முத்தையாபிள்ளை அண்ணை போல் கடை ஒன்று திறந்துபாரடி எப்பிடிப் பெரிய முதலாளி யாகிறாய் நீ என்று" எனக் காவேரி சொல்லியிருந்தாள். "நம்ம குடும்பமே வந்து உன் கடையைப் பாக்கும், நீ முதலாளியாய் இருந்து கொள்ளடி..." என்றெல்லாம் ஆசையின் எல்லைக்கே அவளைக் காவேரி இழுத்துப் பார்த்தாள். "போடி பலசரக்குக்கடை நமக்குத் தோது வராது, வேறு ஏதாவது வராமலா போகும்" எனப் பதிலை உடனுக்குடன் தேவிகா சொல்லிவிட்டாள்.

தேவிகாவின் பெயருக்கு வந்த அக்கடிதம் வீட்டில் உள்ளோர் அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. தம்பல காமத்துக்கருகே கப்பல் துறையில் அரசாங்கக் காணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைப்பதை நினைக்க தேவிகாவிற்குத் தானும் உலகத்தோடு சேர்ந்து சுற்றுவது போலிருந்தது. சண்முகத்தை உதவிக்குக் கூட்டிக்கொண்டு தம்பலகாமத்திற்குப் புறப்பட்டாள்.

## 8

**தே**விகா முன்பு கொழும்புக்குப் போய் வந்தபின் புறப்படும் பயணம் இதுவே. அட்டனிலிருந்து திருகோணமலைக்கு வந்து, பின் தம்பலகாமம் சென்றனர். சண்முகம் பயணத்தில் நன்கு களைத்துவிட்டார். பேருந்து திருகோணமலையை நோக்கிச் செல்லும்போது வீதியின் இருபுறமும் வயல்வெளிகள் நீண்டு காணப்பட்டன. தேவிகாவுக்கு இவையெல்லாம் புது அனுபவமாயிருந்தது.

தம்பலகாமத்தையடைந்தபோது இருவரையும் இரமணகிரி தன் வீட்டிற்குக் கூட்டிச் சென்றான். இரமணகிரியின் வயலின் செழிப்பைக் கண்ணுற்ற தேவிகா, “இதுக்கெல்லாம் எவ்வளவு செலவாகுது?” என்றெல்லாம் கேள்விகள் கேட்டாள். அடுத்த நாள் கப்பல்துறைக் கிராமத்திற்குப் போய் தேவிகாவிற்குக் கிடைத்த காணியைப் பார்த்தனர். வயற்காணிக்குள் காலடி எடுத்து வைத்ததும் தேவிகாவிற்குக் கண்கள் கலங்கின. சண்முகம் இதைக் கண்டும் காணாதது போலிருந்தார்.

காணியைப் பொறுப்பேற்கும் பத்திரங்களில் கையொப்பமிட்டபின் கிராமநல சேவையாளர் வந்து வயற்காணியின் தன்மைகளைப் பற்றிய விளக்கம் அளித்தார். தேவிகாவின் காணி இரமணகிரியின் வயற்காணியை விடப் பெரியதாகவும் வளமான மண்ணைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுமிருந்தது. மரங்களோ பற்றைகளோ எதுவுமின்றிச் சமதரை நிலமாக நெற்செய்கை, தென்னைச் செய்கைக்கு உகந்தது எனச் சிபாரிசு செய்யப்பட்டிருந்த நிலமாதலால் தேவிகா, இரமணகிரியின் ஆலோசனையையும் நாடினாள். இரண்டு பயிரையும் சம அளவில் பயிரிடுவது எனத் தேவிகா தீர்மானித்தாள். உழுது மண்ணைப் பதப்படுத்திப் பயிர்ச் செய்கைக்குத் தேவையான ஒழுங்குகளை இரமணகிரி செய்தான்.

தேவிகாவின் வயலையொட்டிய அயலவர்கள் தங்கள் நிலத்தை உழுது மண்ணைத் தயாராக்கிவிட்டனர். சில வயல்களில் மண்ணின் தன்மைக்கேற்றதாய் தென்னங்கன்றுகள் நட்டிருந்தனர். ஆங்காங்கே சிறு சிறு குடிசைகள் வயலோரங்களில் காணப்பட்டன.

தேவிகா தன் குடிசையையும் அயலவரின் குடிசைகளுக்கு அண்மையில் அமைத்தாள். அப்போதுதான் சண்முகத்தைப் பார்த்து தேவிகா “இனிமேல் எனக்கு இதுதான் வீடு. மலை நாடும் தேயிலைத் தோட்டமும் நாம பிறந்த மண்தான், வளர்ந்ததும் அங்கேதான். ஆனால் சொந்தமாய் ஏதுமில்லையே நமக்கு” என்றாள். அதைக் கேட்ட இரமணகிரி “அது மட்டுமா, எங்களைப் போல லட்சக்கணக்கில் தோட்டத் தொழிலாளரை மலை நாட்டிலிருந்து அடிச்சு விரட்டியும்விடச் சதி நடக்குது. இதுக்குத்தான் சில நேரங்களிலை லயன்கள் எரிப்பு, கோவில் உடைப்பு என்று திட்டம் போட்டு அரசாங்கமே பெரும்பான்மை இனக் கைக்கூலியளை வைச்சுச் செய்விக்கிறான்” என்று தன் மனக்குமுறலைச் சொன்னான். சண்முகம், “ஆளுங்கட்சி எண்டு சேந்து அமைச்சர் பதவியில் உள்ளவங்களும் கூட அநியாயத்தைத் தட்டிக் கேட்க முடிவதில்லை” என்று ஒரு போடு போட்டார். தேவிகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரிச்சலோடு, "இப்பிடிச் சொல்லிச் சொல்லியே நம்ம காலமும் முயற்சியும் வீணாகுது" என்றாள்.

தம்பலகாமத்திற்கு வந்து பல நாட்களாகுது, வீட்டிலே உதவிக்கு என யார் இருக்கிறார்கள்? என்ற கேள்வி சண்முகத்தின் மனதிலே நிழலாடியது. சற்று அமர்ந்து யோசித்தார். வந்த நோக்கம் பிரயோசனமாயிருக்குது, தேவிகாவின் காணி விடயம், உழவு என்று எவ்வளவோ செய்தாச்சு. தேவிகாவைத் தனியே விட்டு வர மனமில்லாமல் மனம் தவித்தது. எதற்கும் இரமணகிரியுடன் ஆலோசிப்போம் என நினைக்கத் தேவிகா எதிரில் வந்தாள். "அங்கே லயத்தில வீட்டுக்காரருக்கு வேறை உதவியில்லை. நீங்க போய்ட்டுவாங்க. நான் வயலைப் பாக்கிறேன்" என்று தேவிகா சொன்னாள். இதைக் கேட்டதும் சண்முகத்திற்குப் புதிய தெம்பு ஏற்பட்டது. தேவிகா தன்னைத்தானே சமாளிக்கக் கூடியவள். தானே தனித்து நிண்டு இந்த வயலைச் செய்ய வந்தவள். உதவிக்கு இரமணகிரியும் இருக்கிறான். அவசர ஆபத்திற்கு உதவி செய்வான். இப்படியெல்லாம் சண்முகத்தின் உள்மனம் தன்னைத்தானே தேற்றிக் கொண்டது.

இரமணகிரியிடம் இதுபற்றிப் பேசியபோது அவன் "சரி சரி" என்று தலையசைத்தான். மறுநாளே சண்முகம் புறப்பட்டார். திருகோணமலைக்கு வந்து பேருந்தில் தந்தையை வழியனுப்பிய இரமணகிரிக்கு மனம் "திக் திக்" என அடித்துக் கொண்டது. விடைகாண விழைந்தான், முடியவில்லை. வீட்டுக்கு வந்து நினைத்துப் பார்த்தான். அப்போதுதான் தேவிகாவின் ஞாபகம் வர, அவளும் ஒரு காரணமே என உணர்ந்தான். தேவிகாவின் பாதுகாப்பைப் பார்த்துக் கொள்ளும்படி தகப்பன் சொல்லாமல் சொல்லிச் சென்றிருக்கிறார் எனப் புரிந்துகொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவிகாவைப் பற்றிச் சிறிய வயது தொடக்கம் நன்றாகத் தெரியும். காவேரியின் பால்ய சிநேகிதி மட்டுமல்ல, சிறிய வயதிலே தாயை இழந்தவள். இருக்க இடம் தேடி வந்தபோது காவேரியுடன் தங்கிவிட்டாள். சித்தியின் கொடுமையால் காவேரியிடம் தஞ்சமடைந்தவள். சூது வாது தெரியாதவள், தன் சொந்தக் காலிலே நிற்கவேண்டும் என்று வாழத் துடிக்கும் ஓர் கடும் உழைப்பாளி. இவள் தன்னைப் பாதுகாத்துக் கொள்வாள். ஆனால் வெளிப்படையாக ஓர் பாதுகாவலன் தேவை. அந்த வேலை தன் தலை மேல் விழுந்துவிட்டது போல மெல்ல மெல்ல இரமணகிரி தெரிந்து கொண்டான்.

இதைத்தான் சிவராசா அண்ணை தேவிகாவுக்குக் காணி கிடைச்சதும் சொன்ன முதல் வார்த்தை, ஆரம்பத்தில் இதன் முழு விவரத்தைப் பற்றி இரமணகிரி சிந்திக்கவே யில்லை. ஏதோ சிவராசா அண்ணை வழக்கம்போல கிண்டல் செய்கிறார் என்றுதான் இரமணகிரி நினைத்த துண்டு.

தேவிகாவும் சண்முகமும் தம்பலகாமத்திற்கு வந்து சேர்ந்து இத்தனை நாட்கள் தங்கியிருந்து பின் சண்முகம் மட்டும் புறப்படும் வரை இப்பிரச்சினை இரமணகிரியின் மனதிற்குப் புலப்படாத ஒன்றாகவேயிருந்து விட்டது. அதுகூட, தகப்பன் திருகோணமலையில் பேருந்தில் ஏறுமுன் சொன்னபோதுதான் சிந்திக்க ஆரம்பித்தான். தகப்பன் சண்முகம் “இரமணகிரி, பாவம் தேவிகா, தான் தனிமையாக இருக்கிறேன் கமத்திலே எண்டு நினைக்கக் கூடாது. தேவையான உதவியள் செய்ய வேணும். அவளுக்கு அக்கம் பக்கத்து வயல்காரர் நல்ல உதவி செய்வாங்கள்தான். ஆனால் தெரிஞ்ச ஒரு ஆள் செய்யிற உதவி மாதிரி வருமா?” என்று பொதுவாகத்தான் சொல்லிவிட்டுச் சென்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானே வலியப் போய், “ஏதும் உதவி தேவை யெண்டால் சொல்லு” என்று தேவிகாவிடம் சொல்லிவிட்டு வரலாம். தேவிகாவின் வயலில் ஏராளம் களைகள் பெருகியிருந்தன. யாராவது அதைச் சொல்லிக்காட்டாமல் அது அவளுக்கு என்னவென்றே தெரியாது. முதலில் தயங்கிய இரமணகிரி “சரி பார்ப்போம்” என நினைத்துக் கொண்டு மிதிவண்டியிலேறி தேவிகாவின் வயலுக்குச் சென்றான். அங்கே அவன் கண்டகாட்சியை அவனால் நம்ப முடியவில்லை. வயலிலே பயிர்களிடையே முளைவிட்ட களைகளைத் தானே பக்குவமாகப் பிடுங்கிய தேவிகா வரம்புகளில் முளைத்த புற்களையும் அகற்றிக் கொண்டிருந்தாள். இரமணகிரியைக் கண்டதும் புன்னகைத்த தேவிகா “வா இரமணகிரி, எப்பிடியிருக்குது வயல்? எனக்குப் புது அனுபவம்...” எனக் கேட்டாள்.

இரமணகிரி மிதிவண்டியை அவளின் குடிசையருகே நிறுத்திவிட்டு வரம்புகளில் நடந்து வந்தான். இரமணகிரி “எப்பிடிப் பாத்தாலும் உனக்கு இது புது அனுபவம் மாதிரித் தெரியவேயில்லை. அனுபவசாலி மாதிரி வயலை நல்லாகத்தான் தேவிகா நீ செய்யுறாய்...” என்று சொன்னான். “அதை நீ சொன்னாச் சரிதான், உன் அனுபவம் என்ன? என் அனுபவம் என்ன?” என்று தேவிகா புதிர்போட்டாள்.

தேவிகா மீண்டும், “ஏதோ கடவுள் புண்ணியத்திலை அயல் வயல்காரர்களின் குடும்பம் எனக்கு எவ்வளவோ பெரிய உதவியள் செஞ்சிருக்கினம்” என்று சொன்னாள். “அதில்லை தனியாகக் குடிசைக்குள் இருக்கிற நேரம், வலு கவனமாயிருக்கவேணும்” என்று இரமணகிரி சொன்னான். இதைக் கேட்டதும் அவள் அஞ்சுவது கண்டு “அதில்லை தேவிகா, நான் பயப்படுத்த மாட்டன், ஆனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எச்சரிக்கையாயிருக்க வேணும்'' என்று மீண்டும் சொன்னான். அப்போது தேவிகா, "இரவு நேரம் எனக்குத் துணையாகப் பக்கத்துவயல் பாட்டி வந்து படுப்பா, அது பெரிய ஆறுதல்...'' என்றாள். இதைக் கேட்டதும் இரமணகிரிக்கும் நிம்மதியாகவிருந்தது. "அப்பா உன்னைப் பார்த்துக் கொள்ளச் சொன்னார்'' என்றான். தேவிகா துடுக்கென "அப்பா சொல்லாமல் உதவி செய்ய மாட்டியோ இரமணகிரி?'' என்று கேட்க, இரமணகிரி திகைத்து நின்றான். அதற்குள் தேநீர் தயாரித்து இரமணகிரியிடம் கொடுத்தாள். வயல் விடயமாகக் கொஞ்ச நேரம் பேசிவிட்டு இரமணகிரி புறப்பட்டான்.

மிதிவண்டியை மிதித்தபடி இரமணகிரி தன் எண்ணங்களை அலைபாய விட்டான். மலைநாட்டிலை பிறந்த நம்ம பொம்புளைப்புள்ளை வாழ்க்கையில எவ்வளவு கஷ்டங்களைத் தாண்டிக் காணி எடுத்துத் தனியாளாக நிண்டு வயல் செய்ய வந்திருக்கிறாள். மனதிலே துன்பங்களையும் துயரங்களையும் சுமந்தவள், இதனால் எதையும் தாங்கும் இதயத்தோடு துணிந்து ஆண்களுக்கு நிகராய் வேலை செய்கிறாள். இது சில ஆண்களால் கூட முடியாத ஒன்று. சிறு தோல்வி கண்டதும் துவண்டுபோய் விடுபவர்களுண்டு. கையாலாகாதவராய் தன்னுயிரை மாய்ப் பவருமுண்டு. "இதற்கு மேல் என்னால் முடியாதப்பா'' என்று விட்டுச் சோம்பேறியாய் இருப்பவர்களும் நிறையவுண்டு. இந்த இந்த வேலைகள் ஆம்பிளையளுக்கு மட்டும், மற்ற வேலைகள் பொம்பிளையள் மட்டுமே செய்யவேணும் என்று நினைக்கும் மாந்தர்களுக்கு நடுவே தன்னம்பிக்கையை மூலதனமாகவும் துணிவைத் துணையாகக் கொண்டு எதிர்காலத்தை வெற்றிப்பாதை யாகக் கொண்டு வாழும் தேவிகா பெண்களுக்கு இலக்கணமாகிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதி கண்ட புதுமைப் பெண்ணாய் இவள்தான் அவதரித்து விட்டாளோ என நினைத்த இரமணகிரியின் மனதிலே அவள் கம்பீரமாய் நின்றாள். அப்போது இரமணகிரியின் எண்ணத்திலே இன்னுமோர் கேள்வி முளைவிட்டது. இவள் தேவிகாவோ ஓரளவுதான் படித்தவள். ஆனால் இவளின் சாமர்த்தியத்தால் நன்றாக உழைத்து சீராகவும் சிறப்பாகவும் நிர்வகிக்கிறாள். இவள் இன்னும் நன்கு படித்திருந்தால், இவள் இருக்க வேண்டிய இடம் வேறு. ஆனால் அவள் பாவி என்ன செய்வாள்? வறுமை, அதுவும் இளமையில் வறுமை கொடுமையிலும் கொடுமை. குடும்பத்தின் சீரற்ற நிலமை, தாயும் இறக்க, சித்தியின் கொடுமை வேறு. விரக்தியின் விளிம்பினிலே நின்றவளுக்கு ஆறுதலும் அபயமும் அளித்தவள் நண்பி காவேரியே. இரமணகிரிக்குத் தேவிகாவைப் பற்றி நினைக்க நினைக்க உள்ளம் பூரித்துப் பெருமையாயிருந்தது. அதுவும் சிறு வயது முதல் பழகிய பெண் என்பதால் மகிழ்ச்சி இரட்டிப்பாகத் தெரிந்தது.

நெற்கதிர்கள் முற்றிப் பார்ப்பதற்கு பளபளவென வயல்களில் எங்கும் தெரிந்தன. அறுவடை நெருங்குவதால் உழவர்கள் அது பற்றிய ஏற்பாடுகளில் மிகவும் மும்முர மாயிருந்தார்கள். சிவராசா அண்ணை அப்பகுதியிலே முதன் முதலிலே தனது வயலில் அறுவடையைத் தொடங்கினார். கூலியாட்கள் சிலரோடு அயல் வயற்காரர்களும் ஒத்தாசை செய்ய அறுவடையை ஒருவாறு சிவராசா அண்ணை முடிக்க முடிந்தது. இரமணகிரியும் தேவிகாவும் நாள் முழுவதும் நின்று உதவிகளைச் செய்தார்கள்.

தேவிகாவுக்கு உள்ளூரப் பயம் ஏற்பட்டது. சிவராசா அண்ணையும் இரமணகிரியும் ஏதோ கொஞ்சக் காலமாவது இங்கு வயல் செய்த பழக்கத்தில் இவ்வளவு பெரிய உதவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்தது. நானோ நேற்று வந்தவள். ஏதோ ஓரளவுதான் ஊரில் பழக்கம் இருக்கு. பொதுவாகச் சொன்னால், ஊருக்குப் புதுசு. யார் எவர் வந்து உதவுவார்களோ எனும் பயம் ஏற்பட்டபோது சிவராசா அண்ணையும் இரமண கிரியும் வயலிலே நிற்கும்போது அது பற்றிச் சொன்னாள்.

அவர்கள் இருவரும் சிரித்துவிட்டு, "தேவிகா நீ பயப்படாதே, நெல்லுவெட்டுற நேரம் பார், எவ்வளவு பேர் வந்து உதவி செய்வினம் எண்டு. இந்தத் தம்பலகாமம், ஊரின் பெருமை அது. யாரையும் தனியாகக் கஷ்டப்பட விடமாட்டார்கள். ஏதோ விதத்தில் உதவி செய்வார்கள்" என்று விளக்கம் அளித்தனர். இதைக் கேட்டதும் தேவிகாவிற்குச் சற்று நிம்மதி பிறந்தது.

சில வாரத்தில் அறுவடையும் வந்தது. தேவிகா ஓடியாடித் திரிந்து ஒருவாறு வேலையை முடித்தாள். "சிவராசா அண்ணையும் இரமணகிரியும் பாடுபட்டதால் தேவிகாவுக்குச் சுமை தெரியவில்லை" என இருவரையும் அயலவர் ஒருவர் வாயாரப் பாராட்டினார். நெல்லின் விலை ஏறுவது போல் இருந்தாலும் கொள்வார் குறைவால் தேவிகா மொத்த வியாபாரிகளிடம் விற்றுவிட்டாள். காசும் உடனேயே கிடைத்ததால் மகிழ்ச்சியில் தேவிகா திளைத்தாள். தாங்க முடியாத மகிழ்விலே காவேரிக்குக் கடிதம் எழுதினாள். தம்பலகாமத்திற்கு வந்து சில மாதங்கள்தான் கழிந்திருக்கின்றன. ஆனால் காவேரிக்கு எழுதிய கடிதங்கள் பல. கடிதம் கிடைத்ததும் காவேரியும் பதில் போட்டு விடுவாள்.

காவேரி எழுதும்போது, "போடி உனக்கென்னடி நெல்லை விதைச்சுப்போட்டு, காகம் குருவி வராமல் பாத்துக் கொண்டேயிரு" என்று எழுதுவாள். பதிலுக்குத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவிகா எழுதும்போது "நீ சமைச்சுச் சாப்பிட்டுவிட்டு றேடியோ கேட்டுப் பொழுது போக்காமல் ஒரு வேலையைத் தேடடி" என்று குறிப்பிடுவாள். காவேரி இரமணகிரிக்குக் கடிதம் எழுதுவது குறைவு. தாய் மருதம்மாள் ஏதாவது விடயம் எழுதச் சொன்னால் எழுதுவாளே தவிர மற்றும்படி மிகக் குறைந்தளவிலேயே கடிதப் போக்குவரவு இருந்தது.

## 9

இரமணகிரி பற்றிய புதினங்கள் கூட தேவிகாவின் கடிதம் மூலமே காவேரி அறிந்து வீட்டில் சொன்னாள். அப்போதுதான் ஒருமுறை சண்முகம் சொன்னார், "பாத்தியா இவன் இரமணகிரி தம்பலகாமம் போய் எத்தனை வருசமாகுது. இதுவரை எத்தனை கடிதம் போட்டிருப்பான்? ஏதும் அவசர விசயம் மட்டும் கடிதமாய் எழுதினான். விசயம் புதினம், சுகம் பற்றி எழுதுவதுமில்லை, எங்களைப் பற்றிக் கேட்டு எழுதுவதுமில்லை. இப்ப தேவிகா போய் தன்ரை விசயத்தையும் இவனின் புதினத்தையும் சேத்து எழுதுகிறாள். ஆண்பிள்ளைக்கும் பெண்பிள்ளைக்கும் வித்தியாசம் தெரியுதா?" எனக் குட்டிப் பிரசங்கமே செய்தார். மகனைக் குறை சொல்ல முடியுமா தாய் மருதம்மா முன்பு? மகனை விட்டுக்கொடுக்க விரும்பாமல் "இரமணகிரிக்கு அங்கே என்ன வேலையோ? வயல் வேலை எண்டாச் சும்மாவா? இங்கே தோட்டத்து வேலை மாதிரியா? அதுதான் கடிதம் அடிக்கடி எழுதவில்லையோ யார் கண்டது..." எனச் சமாளித்தாள்.

இந்த வேடிக்கைகளையெல்லாம் பார்ப்பதையே வாடிக்கையாகக் கொண்ட கிருஷ்ணி குறுக்கிட்டு, "அது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியம்மா, தேவிகா அக்காவும் அதேயிடத்திலைதானே இருக்கிறா? வேலையளும் அதே மாதிரி வேலையள்தான்" என அவள் கூறினாள். இவற்றையெல்லாம் கேட்டுவிட்டுக் காவேரி "சரி ஏதோ புதினத்தோடை ஒரு கடிதம் வருகுதே, அது போதும்" என்று கூறிச் சம்பாசனைக்கு முற்றுப் புள்ளியிட்டாள்.

அன்றிரவு மருதம்மாவுக்கு நித்திரை வரவில்லை. அவளையறியாத ஒரு சஞ்சலம் மனதை நெருடி நின்றது. இரமணகிரிக்கோ காவேரிக்கோ கல்யாண ஏற்பாடுகள் ஏதுமின்றி அப்படியே இருக்கிறது. முதலில் ஒருவர் கலியாணம் செய்ய. மற்றவருக்கும் அதில் நாட்டம் வரும் என மருதம்மா தீர்மானித்தாள். இனியும் வைச்சுப் பார்க்க முடியாது. இந்த நினைவுகளை அணைக்கத் தூக்கமே வந்து விட்டது.

நாட்கள் சில நத்தைக்கதியிலே நகரக் காவேரிக்கு மாப்பிள்ளை பார்க்கும்படி தரகர் ஒருவரிடம் சண்முகம் விவரங்கள் கொடுத்திருந்தார். அடிக்கடி புறோக்கர் வந்து போன பின்பு ஒரு மாப்பிள்ளையைப் பேசினார்கள். ஆனால் முடிவாகவில்லை. "மாப்பிள்ளையைப் பற்றி விசாரிக்க வேண்டும் என்று அதுக்கு இரமணகிரிதான் சரி" என்று சண்முகம் சொல்ல, எல்லோரும் ஏற்றுக் கொண்டனர்.

அன்று மாலை எல்லோரும் வீட்டிலேயிருந்தார்கள். லயக்கதவைத் தட்டும் சத்தம் கேட்டுக் கிருஷ்ணி கதவைத் திறந்தாள். வாசலிலே இரமணகிரி, தேவிகா, சிவராசா அண்ணை என மூவர் சிரித்தபடி நின்றனர். கிருஷ்ணிக்கு அதிர்ச்சி, "அண்ணை" என்றபடி அவள் உள்ளே வர மூவரும் லயத்தினுள் நுழைந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் மூவரும் திடீரென வந்ததில் காவேரிக்கு மனதிலே ஒரு சந்தேகம் கிளம்பியது. சில விநாடிகள் யாரும் எதுவுமே பேசவில்லை. ஒரே நிசப்தம் நிலவ, சண்முகம் "என்ன தம்பி சிவராசா, திடீரெண்டு அதுவும் மூண்டு பேர் வந்திருக்கிறீங்க..." என்று பீடிகை போட்டார். ஏதோ விதத்தில் மருதம்மாவுக்கு மகனைப் பார்த்ததிலே ஒருவகைத் திருப்தி. தேநீர் தயாரிக்கச் சமயலறைக்குள் சென்றாள். தேவிகாவும் காவேரியும் தாய் போவதையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

தேநீரைப் பருகியபடி வயல் பற்றிய புதினங்களைப் பேசிய சிவராசா அண்ணை திடீரென மருதம்மாவைப் பார்த்து, "இரமணகிரிக்குக் கலியாணம் பேச வேண்டியதுதானே, வருமானம் இருக்கு, பிறகு என்ன..." என்று கேட்டார். சில விநாடிகள் எவருமே பேசவில்லை. அப்போது சண்முகம், "அண்ணன் தங்கை இரண்டு பேருக்கும் பேசிச் செய்யவேணும், எது முதல்ல வருகுதோ அதைச் செய்ய இருக்கிறோம்..." என்றார். குறுக்கிட்ட மருதம்மா, "சிவராசா, காவேரிக்கு ஒண்டு சரிவந்திருக்கு, மாப்பிள்ளையைப் பற்றி விசாரிக்க இரமணகிரியைக் கூப்பிட இருந்தோம். அவனே வந்து நிக்கிறான். அவனுக்கும் கலியாணம் செய்துவைக்க வேணும், காலம் வரவேணுமே" என்று தன் ஆதங்கத்தைக் கொட்டினாள்.

இதைக் கேட்ட சிவராசா அண்ணை சிரித்துவிட்டு, "அக்கா, கையில் வெண்ணெயை வைச்சுக் கொண்டு நெய்க்கு அலைஞ்சானாம் ஒருத்தன். அந்தக் கதை மாதிரியிருக்குதே..." எனப் பீடிகை போட்டார். அங்கிருந் தோர் அனைவரும் சிவராசா அண்ணையைப் பார்க்க, சண்முகம் புன்னகைத்தபடி, "தம்பி நீ என்ன சொல்லப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போறாய் எண்டு தெரியுது. சரி, உன் வாயால சொல்லு'' எனச் சொன்னார். அதற்கு மேலும் விடயத்தை இழுத்தடிக்கக் கூடாது என நினைத்த சிவராசா அண்ணை, "சரி இப்ப இரமணகிரியைத் தேவிகாவுக்குச் செய்தால் என்ன? உங்க விருப்பத்தை வெளிப்படையாகச் சொல்லுங்கோ'' என்றார். இரமணகிரியும் தேவிகாவும் நாணிக்கோணித் தலையைக் கவிழ்ந்திருந்தனர். சில விநாடிகள் நிசப்தம் நிலவியது.

இரமணகிரிக்கும் சரி, தேவிகாவுக்கும் சரி என்ன பேசுவது எனத் தெரியவில்லை. மகனின் கலியாண விடயத்தை மகனை வைத்துக்கொண்டு மூன்றாவது ஆள் முன்னிலையில் பேச சண்முகத்திற்கும் மனம் ஏவவில்லை. சிவராசா அண்ணர் முன் பெற்றோர் தர்மசங்கடப்படுவதை இரமணகிரி உணர்ந்து கொண்டான். எவருமே சந்தேகிக்காதவாறு "கடைக்குப் போய்வாறேன்...'' என்று சொல்லி அவ்விடத்தைவிட்டு அகன்றான். காவேரி மெதுவாகத் தேவிகாவின் கையைப் பிடித்து இழுத்தபடி சமையலறைக்குள் சென்றாள்.

இப்போது சிவராசா அண்ணைக்கும், சண்முகம், மருதம்மாவுக்கும் நடுவே யாரும் இல்லை. சுதந்திரமாகப் பேசிக்கொண்டார்கள். அதே நேரம் சமையலறையில் தேவிகாவும் காவேரியும் இரகசியம் பேசிக்கொண்டனர்.

சிவராசா அண்ணைக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. எந்தவொரு ஆட்சேபணையுமின்றித் தேவிகாவை இரமண கிரிக்குக் கல்யாணம் செய்யச் சம்மதம் தெரிவித்தனர். சிவராசா அண்ணை சண்முகத்தையும் மருதம்மாவையும் பார்த்து, "ஒரு நல்ல நாளைப் பாப்போம்'' என்றபோது அவர்கள் சம்மதித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*திடீரென அவர்கள் முன்பு வந்து நின்ற காவேரி மூவரையும் மாறி மாறிப் பார்த்தாள். காவேரி பேசினாள், "அது சரி, இவள் தேவிகா யாரோ ஒருத்தனை விரும்பியிருக்கிறாள். வருசக்கணக்கா அதை வெளியில சொல்லாமல் மறைக்கிறாள். கேட்டால் அப்பிடி ஒண்டுமில்லையாம், மழுப்புகிறாள், அவன் யார் ஆள் எண்டு கேட்டால் பதில் இல்லை. இரமணகிரிக்கு நிச்சயம் பண்ண முன்னமே அந்த இரகசியம் வெளிவரவேணும். இவள் எனக்குச் சிநேகிதி, கட்டப்போறது என் அண்ணன். பிரச்சனை பிறகு வரக்கூடாது. நீங்களே இப்ப இதைத் தெளிவுபடுத்தி விட்டுக் கல்யாணத்துக்கு நாள் பாக்கலாம்தானே..." எனப் படபடவெனப் பொரிந்து தள்ளினாள். மூன்று பேருக்கும் முகம் கறுத்துவிட்டது. ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். தேவிகாவோ என்ன சொல்வது எனத் தெரியாமல் தர்மசங்கடமானாள். சொல்ல வேண்டியதை இப்போது சொல்லாவிட்டால் பிரயோசனமில்லாமல் போய்விடுமே என்று நினைத்த தேவிகா "நான் ஒரு விசயத்தைச் சொல்லப் போறேன்" என்று கூறினாள். மூவருமே அவளை வித்தியாசமாய் உற்றுப் பார்த்தார்கள்.*

*தேவிகா தொடர்ந்தாள், "இவள் காவேரியை ஒருத்தர் விரும்புகிறார். ஆனால் அவர் என்னையே தூது அனுப்பினார். எத்தனையோ முறை இவளுக்கு அவரைப் பற்றிச் சொல்லியும் இவள் அதை அலட்சியப்படுத்தி விட்டாள். அவருடன் நான் இதைப்பற்றிப் பேசியது பற்றிக் கேள்விப்பட்ட இவள் காவேரி, என்னையும் அவரையும் காதல் கீதல் எண்டு சொல்லி அவரின் உண்மையான காதலை அலட்சியம் செய்கிறாள். இப்ப பாத்துக்கொண்ட மாப்பிள்ளையை விட எவ்வளவோ நல்லவர். சொல்ல வேண்டியது எனது கடமை. இனி நீங்களாவது அவளாவது*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசி நல்ல முடிவை எடுங்களேன்'' என்று தெளிவாகச் சொன்னாள். மூவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டிருக்க இரமணகிரியும் அங்கு வந்தான்.

“அம்மா, நாம காவேரிக்குப் பாத்த மாப்பிள்ளை பற்றி விசாரிச்சேன். நல்லபடியாகப் பதில் கிடைச்சுது. நேரில பாத்துக் கதைச்சதாய் தெரிஞ்ச ஆள் ஒருத்தர் சொன்னார். அடுத்தது என்ன செய்யவேணும்?'' என இரமணகிரி கேட்டான்.

அப்போது அங்கிருந்த புத்தகம் ஒன்றினுள் இருந்து கடித உறை ஒன்றை எடுத்து, கிருஷ்ணி நீட்டினாள். தேவிகா, “என்ன இது ஆருக்கு வந்த கடிதமிது...?'' எனத் தயக்கத்தோடு அதை வாங்கினாள். கிருஷ்ணி கண்ணால் ஜாடை காட்டிவிட்டு, “அக்கா உள்ளே என்ன இருக்கு பார்'' என்று சொல்லிவிட்டுக் கலகலவெனச் சிரித்தாள். உடனே தகப்பன் சண்முகம் முகத்தைச் சுளித்தார். மருதம்மா கிருஷ்ணியைப் பார்த்து, “நீ சின்னப்பிள்ளை உனக்கு இங்கே என்ன வேலை? பாக்கிற வேலையைப் போய்ப்பார் கிருஷ்ணி” என்றாள். கிருஷ்ணியோ பொய்க் கோபத்தோடு, “அது சரி, இந்தச் சின்ன லயத்துக்குள்ளே நான் எங்கே போவேன்...'' எனக் கேட்டுவிட்டு அவ்விடத்தைவிட்டு அகன்றாள். அவள் சொன்னதில் உள்ள நியாயத்தன்மையைப் புரிந்தவர்களாய் ஐந்து பேரும் வாளாவிருந்தார்கள்.

கடித உறையுள்ளே இருந்த புகைப்படம் ஒன்றைத் தேவிகா வெளியே எடுத்தாள். படத்தைப் பார்த்ததும் அதிர்ச்சியில் விழி கொட்டாது உற்றுப் பார்த்தாள். தாடியுடனும் அழுமூஞ்சியுடனும் இதே ஆளைப் பார்த்த ஞாபகம் தேவிகாவுக்கு வந்தது. ஆமாம், காவேரிக்குத் தூது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகக் கேட்டவர்தான். இப்போது தாடியில்லாது சின்ன மீசையுடன் இலட்சணமாய்ப் படம் எடுத்துக் கலியாணம் பேசிவருகிறாரா? தேவிகாவுக்குப் புரிந்துவிட்டது. இதைத் தெளிவாகப் புரியவைத்தே ஆகவேண்டும். இல்லையேல் சந்தேகம் போன்ற நோய்கள் வீணாகத் தொற்றிக்கொள்ள நேரிடும். பிறகு வாழ்க்கையே வீணாகிவிடும்.

தைரியத்தை வரவழைத்துக் கொண்டு தேவிகா, "இப்பத்தான் தெரியுது, என்ன நடந்தது எண்டு. நான் வேலைக்குப் போற நேரம் அடிக்கடி வந்து காவேரிக்குத் தூதுபோகக் கேட்டவர்தான் இந்தப் படத்தில் உள்ளவர். அவர் என்னோடை கதைச்சதைப் பாத்த யாரோ போய் காவேரியிடம் சொல்ல, காவேரி எனக்கு அவரோட காதல் கீதல் எண்டு சந்தேகப்பட்டாள். அவர் சொல்லச் சொன்னதைச் சொல்லியும் கேட்காமல் என் மேல் வீண் சந்தேகப்பட்டாள். இப்ப அவரே முறையாகக் கலியாணம் பேசி வந்திருக்கிறார். நீங்க விசாரிச்சதில் உங்களுக்கும் பிடிச்சிருக்கு எண்டு கேள்வி" எனக் கூறினாள்.

இதைக் கேட்ட காவேரி நாணிக்கோணித் தலை கவிழ்ந்து நின்றாள். தேவிகா படத்தைக் காவேரியின் முகத்திற்கு நேரே நீட்டி "பாத்தியாடி அவர்தான் இவர், இவர்தான் அவர் தெரியுமா...?" என்றாள் கேலியாக. எல்லோருமே வாய்விட்டுச் சிரித்த ஆரவாரம் அடங்க முன்வாசல் கதவைத் திறந்துகொண்டு லட்சுமியும் கிருஷ்ணியும் லயத்தினுள் வந்தனர்.

அப்போது தேவிகா, "லட்சுமியக்கா நீயும் நல்ல நேரத்திலை சொல்லிவைச்ச மாதிரி வாறாய்..." எனப் பீடிகை போட்டாள். உடனே எல்லோரும் லட்சுமியைப் பார்த்தபோது லட்சுமிக்கு எதுவுமே புரியவில்லை. தேவிகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“இதை எப்படிச் சொல்வது?” என்று யோசித்தாள். சிரித்துவிட்டு, “அக்கா, ஞாபகமிருக்கா இவரை” என்று சொல்லிக் கொண்டு படத்தைக் காட்டினாள். லட்சுமி படத்தைப் பார்த்துவிட்டு, “இவற்ரை படம் எப்பிடி இங்கே வந்தது, காவேரியும் இவரும்...” என இழுத்தாள். அதற்குள் தேவிகா “லட்சுமியக்கா அப்பிடியொண்டு வரமுன்னமே கல்யாணம் பேசிவந்தார். எல்லாம் பேசித் தீர்மானிச்சாச்சு. காவேரியும், இவர்தான் எண்டு தெரியாமலே படத்தைப் பாத்துச் சம்மதிச்சாள்” என்று சொல்லிச் சந்தேகத்திற்கு முற்றுப்புள்ளியிட்டாள். சண்முகம், மருதம்மா, இரமணகிரி மற்றும் சிவராசா அண்ணை ஆகியோர் மூன்று பெண்களையும் மாறி மாறிப் பார்த்தார்கள். அப்போது இரமணகிரி, “படத்திலை வாறமாதிரி ஒவ்வொரு கட்டமும் வந்துபோகுது, அடுத்த சீன் என்ன?” என்று கேட்க அங்கு அமைதி நிலவியது.

அப்போது லட்சுமி மருதம்மாவிடம் போய், “தேவிகாவும் சரி, காவேரியும் சரி, ஒருத்தரை ஒருத்தர் விட்டுக்கொடுக்காத நல்ல சிநேகிதியள் பாத்தியா அக்கா...” என்றாள். அப்போது சிவராசா அண்ணை “இரண்டு பேருக்கும் கலியாணமும் ஒரே நேரத்திலை நடக்கப் போகுது, இது கூட ஒற்றுமைதானே” என்று சொல்ல “சரியாகச் சொன்னீங்கண்ணே” என்றாள் லட்சுமி. இயல்பாக எழுந்த நாணத்தால் தோழியர் இருவரும் நாணினர்.

“சரி, இனி மாப்பிள்ளை வீட்டுக்காரரோடு பேச வேண்டியதைப் பேசுவோம்” என்றார் சண்முகம். “வந்தாலும் வந்தீங்க ஒரு கிழமையாவது இங்க தங்கக் கூடாதா...?” என்று மருதம்மா சிவராசா அண்ணையைப் பார்த்துக் கேட்டாள். “தம்பலகாமத்தில ஒரு ஆளாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிண்டால் மற்ற ஆக்கள் வெளியிலை போகலாம் வரலாம். ஆனால் மூண்டு பேரும் வந்திருக்கிறோம். வயலைப் பாக்கிறது யார்? என்ர பெண்டாட்டி மூண்டு வயலையும் சமாளிக்க மாட்டா.... நான் நாளைக்கே போகவேணும். இரமணகிரியும் தேவிகாவும் தாராளமாக நிண்டு தங்கிய பிறகு வரட்டுமே'' என்று சிவராசா அண்ணை தனது நிலமையை விளக்கினார்.

அப்போது தேவிகா தயங்கியபடி, "என்ர சித்திக்கு இந்தக் கலியாணம் பற்றி அறிவிக்க வேணும்...'' என்று கூறினாள். அப்போ குறுக்கிட்ட காவேரி, "ஏனடி இவ்வளவு காலமும் கவனிக்காதவங்க இனிவந்து என்ன அப்பிடிக் கிழிச்சுக் கொட்டப் போறாங்க, உன்ர கலியாணத்திலை", என்று சீறினாள். அப்போது சண்முகம், "காவேரி இந்த விசயத்திலை தேவிகாவின் விருப்பப்படி செய்வோம், என்னதான் இருந்தாலும் சிறிய தாய் எண்டால் அவதான். எங்களோட கூட இருந்ததுக்காக நாமளே சொல்லாமல் கொள்ளாமல் கல்யாணத்தைச் செய்து வைக்கிறது தேவிகாவுக்கு அழகல்ல...'' என்று சொன்னபோது யாரும் எதுவும் எதிர்வாதம் பேசவில்லை. சில விநாடிகள் நிலவிய மௌனத்தைத் தேவிகாவின் விசும்பல் ஒலி கலைத்தது. "அம்மாவும் இல்லாமல் பிறகு அப்பாவும் இல்லாமல் இருந்த எனக்கு ஒரே ஆறுதல் சித்திதான். வீட்டை விட்டுத் துரத்திவிட்டதோட சரி, இதுவரை எனக்கு என்ன நடந்தது எண்டுகூடப் பாக்க வரவில்லை. ஆனால் என்ர கடமை சொல்லியே ஆகவேணும். வந்தால் வரட்டும் இல்லையெண்டால் விட வேண்டியதுதான்'' என்று சொல்லிச் சொல்லி தேவிகா அழுதாள். அப்பொழுது இரமணகிரி, "அழாதே, இப்ப நல்ல விசயம்தானே நடக்குது. ஏன் அழுகை? பழசுகளை மறந்துவிடு தேவிகா...'' என்று ஆறுதல் சொன்னான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10

அனல்காற்று அடித்தபோது, “காலநிலை எப்படி யிருக்கும்” என நினைத்துக்கொண்டு இரமணகிரி வீட்டுக்கு வெளியே வந்து பார்த்தான். வானமோ நிர்மலமாகக் காட்சியளித்தது. நட்சத்திரக் குவியல்களும் அவற்றை மறைக்கும் சிறு சிறு வெண் முகில்களுமே தெரிந்தன. வயல்வெளியூடாக இவையெல்லாம் தெளிவாகத் தெரிந்தன. புழுக்கத்தைத் தணிக்க குளிர் காற்று அல்லது மழை நன்றாகத் தேவைப்படுகிறது. வயல்கள் அறுவடையோடு நிற்கின்றன. அறுவடையின் போது, “கோணேஸ்வரத்தானே, மழை வராமல் அறுவடையைப் பார்த்துக் கொள்” என்று வேண்டினார்கள். இப்போது உழுதுவிடலாம் என்றால் நிலம் காய்ந்துவிட்டது. மண்ணில் கொஞ்சம் கூட ஈரமில்லை.

நாட்கள் சில கடந்த பின்பும் புழுக்கம் குறைந்தபாடில்லை, அதிகரித்துவிட்டது. ஆனால் முகில்கள் கறுத்து மழைக்கேற்ற அறிகுறிகள் தெரிந்தன. மாலை நேரம் மெல்ல மெல்லத் தூறலுடன் துவங்கி மழையாகப் பொழிந்தது. விவசாயிகள் அனைவருக்கும் மகிழ்ச்சி பொங்கியது. மழை வரும் வரை புற்கள் காய்ந்ததால் கால்நடைகள் அவற்றையும் வைக்கோலையும் உண்டன. பச்சைப் புற்கள் காண்பதற்கரியதாகி விட்டன.

மண் ஈரமானதால் உழவு வேலைகள் மும்முரமாகின. சிவராசா அண்ணை ஒழுங்கு செய்த உழவு யந்திரம் மூலம் மூவரின் வயல்கள் உழுது பண்படுத்தப்பட்டன. “அடுத்த போகச் செய்கைக்கு இப்பொழுது முதல் மண்ணைப் பண்படுத்த வேண்டும்” என இரமணகிரி தேவிகாவுக்கு ஆலோசனை சொன்னான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொழுதுதான் தேவிகா தனக்குக் கடிதம் வந்ததை நினைவூட்டினாள். "அப்பிடியா? யார் போட்ட கடிதம் காவேரியா?" என இரமணகிரி கேள்வியால் குடைந்தான். "என்ன அவசரம்? சொல்லவிடுங்கோ விசயத்தை, காவேரிக்கு அடுத்த மாதம் கலியாணத்துக்கு நாள் வைச்சிருக்கு எண்டு காவேரிதான் போட்ட கடிதம் அது" எனத் தேவிகா சுருக்கமாகச் சொன்னாள். அப்போது இரமணகிரி, "காவேரி கடிதத்தை எனக்கு எழுத வெக்கப்பட்டு தேவிகாவுக்கு எழுதியிருப்பாளோ" என மனதுக்குள் நினைத்தான். அதற்குள் முந்திக்கொண்ட தேவிகா "கடிதம் எனக்கு மட்டுமில்லை, உங்களுக்கும் சேர்த்துத்தான் காவேரி எழுதியிருக்கிறாள்" என்றபோது தான் தனது ஐயம் நீங்கியது என நிம்மதியடைந்தான். வந்த கடிதத்தை வாங்கி வாசித்தான். அப்பொழுதுதான் அதிர்ச்சியானதொரு தகவல் கடிதத்தில் இருந்தது. "தேவிகா இதையும் வாசித்தியா" என பதைபதைத்தபடி கேட்டான். "என்ன? நான் முழுவதும் வாசிக்கேல்லை, சரி நீங்களே வாசியுங்கோ" என்றாள்.

"வேறை ஒண்டுமில்லை, நம்ம லட்சுமியக்காவின் கோழிப்பண்ணையை சிங்களக் காடையர் கோஷ்டி எரிச்சுப்போட்டாங்களாம். பல லட்சம் நட்டம் எண்டு எழுதியிருக்கு" என வாசித்ததைச் சொன்னான். தேவிகா பதைபதைத்தபடி, "ஐயோ லட்சுமியக்கா பாவம், இப்ப தான் காசு கையில வர கோழிப்பண்ணையைத் தொடக்கி நல்லாயிருக்கிறா எண்டு சந்தோசப்பட்டோம். அதுக்குள்ள இப்பிடி ஒரு கேடா? இந்த அநியாயங்களுக்கு முடிவில்லையா?" எனத் தன் ஆதங்கத்தைச் சொன்னாள். முகத்திலே சோகத்தை அள்ளி அப்பிவிட்டது போல இரமணகிரியின் முகம் கறுத்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரமணகிரியின் மனம் லட்சுமியக்காவின் குடும்பப் பின்னணியை வலம் வந்தது. உழைக்க வேண்டும் என்ற எண்ணம் எள்ளளவும் இல்லாத கணவனையும் உதவி செய்வதற்கு இயலாத உறவினர்களையும் கொண்டதுதான் இலட்சுயமிக்காவின் குடும்பம். கூலி வேலை செய்து குடும்பத்தைக் கட்டியிழுத்தபோதுதான் தோட்ட நிர்வாகம் நட்ட ஈடாக ஒரு தொகைக் காசு கொடுத்ததும், கோழிப்பண்ணை ஆரம்பித்ததும், அவனது மனதிலே நிழலாடின. நல்ல வருவாய் கிடைத்ததாகவும் கேள்விப்பட்டிருக்கிறான்.

"என்ன ஆழ்ந்த யோசனையோ?" என்ற குரல் கேட்டு விழித்த இரமணகிரி, தேவிகா தன் அருகே வந்து நிற்பதைக் கண்டான். "கவலைப்படாதேங்கோ, லட்சுமியக்கா எப்படியோ மீண்டு வந்திடுவா எண்ட நம்பிக்கை எனக்கு இருக்கு" எனத் தேவிகா ஆறுதல் சொன்னாள். "உண்மைதான் தேவிகா, அவ முயற்சியுடைய துணிஞ்ச பெண், இலேசில விழுந்து விடமாட்டா" என இரமணகிரி ஒப்புக்குச் சொன்னான். தேவிகாவுக்கு அது நம்பிக்கையை ஊட்டியது.

தனக்குக் கணவராகப் போகிறவர் என இரமணகிரியை நினைத்தபோது இயற்கையாகவே நாணம் தேவிகாவின் முகத்தைச் சிவப்பாக்கியது. இப்படியே எத்தனை நாளைக்கு வெட்கப்பட்டுக் கொண்டு இருப்பது என நினைத்தபோது இவற்றையெல்லாம் வாழ்க்கையிலே கடந்தேயாகவேண்டும் என உள்மனம் பேசியது தெளிவாகக் கேட்டது.

"சரி, இண்டைக்கு என்ன சமையல்...?" எனத் தேவிகா கேட்டாள். "அதுவா..." என்றபடி சிரித்த இரமணகிரி, "வேறை என்ன வழமையானதுதான்" என வார்த்தைகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுங்கினான். தேவிகாவுக்கும் அடக்க முடியாத சிரிப்பு வந்தது. "என்ன வழக்கமான ஆம்பிளைச் சமையல் தானே...?" எனத் தேவிகா கேட்டாள். இரமணகிரி சிரித்து விட்டுத் தலையை ஆட்டினான். தேவிகா, "நான் விளை மீனில் குழம்பு வைச்சேன். சாப்பிட்டுவிட்டுப் போங்கோ" எனக் கேட்டாள். இரமணகிரியின் மௌனத்தைச் சம்மதம் என அனுமானித்த தேவிகா அடுப்படியை நோக்கி நடந்தாள்.

வாரங்கள் சில உருண்டோடக் கடிதம் ஒன்று தேவிகாவுக்கு வந்தது. காவேரி பல விடயங்களை எழுதியிருந்தாள். அதிலே தனது கலியாணத் திகதியையும் வேறு பல தேவையான செய்யவேண்டிய ஒழுங்குகள் பற்றியும் விவரமாக எழுதியிருந்தாள். கலியாணத்துக்கு இரண்டு கிழமைக்கு முன்பாகவே வந்து எல்லா வேலையையும் செய்யக்கூடியதாக வந்து விடுங்கோ என இருவரையும் கேட்டு எழுதியிருந்தாள். பன்மையில் இருவரையும் அழைத்தது தேவிகாவுக்கு மனதுக்கு இதமாகவிருந்தது. சரி, கடித உறையைப் பார்ப்போம் எனத் திருப்பிப் பார்த்தால் திரு மற்றும் திருமதி தேவிகா இரமணகிரி என விலாசமிடப்பட்டிருந்தது. மனதுக்குள் எழுந்த களிப்பினால் உடலிலும் உற்சாகம் கரைபுரண்டது. இன்றே இதை இரமணகிரியிடம் காட்டவேண்டும், அவர் இதைப் பார்த்ததும் முகத்தில் என்ன மாற்றம் தெரிகிறது என்பதை நேரில் பார்க்கவேண்டும் போலிருந்தது. இதையும் சேர்த்து நினைத்தபோது வெட்கம் புன்னகையாக, உதட்டைப் பிதுக்கினாள் தேவிகா.

தேவிகா பலவழிகளிலும் சிந்தித்தாள். லட்சுமி அக்காவுக்கு நடந்தது நம்மைப்போல மலையகத் தமிழர்கள் எவருக்கும் நடக்கலாம். நடக்காது என எவராலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தரவாதம் தரமுடியாது. காலங்காலமாக தமிழர்களுக்கு எதிரான வன்முறை நடந்து கொண்டேயிருக்கிறது. இதற்கு உகந்த வழிகளில் ஒன்று தமிழர்களின் தாயகமான வட-கிழக்கு மாகாணங்களில் போய்க் குடியேறுவதுதான். எமது தாயகத்தில் இருக்கிறோம் என்ற நிம்மதியுடனாவது இருந்திடலாம். வடக்கு, கிழக்கிற்கு வெளியே தமிழர்களுக்கு அடி விழும்போது "அங்கே ஓடு" என்று சொல்லித்தானே அடிக்கிறார்கள். அதாவது உங்கள் தாயகத்தில் போய் இரு என்று சொல்லாமல் சொல் கிறார்கள். அதனால்தான் நானும் ஏதோ வந்துவிட்டேன். நிச்சயம் லட்சுமியக்காவும், வந்து குடியேறவேணும் நம்ம பகுதியிலே. இதை விளக்கமாகவும், வெளிப்படையாகவும் கடிதம் மூலம் லட்சுமியக்காவுக்குத் தெரிவித்தே ஆகவேண்டும். தேவிகாவின் மனம் ஒரு முடிவுக்கு வந்தது.

மனதுக்குள் எழுந்த உணர்ச்சிக் குமுறல்கள் ஆழி அலை போல ஆர்ப்பரித்து இடையிடையே கரையைத் தொடுவது போலிருந்தது. ஆழியின் அலைகளாவது கரையைத் தொடுகையில் வேகம் தணியும். ஆனால் தேவிகாவின் மனதிலே எழுந்த அலைகள் கரையைத் தொட மறுத்தன. நினைக்க நினைக்க சூறாவளிக்கு வந்த கடல் அலைகள் போல் எங்கே போவது எனத் தெரியாது சுழன்று சுழன்று மனம் அலைக் கழிந்தது.

ஆற அமர இருந்து நீண்ட கடிதமொன்றை எழுதி முடித்த தேவிகா வாசித்துப் பார்த்தபோது சில கண்ணீர்த்துளிகள் கடிதத்தில் விழுந்தன. தான் பட்ட துன்பங்கள் துயரங்களை எழுதியபோது வராத கண்ணீர், வாசித்தபோது வந்ததை நினைத்துப் பார்த்தாள். கடிதத்தின் கடைசி வரியாக "லட்சுமியக்கா இக்கடிதத்தின் நடுவே எனது கண்ணீர்த்துளிகள் விழுந்துவிட்டன. அவை சில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்துக்களை அழித்தும்விட்டன. அக்கா பாத்தியா, உனக்கு நடந்த அநியாயத்தைக் கேள்விப்பட்ட எனக்கே இவ்வளவு கண்ணீர் எண்டால், நீ எவ்வளவுக்கு அழுது கண்ணீர் விட்டிருப்பாய் எண்டு நினைச்சுப் பாக்க முடியவேயில்லை. இன்னும் எழுத எழுதக் கவலைகள் வளருமே தவிரத் தீரமாட்டா. எனவே, இத்துடன் முடித்துக் கொள்கிறேன்'' என எழுதி முடித்தாள்.

கடிதத்தை மடித்து உறையில் இட்டபின்தான், "இரமணகிரியிடம் கடிதத்தைக் காட்டினால் என்ன'' என்ற எண்ணம் தேவிகாவிடம் ஏற்பட்டது. அன்றே இரமணகிரியின் வயலுக்கு வந்தாள். அப்போது இரமணகிரி அங்கு இல்லாததால் வாசலில் போடப்பட்டிருந்த நாற்காலியில் அமர்ந்திருந்தாள். அப்போதுதான் சிவராசா அண்ணையின் மனைவி தங்கள் வீட்டிலேயிருந்து பார்த்தபோது தேவிகா தனியே அமர்ந்திருப்பதைப் பார்த்துவிட்டுக் கூப்பிட்டார்.

அப்போதுதான் தெரிந்தது இரமணகிரியுடன் சிவராசா அண்ணையும் சேர்ந்து வெளியே போயிருக்கிறார் என்று. சிவராசா அண்ணை வீட்டில் இருவரும் கதைத்துக் கொண்டிருந்ததில் நேரம் போனதே தெரியவில்லை. திடீரென, சிவராசா அண்ணையும் இரமணகிரியும் மிதிவண்டியில் வந்திறங்கினார்கள்.

மிதிவண்டியை நிறுத்திவிட்டு இரமணகிரி வரமுன்பே தள்ளாடியபடி சிவராசா அண்ணை வீட்டுக்குள் வந்து கொண்டிருந்தார். தேவிகாவிற்கு, "திக்திக்'' என மனம் பதைபதைத்தது. சிவராசா அண்ணை குடிப்பாரா? மனதுக்குள் பல நூறு கேள்விகள் ஒரே நேரத்தில் கேட்பது போலிருந்தது. தேவிகா, சிவராசா அண்ணையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவியைப் பார்த்தாள். அவரோ முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டார். தேவிகா வாசலைப் பார்த்தாள். இரமணகிரி தலையைக் குனிந்தபடி அமைதியாக உள்ளே வந்தான்.

தேவிகா இரமணகிரியைத் தன் பார்வையால் அளந்தாள். பார்வையின் அர்த்தத்தைப் புரிந்தவனாக இரமணகிரி தன் கையை விரித்து, "தனக்கு எதுவுமே தெரியாது" என்று சைகை காண்பித்தான். எங்கும் ஒரே நிசப்தம் நிலவியது. "சிவராசா அண்ணரின் மனைவி கோபமாக இருக்கிறார்" என்று சைகை மூலம் தேவிகா காண்பித்தாள். "இல்லை குடித்தது அவர்தானே" என்ற சைகையில் இரமணகிரி காண்பித்துவிட்டுத் திரும்பியபோது திடுக்குற்றான். இவர்கள் இருவரின் சைகை, சமிக்கைகளை சிவராசா அண்ணையின் மனைவி கண் இமைக்காது பார்த்துக் கொண்டேயிருந்தார். அந்தக் கோபத்திலும் இவர்களைப் பார்த்தபோது தன்னையறியாமல் சிரித்தார்.

அப்போதுதான் இது நல்ல சந்தர்ப்பம் என நினைத்த இரமணகிரி "அக்கா, இரண்டு பேரும் கடைக்குப் போனோம். நில் தம்பி ஒரு ஐஞ்சு நிமிசம் என்று போனவர் அவ்வளவுதான்..." என்று விளக்கம் கொடுத்தான். விளக்கத்தை ஏற்றுக் கொண்டவராய் மௌனமாக சிவராசா அண்ணரின் மனைவி நின்றார்.

இரமணகிரியின் வீட்டிற்கு நடந்து வரும்வரை இருவரும் எதுவுமே பேசவில்லை. முதலில் இரமணகிரி பேச்சை எடுத்தான். "என்ன தேவிகா என் மேல சந்தேகமா...?" என்று கேட்டான். "ஏன் கேக்கிறீங்க இப்பிடி...?" என்று தேவிகா திருப்பிக் கேட்டாள். "இல்லை நீ எனக்குக் கிட்ட வந்து கதைக்கிற சாட்டிலை மணந்து பார்க்கிற மாதிரியிருந்தது. அதுதான் கேட்டேன்" என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னான். "நீங்க குடிச்சாத்தானே மணக்கும், நீங்க குடிக்க மாட்டீங்க எண்ட நம்பிக்கை எனக்கு இருக்கு. கிட்ட வந்து கதைச்சது மணந்து பாக்க இல்லை. மற்றவையளுக்குக் கேக்கக்கூடாது, அதுக்காகத்தான்" என்று தேவிகா சொன்னாள். இந்த விடயத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கவேணும் என்று தேவிகா, "இந்தக் கடிதத்தை வாசியுங்க. எப்பிடியிருக்கு எண்டு சொல்லுங்க..." என இரமணகிரியிடம் கடிதத்தைக் கொடுத்தபடி கேட்டாள்.

"தேவிகா நல்லா எழுதியிருக்கிறாய். நான் லட்சுமியக்காவை நேரில் பாத்தா என்ன சொல்லுவேனோ அதை நீ கைப்பட எழுதியிருக்கிறாய். நீ லட்சுமியக்கா வோடை வேலை செய்திருக்கிறாய், இரண்டு பேரும் நல்ல சிநேகிதிகள். கட்டாயம் அவவின் மனம் மாறும், நிச்சயம் இந்தப் பக்கமாய் வந்து குடியேறுவினம்" என இரமணகிரி சொன்னான்.

"நம்மைப் போல மலையகத் தமிழர்களுக்கு இதைவிட வேறு வழியில்லை. மலையகத்திலேயே பாதுகாப்பு இல்லை என்றால் எங்கே போக முடியும்? வேறை எங்கே? வடக்கு, கிழக்கைத் தவிர வேறிடம் இல்லை. இந்த உண்மையை ஒவ்வொரு மலையக மக்களும் உணர்ந்து கொள்ளவேணும்" என தேவிகா தன் விளக்கத்தைச் சொன்னாள்.

## 11

**நா**ட்கள் எப்படியெல்லாம் வேகமாக நகர்ந்து செல்கின்றனவோ தெரியவில்லை. இரமணகிரியும் தேவிகாவும் அட்டனுக்கு வந்து ஒரு கிழமையாகிறது. இன்னும் இரண்டு நாட்களில் காவேரிக்குக் கல்யாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதோ தன் சக்திக்கு உட்பட சிறிய கல்யாணமாகச் செய்யச் சண்முகம் எல்லா ஏற்பாடுகளும் செய்திருந்தார். நாளை சிவராசா அண்ணையும், மனைவியும் வருவதாகச் சொல்லியிருந்தனர். அவர்களை லட்சுமியக்காவின் லயத்திலே தங்கவைக்க ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தது.

காவேரியின் லயம் விருந்தினர்களால் நிரம்பி வழிந்தது. சண்முகமும் இரமணகிரியும் வந்தோரை வாயார வரவேற்று உபசரித்தார்கள், மருதம்மாவும் தன் பங்கிற்குப் பெண்களின் பகுதியைக் கவனித்துக் கொண்டாள். முகூர்த்த வேளையிலே மங்கலத் தாலி கட்டப்பட்டது.

மறுநாள் சிவராசா அண்ணையும் மனைவியும் புறப்பட்டுச் சென்றார்கள். மூன்று பேரின் வயல்களையும் கவனிக்கும் பொறுப்பை ஏற்றதால் அவர் அவசரமாகவே தம்பலகாமத்திற்குப் போகவேண்டியிருந்தது. காவேரியும் நவநீதனும் புதுமணத் தம்பதிகளாக சொந்தக்காரர்கள், நண்பர்கள் என அழைத்த வீடுகளுக்குச் சென்று வந்தார்கள். மருதம்மாவின் ஆசை இரமணகிரிக்கும் கையோடு கல்யாணத்தைச் செய்துவிட வேண்டும் என்றே. ஆனால் காவேரியின் கல்யாணத்துக்கு நாள்பார்த்த சோதிடர் ஒரு வருடத்தினுள் இரு கலியாணங்கள் செய்யக்கூடாது. சித்திரைப் புதுவருசம் பிறக்கட்டுமே பொறுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டார்.

மருதம்மா சும்மா விடுவாளா? "சரி அந்தத் திகதியையும் இப்பவே பாத்துச் சொல்லுங்க" என்று இரமணகிரி தேவிகாவின் கல்யாணத்துக்குரிய நாளையும் நிச்சயித்துக் கொண்டாள். இரமணகிரி இதைக் கேள்விப்பட்டதும் சற்று எரிச்சலோடு, "ஏனம்மா இவ்வளவு அவசரம். முதல்ல இரண்டு கலியாணத்துக்கும் செலவு எவ்வளவாகும் எண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாருமே யோசிக்கவில்லை...” என்றான். இவற்றையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த கடைசித் தங்கை கிருஷ்ணி, “அண்ணை உன்ர கலியாணத்திலை மாப்பிளை வீடு, பொம்புளை வீடு எண்டு எல்லாமே எங்க வீடுதானே, பிறகு என்ன செலவு வரப்போகுது...?” எனத் துடுக்குத் தனமாகக் கேட்டாள். அங்கிருந்தோர் அனைவரும் சிரித்து விட்டார்கள். சண்முகம், “கிருஷ்ணிக்குச் செலவைப் பற்றி என்ன கவலை?'' எனக் கேட்டார். கிருஷ்ணி எதுவுமே பேசவில்லை. “கப்சிப்” எனப் பெட்டிப்பாம்பாக இருந்தாள்.

சிறியதாகச் செய்த காவேரியின் கல்யாணமே கைக்குள் அடங்காத செலவாகிவிட்டது. மாப்பிள்ளை விரும்பி வலியவந்ததாலும், வேலை எதுவும் இல்லாததாலும் அவர்களால் “அதைக் குடு இதைக் குடு'' என்று எதுவும் கேட்க முடியவில்லைப் போலும். ஆனால் கலியாணம் முடிந்து இரண்டாம் நாள் மாப்பிள்ளை நவநீதனின் தகப்பன் இரமணகிரியிடம் வந்து நாசுக்காக “தம்பி, நம்ம மகனுக்கு வேலை இல்லாத குறையையும் நீங்களே தீர்த்துவிட்டால் அவையள் வாழ வழி கிடைச்சுவிடும். அடுத்தவைக்கும் பாரமாகாது... இந்தத் தோட்டத்திலை இல்லாட்டியும், வெளியே ஆவது முயற்சி செய்து பார் தம்பி” எனக் கேட்டார்.

இரமணகிரி, “எங்களால முடிஞ்சளவு முயற்சி பண்ணுகிறோம். இங்கே தோட்டத்திலை எப்படி வேலைக்குக் கஷ்டமோ அதே மாதிரித்தான் தம்பலகாமம் பக்கமெல்லாம். ஆக நெல்லுவெட்டுற நேரம், களை பிடுங்கிற நேரம் எண்டு ஏதாவது தேவையோடு மட்டும் வயலில் கூலி வேலைக்கு ஆக்கள் தேவைப்படும். நிரந்தரமாய் வேலை எண்டு எதையும் நம்பியிருக்க முடியாது. உங்க மகன் கூலி வேலையை விரும்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லையாமே, கேள்விப்பட்டோம்...'' எனப் பதில் சொன்னான்.

நவநீதினின் தகப்பன் "...இல்லை தம்பி அப்பிடி யில்லை. எந்தப் பையனும் முதல்ல இதுமாதிரித்தான் சொல்லுவாங்கள். குடும்பம், பொறுப்பு எண்டு வரத் தாங்களாகவே இறங்கி வருவாங்கள். இதுதான் உண்மை தம்பி'' எனச் சமாதானம் சொன்னார். இன்முகத்தோடு இரமணகிரி, "சரி, அவரைத் தொடர்ந்து முயற்சி செய்யச் சொல்லுங்க. வேலை கிடைக்காமலா போகும். நாங்களும் முழு முயற்சியில இறங்குவோம்'' என்று சொல்லிவிட்டுத் திரும்பியபோது தேவிகா அருகே நின்று அவதானித்துக் கொண்டிருந்தாள்.

அன்று மாலை இரமணகிரி தாயிடம் வந்து, "அம்மா வயல் வேலையள் ஏராளம் இருக்கு. நாளைக்கே நாம போகவேணும். வேறை ஏதாவது வேலையள் இருக்குமா?'' எனக் கேட்டான். தாய் மருதம்மாவுக்கு இந்தக் கேள்வி எரிச்சலை ஏற்படுத்தியிருக்க வேணும். "டேய் நம்ம வீட்டில நடக்கிற கலியாணத்துக்கு வந்துட்டு இப்பிடியா ஓடிப் போறாய்... என்ன அவசரம் அப்பிடி?'' என முணுமுணுத்தாள். "இல்லையம்மா சிவராசா அண்ணை வயல் வேலையைப் பாக்கிறார். தன்னுடையதை விட எங்கள் இருவரின் வயலையும் சேத்துப் பாக்கிறார். அதுதான்...'' எனச் சமாதானத்தை இரமணகிரி சொன்னான்.

இரமணகிரியைத் தனியாகச் சந்தித்தபோது தேவிகா "அம்மா கேட்டதற்காகவாவது ஒருநாள் கூட நின்று போகலாம்தானே. கலியாணம் முடிஞ்ச கையோட விட்டுப் போறது அழகில்லை'' என்று சொல்ல, அது இரமணகிரிக்குச் சரியெனப்பட்டது. இரமணகிரியின் மௌனம் சம்மதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற வகையில் தேவிகாவுக்குத் திருப்தி. அப்போதுதான் சண்முகம் அங்கே வரத் தேவிகா ஒரு புதிய விடயத்தைச் சொல்லிவிடலாமா என எண்ணினாள். "எதற்கும் இரமணகிரியோடு கலந்து பேசிவிட்டுப் பின்பு பேசுவோம்" என மனதை மாற்றினாள். மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தில் யாருமே அருகில் இல்லாதபோது தேவிகா இரமணகிரியிடம் மெதுவாக "எங்களுக்குக் கலியாணமாகினால் நம்ம இரண்டு வயலையும் கவனிக்கிறது கஷ்டமாயிருக்கும். ஒரு வயலை யாருக்காவது குத்தகைக்கு விடலாம் என நினைக்கிறேன். நீங்க இதைப்பற்றி என்ன நினைக்கிறீங்க...?" என விசயத்தை அவிழ்த்துவிட்டாள்.

இரமணகிரி எதுவுமே பேசவில்லை. தேவிகாவின் முகத்தையே உற்றுப் பார்த்தான். இது தேவிகாவுக்கு பயத்தை ஏற்படுத்தியது. கோபம் வந்துவிட்டதோ? கண்டபடி ஏதும் பேசப்போறாரே என நினைத்துக் கொண்டு தயங்கியபடி "என்ர மனதில பட்டதைச் சொன்னேன். அவ்வளவுதான்..." என்றாள் வார்த்தைகளை விழுங்கியபடி. இரமணகிரியின் முகத்திலே புன்னகை தவழ நிதானமாகப் பேசினான், "தேவிகா நாங்கள் இரண்டு வயலையும் சமாளிக்க முடியாமல் போனால் பாத்துச் செய்யலாம், இப்ப என்ன அவசரம்...?" எனச் சொன்னான்.

தேவிகா உடனே, "இல்லை, அதுக்கு இல்லை. காவேரியின் புருசன் நவநீதன் வேறை இடத்தில் வேலை தேடி அலையாமல் பேசாமல் நம்ம வயல் ஒண்டைக் குத்தகைக்கு எடுத்து ஏன் செய்யக் கூடாது. எங்களுக்கும் சுமைகுறையும், அவருக்கும் வேலை கிடைச்சுத் தன் குடும்பத்தைப் பாக்க முடியும்..." என்றாள். இரமணகிரி உற்சாகத்துடன், "இது நல்ல யோசனை, எனக்கு வரமாட்டுது இப்பிடி!" என்றான். தேவிகா சிரித்துவிட்டு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அது சரி, நாம இப்பிடிச் சொல்லுறோம். நவநீதன் முதலில் வயலில் வேலை செய்யச் சம்மதிக்க வேணுமே" எனக் கூறினாள். "சரி சரி கேட்டுப் பாப்போம். விரும்பினால் வந்து கமம் செய்து பாக்கட்டுமே" என இரமணகிரி சொன்னான்.

அன்றிரவு மருதம்மாவும் காவேரியும் இரமணகிரியிடம் வந்து, "நவநீதன் வயலை எடுத்துச் செய்யப்போறார், உனக்கும் சம்மதம்தானே" எனக் கேட்டார்கள். இரமணகிரிக்கு அதிர்ச்சி! இது எப்படி இவர்களுக்குத் தெரிந்தது? என எண்ண, தேவிகா புன்னகையோடு பக்கத்திலே வந்து நின்றாள். இரமணகிரிக்கு இப்போது எல்லாமே புரிந்துவிட்டது. தேவிகா, "கச்சிதமாகப் பேசி முடித்துவிட்டேன்" என்று சொல்வதுபோல் அமைதியாக ஒரு பார்வை பார்த்தாள். அந்தப் பார்வையிலே பல விடயங்கள் அடங்கியிருந்தன. இரமணகிரியும் நிம்மதியோடு தாயையும் காவேரியையும் பார்த்து, "அவர் தாராளமாக வயலை எடுத்துச் செய்யலாம், நல்லாயிருந்தால் சந்தோசம்" எனச் சொன்னான். எல்லோரின் முகத்திலும் மலர்ச்சி தெரிந்தது.

காவேரியும் நவநீதனும் வயல் சம்பந்தமாகப் பல வியடங்களை விவரமாகக் கேட்டறிந்தனர். கணவர் நவநீதனுக்கு வேலை கிடைத்துவிட்டது போல் நிம்மதியாகக் காவேரியின் மனம் ஆனந்தத்தில் மிதந்தது. மருதம்மாவும் விட்டுவிடவில்லை. "பாத்தியா காவேரி, தேவிகாவின் இடத்துக்கே, நீயும் போகப்போகிறாய்" என மகளைக் கிண்டலடித்தாள். பதிலேதும் பேசாத காவேரி இலேசாகச் சிரித்தாள். அந்தச் சிரிப்பிலே பல அர்த்தங்கள் உறைந்திருந்தன. உயிர்த்தோழி தேவிகா தம்பலகாமத்திற்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனபோதே காவேரியின் மனம் அந்தத் திசையில் பயணிக்க ஆரம்பித்துவிட்டது.

காவேரியின் பழைய நினைவலைகள் அவளை எங்கெங்கோ இழுத்து அலைக்கழித்தது. தன் தோழி தேவிகாவின் வாழ்க்கையின் வெற்றிகளை அசைபோட்டுப் பார்த்தாள். மிகவும் பிரமிப்பாகவிருந்தது. வாழ்க்கையில் எவ்வளவு தூரத்திற்கு இழுத்து வீழ்த்தப்பட்டவள். ஆனால் தன் விடாமுயற்சியினால் எழுந்து நிற்கிறாள். வேறு யாராவது என்றால் கதை அவ்வளவுதான். பிச்சைதான் எடுத்துப் பிழைக்க வேண்டி வந்திருக்கும்.

இரமணகிரி தம்பலகாமத்துக்குக் கொண்டு செல்ல வேண்டிய சாமான்களை ஓர் அட்டைப் பெட்டியில் அடுக்கினான். மருதம்மாவும் சாப்பாட்டுச் சாமான்களைக் கொண்டுவந்து, “இதையும் கொண்டு போ” என்று சொன்னாள். இரமணகிரி எரிச்சலோடு, “அம்மா இவ்வளவு பாரத்தையும் சுமந்து பார்த்தால்தான் தெரியும். சாப்பிட நல்லாயிருக்கும், அதுக்காக இப்பிடிச் சுமக்க முடியுமா?” என்றான். இதைக் கேட்ட தேவிகா “இரண்டு பேர்தானே, மாறி மாறிக் கொண்டு போகலாம் பரவாயில்லை. தம்பலகாமத்திலே தட்டுப்பாடான சாமான்களைக் கொண்டு போறதிலை தப்பில்லை” என்று சொல்லி அதற்கு முற்றுப்புள்ளியிட்டாள்.

இரமணகிரியும் தேவிகாவும் பயணம் புறப்பட்ட போது பேருந்திலே ஏறும் வரை நவநீதனும் வந்து வழியனுப்பினான். பாரமான சாமான்களைச் சுமந்துவந்து கொடுத்துதவினான். “அடுத்தடுத்த கிழமை தம்பல காமத்திற்கு வந்து உங்களைச் சந்திப்பேன்” என்று சொல்லிவிட்டு நவநீதன் வழியனுப்பி வைத்தான். பேருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடிக்கொண்டிருக்கையிலே இரமணகிரி மெதுவாகப் பேச்சை ஆரம்பித்தான். "தேவிகா, இப்ப நவநீதனுக்கு வயலைக் குத்தகைக் குடுக்கிறதென்றால் அதுக்கு என்ர வயல்தான் சரிவரும். ஏன் எண்டால் உன்ரவயல் புதுக்காணி. சட்டப்படி இப்ப வேறு யாருக்கும் குடுக்க முடியாது. உன்ர வயலை நாம் செய்வம். என்ர வயலைக் குடுப்பம், சரிதானே..." எனக் கேட்டான். "எனக்கு எதுவும் சரிதான். பிரச்சனை வராமல் பாத்துக் கொண்டால் சரி" என்று தேவிகா பதில் சொன்னாள். "நீ எதைச் சொல்ல வாறாய்..." என இரமணகிரி சற்று எரிச்சலோடு கேட்டான். அருகேயிருந்த சக பயணி ஒருத்தர் தன்னைப் பார்ப்பதை அவதானித்த தேவிகா குனிந்து இரகசியமாக "இல்லை யில்லை, சட்டப்பிரச்சனை ஏதும் நவநீதனுக்கோ நமக்கோ வரக்கூடாதுதானே. அதைத்தான் சொன்னேன்" என்று விளக்கம் சொன்னாள். பேருந்து ஓடிய இரைச்சலில் இரமணகிரி தலையை மட்டும் ஆட்டிச் "சரி" எனச் சொன்னான்.

சில மணி நேரத்தின் பின் தேவிகா, "அதுபோக, நவநீதனிடம் குத்தகைக் காசு எண்டு எதுவுமே வாங்க வேண்டாம். தந்தாலும் வாங்க வேண்டாம். அதை உங்க காவேரிக்குக் குடுக்கிற சீதனம் எண்டு வைச்சுக் கொள்ளட்டுமே..." எனக் கேட்டுக் கொண்டாள். இரமணகிரி எதுவும் பேசாமல் தலையை மட்டும் ஆட்டினான். அப்போது மனதுக்குள் "நான் நினைக்கிறதைத் தேவிகா சொல்லுறாளே..." நினைத்துக் கொண்டான். அதையும் இரமணகிரியின் முகத்தைப் பார்த்துவிட்டுத் தேவிகா, "என்ன கடுமையான யோசனையில்?" என வினாவினாள். இரமணகிரிக்கு இதைக் கேட்டபோது சிரிப்பை அடக்க முடியவில்லை. அவளின் முகத்தைப் பார்த்துவிட்டு, "நான் மனதிலை நினைக்கிறதை அப்பிடியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லுகிறயே எப்படி?" எனக் கேட்டான். பதில் சொல்ல முடியாத தேவிகாவுக்கு வெட்கம் வேறு வந்தது. நாணிக்கோணிப் புன்னகையுடன் இருந்தாள்.

## 12

சிவராசா அண்ணை வயலின் வரப்பிலே இருந்தபடி பல்லைத் துலக்கிக் கொண்டிருந்தார். இளங்காலை வெயில் வயல்வெளி எங்கும் பரவி நின்றது. தொழுவத்திலே நின்று தண்ணீர் குடித்துக் கொண்டிருந்த மாடுகளைப் புற்தரையிலே சிவராசா அண்ணரின் மனைவி மேய்ச்சலுக்காகக் கட்டினார். இவற்றையெல்லாம் தனது வீட்டில் நின்று பார்த்த இரமணகிரி அங்கே வந்தான். மருதம்மா கொடுத்தனுப்பிய உணவுப் பண்டங்கள் சிலவற்றை அவர்களிடம் கொடுத்தான்.

"எப்பிடி இரமணகிரி கல்யாணத்துக்குப் பிறகான கொண்டாட்டம் எல்லாம் சிறப்பா நடந்திருக்கும் எண்டு நினைக்கிறோம்" எனச் சொன்னார் சிவராசா அண்ணை. அவரின் மனைவியோ, "இரமணகிரி, நீங்க இரண்டு பேரும்தான் வந்தீங்களா இல்லை..." என இழுத்தார். அவரின் அவசரத்தைப் புரிந்துகொண்ட இரமணகிரி, "இரண்டு பேரும் வந்தோம். தேவிகா தன் வீட்டுக்குப் போக நான் இங்கே வந்திட்டேன்" என்று சொன்னான். சிவராசா அண்ணை கிட்ட வந்தார், "கலியாணம் செய்து போட்டால் இப்பிடி, தேவிகா அங்கேயும் நீ இங்கேயும் கஷ்டப்படத் தேவையில்லையே..." என்று கிண்டலடித்தார். இரமணகிரிக்கு இது பழகிப்போன ஒன்று. அதற்குள் சிவராசா அண்ணையின் மனைவி இரமணகிரியின் பக்கம் சாய்ந்து, "அதுக்காக அவசரமாய்த் தாலிகட்டிக் குடித்தனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்த முடியுமா?'' எனக் கேட்டபோது சிவராசா அண்ணையும் சேர்ந்து சிரித்தார்.

அப்போதுதான் இரமணகிரி மைத்துனர் நவநீதன் தம்பலகாமத்திற்கு வந்து கமம் செய்யவிருப்பதைச் சொன்னான். சிவராசா அண்ணை மகிழ்வுடன், "இரமண கிரி, கேட்கவே ஆனந்தமாயிருக்கு மனம். இது மாதிரி மலையகத்திலை இருக்கிற நம்மவர்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களிலே கிடைக்கிற காணியிலை குடியேற வேணும். முதலாளியின் தோட்டத்திலை கூலியாக வேலை செய்யிறதைவிட இங்கே சொந்தக் காணியிலை உரிமையோடை விவசாயம் செய்யலாம்'' என்று சொன்னார்.

இரமணகிரி அப்போது, "அதுபோல லட்சுமி யக்காவையும் இங்கே கூட்டிவரவேணும். கைகுடுத்து உதவினால் நல்லாக வரக்கூடிய ஒரு ஆள்'' எனக் கூறினான். "சரி எதுக்கும் லட்சுமியக்கா இங்கே வந்து முதல்ல இடத்தைப் பாக்கவேணும். பிடிச்சுக் கொண்டால் தீர்மானிச்சு நல்ல முடிவு எடுக்கட்டும். தனக்கு அடுத்தவரின் உதவி தேவையென்றால் கேக்கட்டும்'' என்று சிவராசா அண்ணையின் மனைவி சொன்னார்.

நாட்கள் சில நகர இரமணகிரி, சிவராசா அண்ணையிடம் போய், "நெல்லு விதைப்புக்கு நாள் வருகுதே'' என வினாவியபோது "அடுத்த கிழமையே வேலையைத் துவங்கலாம்'' என்று கூறினார். உடனடி யாகவே மூன்று வயல்களிலும் நெல் விதைப்புக்குரிய ஒழுங்குகள் செய்யப்பட்டன. சொல்லி வைத்ததுபோல நெல்லு விதைத்துச் சில நாட்களிலே மழையும் பெய்து கைகொடுத்தது. பெரும்பாலான வயல்களிலே விதைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிந்தபடியால் எதிர்பார்க்காத அந்த மழையை ஏராளமான வயற்காரர்கள் வரவேற்றனர். நெற்பயிர் முளைவிட ஆரம்பித்தபோதே களையும் சேர்த்து முளைத்து வளர்ந்தது. களையைப் பிடுங்கிப் பயிரை வளர்த்துக் கருமமே கண்ணாக விவசாயிகள் அறுவடையை எதிர்பார்த்திருந்தார்கள்.

திடீரென ஒருநாள் இரமணகிரியின் வீட்டுக்கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. கதவைத் திறந்தால் காவேரி, நவநீதன், லட்சுமி, கணவர் என ஒரு சிறு பட்டாளமே நின்றது. “என்ன காவேரி திடீரெண்டு எல்லாரும் வந்தீருக்கிறீங்கள். ஒரு கடிதம் போட்டிருந்தால் பஸ் ஸ்டாண்டில வந்து கூட்டி வந்திருப்பேனே?” என்று இரமணகிரி கேட்டான். “இல்லை, கடிதம் போட்டோம், கிடைக்கவில்லையா?” எனக் காவேரி கேட்க, “இல்லையே” என இரமணகிரி பதில் சொன்னான். வந்தவர்களை உபசரித்து உட்காரச் சொல்லிவிட்டுத் தேநீர் தயாரித்தான். அதற்குள் சிவராசா அண்ணையும் மனைவியும் இவர்கள் வரும்போது கண்டுகொண்டதால் தாமும் வீட்டினுள் வந்து அமர்ந்து கொண்டனர்.

எல்லோரும் சேர்ந்து பேசிக்கொண்டிருக்க இரமணகிரி சமைக்க ஆரம்பித்தான். அதற்குள் சிவராசா அண்ணை மிதிவண்டியை எடுத்துக்கொண்டு போய் தேவிகாவிடம் சொன்னபோது அவளும் இரமணகிரி வீட்டுக்கு வந்து சேர்ந்தாள். தேவிகாவைக் கண்டதும் காவேரி “நீ வருவாய் எண்டு தெரியுமடி” என்றபோது, தேவிகாவும், “சரி, நீயும் வருவாய் எண்டு எல்லாருக்கும் தெரியுமே...” என்றாள் மகிழ்வோடு.

இரமணகிரியும் தேவிகாவும் வயல் மற்றும் பயிர்ச் செய்கைகள் பற்றிய விளக்கங்களைத் தெளிவாகச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னார்கள். காவேரிக்கும் நவநீதனுக்கும் வயல் பயிர்ச் செய்கையில் ஈடுபட முழு ஆர்வம் ஏற்பட்டது. வயல், வரம்பு என்று காட்டி விளக்கம் சொன்னபோது நவநீதன் பூரண சம்மதம் சொன்னான். அத்தோடு வயல் சம்பந்தமான பத்திரங்களில் கையொப்பமிட்டனர்.

ஆதிகோணேஸ்வரத்திற்குச் சென்றபோது எல்லோரும் பக்தியோடு வழிபட்டார்கள். நவநீதனுக்கும் காவேரிக்கும் ஏதோவொரு இனம் காணமுடியாத முழுத் திருப்தி கோயிலை விட்டு வீட்டுக்குச் சென்றபோது ஏற்பட்டது.

இரமணகிரியின் வீட்டிற்கு வந்து சேரும்வரை நவநீதனும் காவேரியும் கோவிலைப் பற்றியே பேசியபடி வந்தார்கள். நவநீதன் மனம் திறந்து, “மலை நாடும் லயமும் தான் வாழ்க்கை எண்டு ஒரு சின்ன வட்டத்துக்குள் இருந்து விட்டோம். எப்பொழுதோ நாம் வடக்கு கிழக்கு எண்டு போய்க் குடியேறியிருக்க வேணும். முன்னேற வேணும் எண்டு ஒவ்வொரு மலையகத்தானும் முயன்றால் அதை எந்தச் சக்தியாலும் தடுக்க முடியாது. இதை ஒவ்வொரு மலையகத் தமிழரும் நன்றாகச் சிந்தித்து உணரவேணும்” எனக் கூறிக்கொண்டான்.

இரமணகிரியின் கலியாணத்துக்கு இன்னும் சில வாரங்களே உள்ள நிலையில் சிவராசா அண்ணர், “தம்பி இரமணகிரி வயல் வேலை எண்டு சொல்லி கலியாண வேலையைக் கவனிக்காமல் விட்டு விடாதே. நீ அட்டனுக்குப் போய் அதைக் கவனி. வயலை நான் பாத்துக் கொள்ளுறேன். நீ நிம்மதியாகத் தேவிகாவைக் கூட்டிக் கொண்டுபோய் கலியாணத்தை முடிச்சுட்டு வா” என உற்சாகமூட்டினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இரமணகிரி, தேவிகா இருவரின் மௌனம் சம்மதம் என எண்ணிய காவேரி "அண்ணை அட்டனுக்கு நாலு பேரும் போவோம்" என்று கேட்டாள். நவநீதனும் சம்மதித்தபோது நாலு பேரும் அட்டனுக்குப் புறப்பட்டுச் சென்றார்கள். வழியனுப்பி வைத்த சிவராசா அண்ணைக்குத் தலைக்குமேல் ஏராளமான வேலைகள் வரிசையாக வயலிலே காத்திருந்தன.*

*இடையிடையே பெய்த மழை களைகள், பல முளை விட்டு வெளியேவரக் காரணமாகி விட்டது. மூன்று வயல்களிலும், கூலிக்கு ஆட்களைப் போட்டுக் களை பிடுங்கச் சிவராசா அண்ணை ஏற்பாடு செய்தார். நெற்பயிருக்கிடையே இலேசாகக் களைகள் இருந்ததால் அவர் மனைவியின் உதவியுடன் பிடுங்கிவிடுவார், கூலியும் மிச்சமாகும். இம்முறை நிலமை தலைகீழாகியது. களைகளுக்கு நடுவே நெற்பயிர் பாத்திகளுக்குள் இருப்பது போலிருந்தது. "நம்மால் பிடுங்கி முடிக்க முடியாது இவ்வளவு களையை. அதற்குள் களை நெற்பயிரை மூடிவிடும்" என்று சொல்லியே கூலிக்கு ஆட்களைப் பிடித்தார். இல்லையென்றால் ஒரே நாளில் களை பிடுங்கும் வேலை முடிந்திருக்குமா?*

*அந்த வாரமே பயிர்கள் மெல்லிய மஞ்சள் நிறமாகக் கண்ட சிவராசா அண்ணை உடனடியாக மருந்து அடித்துவிட்டுக் காத்திருந்தார். பச்சைப் பசேல் என இருந்த பயிர்கள் திடீரென்று வெண்மஞ்சளாகியபோது பதறி விட்டார். இரமணகிரியும் தேவிகாவும் நின்றிருந்தால் பயப்படத் தேவையில்லை. "முழுப் பொறுப்பும் நானே பாக்கிறேன்" என்று சொல்லிப் பயணம் வேறு அனுப்பிவிட்டுப் பயிரைக் கவனிக்காமல் விடலாமா? சொல்லப்போனால் தனது வயலை விட இரமணகிரி -*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவிகாவின் வயலில் கவனத்தை அதிகமாகவே சிவராசா அண்ணை செலுத்தினார். களை பிடுங்கவும் மருந்து அடிக்கவும் ஏற்பட்ட செலவைக் கேட்டால் தாராளமாகத் தருவார்கள். ஆனால் பயிர்கள் ஒழுங்காக இருக்க வேணுமே.

அடிக்கடி "கோணேஸ்வரத்தானே நீயே பயிர்களைப் பாத்துக்கொள்" எனச் சிவராசா அண்ணை வேண்டிக் கொண்டார். எந்தப் பயிர்கள் அவர் மனதை ஆட்டுவித்தனவோ, அவரின் பிரார்த்தனை வீண் போகவில்லை. அந்தப் பயிர்கள் பழையபடி பச்சைப் பசேல் எனக் காற்றில் ஆடி அசைந்து அவருக்கு நிம்மதியூட்டின.

திடீரென ஒரு காலைப் பொழுதில் இராணுவ வாகனங்கள் இரண்டு இரமணகிரியின் வீட்டுக்கு முன்பு வந்து நின்றன. அதிலிருந்து இறங்கிய படையினர் இரமணகிரியின் வீட்டுக் கதவைத் தட்டினார்கள். பதில் ஏதுமில்லை. கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்தார்கள். எவருமிலர். அதற்குள் சில படையினர் அடுத்த வீடான சிவராசா அண்ணையின் வீட்டினுள் வந்தனர். வயலில் நின்ற அவரைக் கூப்பிட்டு, பக்கத்து வீட்டில் ஆள் இல்லையா?" எனக் கேட்டார்கள்.

சிவராசா அண்ணை, "அவர் அட்டனுக்குப் போய்விட்டார், அடுத்த கிழமை வருவார்" என்று சொன்னார். "அப்பிடியா. சரி உன்னை விசாரிக்கவேணும் ஏறடா ஜீப்பில" என அவரைக் கொண்டு சென்றது இராணுவம். அப்போது மனைவி வீட்டில் இல்லை. வந்து பார்த்தபோது கணவர் இல்லை, தேட முயன்றபோது அயல் வீட்டுக்காரர்கள் வந்து சொன்னார்கள் "அவரை இராணுவம் வந்து பிடிச்சுக்கொண்டு போயிருக்கிறான்" என்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவராசா அண்ணையின் மனைவிக்குத் தலைசுற்றியது. "ஏன் எதுக்கு...?" எனப் பல பல கேள்விகள் கேட்டார். யாரிடமும் பதில் இல்லை. என்ன செய்வது? உதவிக்கு இரமணகிரி கூட இல்லையே. அயல்வீட்டாரையும் கூட்டிக் கொண்டு கிராம சேவகர் வீட்டிற்குச் சென்றார். விவரத்தை அவரிடம் சொன்னபோது, அவர், "அருகிலுள்ள இராணுவ முகாமில் போய் விசாரிப்போம்" எனக் கூறி அழைத்துச் சென்றார். ஏதோ தனக்குத் தெரிந்த சிங்களத்தில் கிராம சேவகர் பேசிப் பார்த்தார். உடனடியாக விட முடியாது. நாளைக்குப் பின் விடலாம்..." என இழுத்தான் ஒரு இடைநிலை அதிகாரி. "நேரில் பார்க்கவும் அனுமதி இல்லை, போகலாம்" என விரட்டினார்கள். சிவராசா அண்ணையின் மனைவி கண்ணீருடன், "ஐயா நான் தான் அவரின் மனைவி, அவரைப் பார்க்கவிட முடியுமா" எனக் கெஞ்சினார். அவரின் கெஞ்சலைக் கிஞ்சித்தும் ஏற்காத அந்த இராணுவத்தினன் அசிங்கமாக ஓர் பார்வை பார்த்தான். அதற்குப் பின் அங்கு நிற்க விரும்பாமல் அஞ்சியபடி அங்கிருந்து அவர் வெளியேறினார்.

நான்காம் நாள் சிவராசா அண்ணை விடுதலை செய்யப்பட்டார். வீட்டிற்கு வந்து சேர்ந்தபோது அயலவர்கள் அனைவரும் வீட்டிற்கு வந்தார்கள். "எதுக்காகப் பிடிச்சாங்கள்?" என்றே எல்லோரும் ஏகோபித்துக் கேட்டார்கள். ஆனால் சிவராசா அண்ணையிடம் இதற்குப் பதில் இல்லை. "எதுக்கு, ஏன் பிடிச்சுக்கொண்டு போய் வைச்சாங்கள்" என்பதற்குப் பிடிச்சவங்களுக்கே தெரியாது.

சிவராசா அண்ணை சொன்னார், "என்னைக் கேட்ட கேள்வி மலைநாட்டிலை இருந்து யாராவது வந்தாங்களா இந்தப் பக்கம்?" அவ்வளவுதான். "நான் பக்கத்து வீட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரமணகிரியிடம் தங்கையும் புருசனும் வந்தவை. இப்ப எல்லாரும் அட்டனுக்குப் போயிட்டினம் எண்டு சொன்னேன்'' என சிவராசா சொல்லிக் கொண்டார். சிவராசா அன்னையின் பதில் பலருக்குச் சந்தேகத்தை உருவாக்கியது. சிலர் முணுமுணுத்தார்கள். மற்றையோர் உதட்டைப் பிதுக்கினார்கள். சிவராசா அண்ணைக்கு இராணுவம் பிடித்ததனால் உள்ள கவலையை விட அயலவர்களின் சந்தேகங்களும், சங்கடமான கேள்விகளும் அதிகமாக மனதுக்கு வலியைக் கொடுத்தன. இதனையுணர்ந்த அவரின் மனைவி சொன்னார், “தலையிடியும் காய்ச்சலும், தனக்கு வந்தால்தான் தெரியும். உங்களுக்கு வந்த கதி மாதிரி அவர்களுக்கும் வந்தால்தான் தெரியும்.'' இதைக் கேட்டதும் சிவராசா அண்ணைக்கு அழுவதா அல்லது சிரிப்பதா எனத் தோன்றியது. அவரோ மேலே பார்த்தபடி இரண்டு கைகளையும் விரித்து, முற்றும் துறந்த ஞானியாய் “இந்த உண்மை அடுத்தவனுக்குப் புரிவதற்குள் அவனவன் ஆவி போய்விடுமே. நிலமை இதுதான்'' என்றார் வரட்டுச் சிரிப்போடு.

அப்போது மனைவி, “இப்பிடியான நேரத்திலை இரமணகிரி பக்கத்திலேயிருந்தால் பெரும் உதவி. அவரில்லாத நேரத்திலை அவரைத் தேடுறாங்களே. இப்ப அவருக்கு அட்டனில் என்ன ஆபத்தோ யாருக்குத் தெரியும்? அடுத்தகிழமை கலியாணம் வேறை'' என்று தன் ஆதங்கத்தைக் கொட்டினார்.

மறுநாள் தபாற்காரனின் மணியோசை கேட்ட சிவராசா அண்ணை கடிதத்தோடு தபாற்காரன் நிற்பதைப் பார்த்தார். வழக்கமாகத் தபால்காரன் ஊர்ப் புதினங்கள் எல்லாம் புட்டுப்புட்டு வைப்பவன். அன்று கடிதத்தைக் கையில் திணித்துவிட்டு ஒரு சம்பிரதாயச் சிரிப்பு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அவ்வளவுதான், போய்விட்டான். ஊர் மக்களின் நாடித் துடிப்பைப் பார்த்த மாதிரி இது சிவராசா அண்ணையின் மனதிலே பட்டது. கனத்த இதயத்துடன் கடிதத்தை உடைத்து வாசித்தார். தேவிகா எழுதிய கடிதம் அது.*

*அன்புமிகு சிவராசா அண்ணை, அண்ணி அறிவது,*

*நாம் நலமே, உங்கள் நலத்திற்கும் அந்தக் கோணேஸ்வரத்தானே துணை. உடல் நலமே தவிர உள்ளம் சஞ்சலமே. என்ன செய்வது போற இடமெல்லாம் விதி விரட்டுகிறதே. விளையாடும் விதியை நோவதா? அல்லது எம்மையே நோவதா? தெரியவில்லை.*

*எங்கள் சோகம் இருக்கட்டும், விடயத்துக்கு வருகிறேன். இங்கே இராணுவம் லயத்துக்கு வந்து தம்பலகாமத்திலை, சிவராசா சொன்னதாக இரமண கிரியைப் பிடிச்சான். லயத்திலை அப்போது வந்து நிண்ட நவநீதனையும் சேத்துப் பிடிச்சுக்கொண்டு போயிட்டாங்கள். நாங்க, போய் என்ன ஏது எண்டு கேக்க முன் ஜீப்பில் கொண்டு போயிட்டாங்கள். அழுது குழற முழு லயமே கூடிவிட்டது.*

*தெரிஞ்ச ஒருத்தர் மூலம் ஆள் அனுப்பி விசாரிச்ச போது கொழும்புக்குக் கொண்டு போய்விட்டார்கள். மலைநாட்டிலை உள்ள ஆக்களுக்கு தம்பலகாமப்பக்கம் என்ன வேலை? இதுதான் முக்கியமான கேள்வியாம். நவநீதன் போனவுடன் தம்பலகாமத்திலிருந்து சில நாட்களிலேயே ஏன் திரும்பினாராம்? இது சம்பந்தமாய் விசாரிக்கிறாங்களாம். இன்றோடு நாலு நாளாகுது. எப்ப விடப்போறாங்களோ? கலியாணத்துக்கு நாள் வைச்சு வேலையள் கூடத் தொடங்கியாச்சே. என்ன செய்வது?*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணை இது விடயத்தில் யாரையாவது தெரியுமா உங்களுக்கு? உடனே பதிலை எதிர்பார்க்கிறோம்.

இப்படிக்கு
அன்புடன்
தேவிகா

கடிதத்தைப் பார்த்ததும் சிவராசா அண்ணைக்குத் தலைசுற்றியது. யாரை எங்கே எப்பிடித் தேடுவது? யாரைப் பிடித்துத் தேடுவது...? இரமணகிரிக்குக் கலியாணம் என்று எல்லா வயலையும் என்னை நம்பி பொறுப்பைத் தந்திருக்கிறார். இடையிலே விட்டிட்டு அட்டனுக்குப் போக முடியுமா? சிவராசா அண்ணையின் மனம் நாலா திசையிலும் சுழன்றது. இடிவிழுந்தவன் போல அப்படியே இருந்துவிட்டார். மனமே விறைத்ததுபோல் வர உடல் மட்டும் எம்மாத்திரம்? உடலிலும் அசைவு இல்லை. ஏதோ குரல் கேட்டது. திடுக்குற்றார், அப்போதுதான் இவ்வுலகிற்கு வந்தவர் போல் விழித்தார்.

மனைவியுடன் மனம்விட்டுப் பேசிக் கொண்டிருந்த போது மனைவி சொன்னார், “வயலை நான் பாக்க மாட்டேனா? அட்டனுக்குப் போய்க் கதைச்சால் இரமணகிரியின் குடும்பத்திற்கு ஆறுதலாயிருக்கும். இரண்டொரு நாளிலே திரும்ப முடியாதா?” மனைவியின் இந்த ஆதங்கம் சிவராசா அண்ணைக்குச் சரியெனப்பட்டது. “உடனே போய் வருகிறேன்...” என்று சொல்லிக்கொண்டு புறப்பட்டுச் சென்றார்.

மனைவிக்கு அயலவரின் உதவிகள் அவ்வப்போது செவ்வனே கிடைத்தன. கணவர் சிவராசா அண்ணையோ இரமணகிரியோ வயலிலே நின்றால் வேலைகள் எல்லாம் சீராக ஓடிக்கொண்டிருக்கும். வெறும் வயலாயிருந்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடுகளை மேயக் கட்டிவிட்டால் போதும். "அறுவடை நெருங்கும் நேரம், கண்காணித்தபடி இருக்கவேணும்" என்று அடிக்கடி சிவராசா அண்ணை சொல்வது ஞாபகத்திற்கு வர, மனைவி மேலும் உசாரானார். கதிர்கள் முற்றியதா, நிறம் ஏதாவது மாறியதா எனக் கவனித்து பயிர்களைக் கண்காணித்தார்.

## 13

மலையடிவாரத்திலே காலைவேளை வந்த வெள்ளிக் கதிர்களைக் கிழித்துக்கொண்டு பேருந்து ஓடிக்கொண்டிருந்தது. உட்கார்ந்திருந்த ஆசனத்தின் பின்புறம் தலையைச் சாய்த்தபடி நித்திரையிலிருந்த சிவராசா அண்ணை பேருந்து ஓரிடத்திலே குலுக்கிவிட்டு நின்றபோது விழித்தார். இனியும் நித்திரையானால் இறங்க வேண்டிய இடத்தைத் தவறவிட வேண்டிவரும் என்ற எச்சரிக்கையோடு யன்னலூடாக இயற்கையழகை இரசித்தபடி பயணித்தார். எத்தனை விதமாக வர்ணித்தாலும் வார்த்தைகளிலே அடக்க முடியாத இயற்கை எழில் கொஞ்சும் வனப்பைக் கொண்ட மலைநாட்டை வளம்படுத்துகிற இந்தத் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கையின் அவலங்களை சிவராசா அண்ணை நினைத்துப் பார்த்தார்.

மலையகத்துக்கு எப்படி, எப்போது வந்தார்களோ அதே அவலத்தோடுதான் இப்பொழுதும் மாரடிக்கிறார்கள். வெள்ளைத் துரைத்தனத்திற்குத் தம்மை ஆகுதியாக்கிய ஏழைக்கூலித் தொழிலாளர்கள் சுதந்திரம் கிடைத்தபோதும் மேலும் மோசமான நிலையிலே போராடி வாழவேண்டியிருக்கிறது. இதுவும் போதாதென்று இந்த சகாப்தத்திலே தோட்டத் தொழிலாளர்கள் மீது குறி வைத்து ஏவிவிடப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட வன்முறைகள் இன்னோர் புறம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. இது ஆட்சியிலே உள்ளோராலேயே திட்டமிட்டு நடத்தப்படுவது கொடுமையிலும் கொடுமை. எங்கேயும் போய் முறையிடவும் முடியாது. மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு உரிமை வாங்கித் தருவோம் என உறுதி வழங்கிவிட்டு அமைச்சர் பதவி வகிப்பவர்களால் கூடத் தம் எசமானர்களைச் சமாதானம் செய்யவும் முடியாது. தம்மையும் கூடப் பாதுகாக்க வக்கற்றவர் களாகவே நிலைமை உள்ளது. ஏழைத் தொழிலாளர்கள் தம் விதியை நொந்துவிட்டு நடப்பவற்றை எதிர்கொள்வதைத் தவிர வேறு வழியற்றவர்களாகவேயிருக்கிறார்கள்.

மலையகத் தொழிலாளர்களை அங்கிருந்து நாட்டின் வட, கிழக்கு மாகாணங்களுக்கு விரட்டி விடவே ஆளும் இனத்துவேசமுடையோர் முனைகிறார்கள். அடிப்படையிலே இந்த மலையகத் தமிழர்களின் தாயகமும் அங்கேயே உள்ளது என்பதைத் தாமாகவே அவர்கள் அங்கீகரித்து விடுகிறார்கள். இந்த உண்மையை மலையகத் தமிழர்கள் எப்பொழுது உணர்கிறார்களோ அப்பொழுது தான் அவர்களுக்கு விடிவு உதயமாகும். இந்த எண்ணங்கள் சங்கிலித் தொடராகச் சிவராசா அண்ணையின் எண்ணத்தில் உதித்தபடியேயிருந்தது. சற்று நிமிர்ந்து பார்த்தார். மலையினிடையே தேயிலைத் தோட்டத் தொழிற்சாலைக் கட்டடம் தெரிந்தது; பேருந்தின் மணியை அடித்தார். பேருந்திலிருந்து இறங்கியவர் நேராக லயத்தை நோக்கி நடந்தார். வழியெங்கும் ஏராளமான தொழிலாளர்கள் அப்பொழுதுதான் வேலைக்குச் சென்று கொண்டிருந்தார்கள்.

சண்முகத்தின் லயவாசலிலே கதவைத் தட்டியபோது மருதம்மா வந்து கதவைத் திறந்தாள். சிவராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணையின் வரவை அவர்கள் எதிர்பார்க்கவில்லை. அவரைச் சூழ்ந்து தம்பலகாமத்தில் நடந்ததை அறிந்துவிட்டு லயத்திலே நடந்ததை விலாவாரியாகச் சொன்னார்கள். சிவராசா அண்ணைக்கு இவற்றையெல்லாம் ஒன்று சேர்த்துப் பார்த்தபோது யாரோ கொடுத்த ஒரு சின்னத் தகவலைவைத்து இவ்வளவும் நடந்திருக்கு. தம்பலகாமத்தில் இரமணகிரி நல்லாயிருக்கிறானே என்ற பொறாமையில் அங்குள்ளவர்கள் அல்லது அட்டனிலே உள்ளவர்களே பொய்த் தகவல் கொடுத்திருக்கலாம். இராணுவத்திற்கும் காவல்துறைக்கும் வேறென்ன வேலை? மெல்லுற வாய்க்கு அவல் கிடைத்ததாய் பிடித்துச் சித்திரவதைதானே, விசாரணை என்ற பெயரில்.

மருதம்மாள் மௌனத்தைக் கலைத்து விட்டுச் சோகத்துடன், “தம்பி சிவராசா, இரமணகிரியையும் நவநீதனையும் வெளியே கொண்டுவரவே முடியாதா?” எனக் கேட்டாள். அப்போது கிருஷ்ணி முந்திக்கொண்டு, “அம்மா அது ஏதோ பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் சந்தேகத்தில பிடிச்சது எண்டு லோயர் சொன்னவர்தானே, உடனே விடமுடியாது எண்டு சொன்னாங்களே...” என்று சொன்னாள். “ஒரு ஆளையா, இரண்டு பேரைப் பிடிச்சுக் கொண்டு போயிருக்கிறாங்கள். நம்மளைக் கடவுள்தான் காப்பாற்ற வேணும்” என்று தன் ஆதங்கத்தைச் சண்முகம் வெளிப்படுத்தினார். தேவிகாவும் காவேரியும் வாடிய வதனத்தோடு ஒருவரையொருவர் பார்த்திருந்தனர்.

சண்முகம், “நாளைக்குப் போனால் பாக்கலாம் எண்டு லோயர் சொன்னார், போவோமா?” என்று கேட்டார். போகப் பயம் ஒருபுறம் வாட்ட தன்னையறியாமலே தலையையசைத்தார் சிவராசா அண்ணை. அன்று மாலை லயத்துக் கதவைத் திறந்தபடி இரமணகிரியும் நவநீதனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*உள்ளே வந்தார்கள். "இரண்டு பேரும் வந்தாச்சு" என்று கிருஷ்ணி உரத்த குரலில் சொல்ல, அக்கம்பக்கத்தார்கூடக் குழுமிவிட்டார்கள். மருதம்மாள், தேவிகா, காவேரி, கிருஷ்ணி அனைவரும் கண்கலங்கி நிற்க, சிவராசா அண்ணை, "தம்பி, கடவுளே எண்டு கலியாணத்திற்காவது இரண்டு பேரையும் விட்டாங்களே அது போதும்" என்றார். அப்போதுதான் வாய் திறந்த இரமணகிரி பெரியதோர் குண்டைத் தூக்கிப் போட்டான்.*

*"கலியாணமாம் கலியாணம், அது ஒண்டுதான் இப்ப குறைச்சல். தேவிகா பொய் சொல்லியிருக்கிறா. எனக்கு இந்தக் கலியாணம் தேவையா?" என்று இரமணகிரி லயமே அதிர உரத்த குரலில் முழங்கினான். எல்லோரும் ஒரு நொடியில் அதிர்ச்சியிலே மூழ்கினார்கள். வாசலுக்கு வெளியே வேடிக்கை பார்த்த அயலவர்கள் காதுகளைத் தீட்டிக் கொண்டார்கள், அடுத்தது யார், யாரைப் பேசப் போகிறார்களோ என்ற ஆவல் போலும். இரமணகிரியின் பேச்சால் அதிர்ந்து நின்றவர்களின் வாயிலே வார்த்தைகள் வற்றிப்போயின.*

*திடீரெனக் காவேரி வாசலுக்குப் போய், "இது உன் வீட்டு விடயம். வெளியாக்கள் வேடிக்கை பாக்கக்கூடாது. வீட்டுக்கு வீடு வாசல் படியிருக்குத்தானே..." என்று இழுத்தபடி வாசல் கதவிலே கையை வைக்க அனைவரும் சென்றுவிட்டனர். அப்போது நவநீதன் சத்தமாக, "காவேரி நீயும்தான் பொய் சொல்லியிருக்கிறாய். அதுக்காகவா கதவைச் சாத்துறாய்..." எனக் கேட்டான். அப்போது தேவிகா குறுக்கிட்டு, "என்ன நடந்தது இரண்டு பேருக்கும்? பத்திரமாக வந்து சேந்தாச்சு எண்டு எல்லோருக்கும் சந்தோசமாய் இருக்கு. பொய் சொன்னது எண்டு இரண்டு பேரும் குற்றம் சொல்றீங்களே. அது என்ன பொய் அது...."*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என நிதானமாகக் கேட்டாள். இரமணகிரியும் நவநீதனும் விழிபிதுங்கி மௌனித்து நின்றனர்.

சண்முகத்திற்கு உடலெல்லாம் பற்றி எரிவது போலிருந்தது. மகன், மருமகன் இருவர் மீதும் கடும் கோபமிருந்தது. இருவரும் ஒன்றையே சொல்கிறார்களே. மொட்டையாக "பொய் சொல்லுகிறாய்" என்றால் என்ன அர்த்தம்? அப்போதுதான் சண்முகம் தன் மௌனத்தைக் கலைத்தார். "அது சரி, அது என்ன பொய் அது? நீங்களே சொல்லுங்கோ..." என அவர் கேட்டார். இரமணகிரி, "கொழும்புக்குப் போய் வேலை தேடி அலைஞ்சு காசும் இழந்து தேவிகா, காவேரி இரண்டு பேரும் திரும்பி வந்த விசயம் எங்களுக்குச் சொல்லவில்லையே. இது கூட பொலிஸ் ஸ்ரேசனில் ஒரு கைதி சொல்லித்தான் எங்களுக்குத் தெரியவந்தது. எங்களுக்கு என்ன கோபம் வராதா? எங்களுக்கு ஏன் இதை மறைக்கவேணும்...?" எனக் கோபமாகக் கேட்டான். அப்போது ஒருவரையொருவர் முகத்தைப் பார்த்துவிட்டுத் தலையைச் சாய்த்தார்கள்.

மருதம்மா துணிச்சலுடன், "இரமணகிரி நீயுமா இப்பிடிக் கேக்கிறாய்? இது விசயமாய் நொந்து போயிருக்கிற நாம் அதை, ஏன் உன் தலைக்கும் கவலையைக் குடுக்க வேணும், எண்டு நானேதான் சொல்ல வேண்டாம் எண்டு சொன்னேன், மறைக்க எண்டு ஏதும் இல்லை...." எனக் கத்தினாள். இரமணகிரிக்கு என்ன பேசுவதென்று தோன்றவில்லை. "அது சரி, நான் இங்கேயே இருந்திருந்தால் கொழும்புக்குப் போகவிட்டிருப்பேனா? பாருங்க தனியாய் பொம்புளைப் புள்ளையள் கொழும் பிலை வேலை தேடி அலையுறது எவ்வளவு ஆபத்தானது தெரியுமா? பாசையும் வேறை தெரியாது" என அவன் விளக்கினான். சண்முகம் திடீரென, "அது சரிதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதையும் வேணுமெண்டு மறைக்கவில்லை. மேலதிகமாய் விவரம் வேணுமா? உங்க பெண்டாட்டிமாரைக் கேளுங்க" என்றபோது எல்லோருக்கும் சிரிப்பு வந்தது. அப்படியே ஒவ்வொருவராகக் கலைந்து சென்றார்கள்.

அன்றே சூட்டோடு சூடாக கலியாண வேலைகளையும் தொடர்ந்தார்கள். சிவராசா அண்ணை "பாத்தீங்களா, என்ன நடந்தது உங்களுக்கு, எண்டு அறிய வந்தேன். நான் கலியாணத்துக்கும் நிக்கிறேன். மனிசி அங்கே பாவம் தம்பலகாமத்திலை தனியாய் நிக்கிறா. மூண்டு பேரும் நாங்க மொத்தமாய் இங்கே நிக்கிறோம். கலியாணம் முடிஞ்ச அன்றே நான் போகிறேன்'' என்றார். "தம்பி சிவராசா நிக்கிறது எங்களுக்கு வலதுகையிருக்கிற மாதிரி'' என்று சண்முகம் சொன்னார்.

எளியமுறையில் கலியாணம் இனிதே இடம் பெற்றது. லயம் நிறைந்து வெளியேயும் போட்ட சிறு பந்தலிலும் உற்றார்கள் உறவினர்கள் நண்பர்கள் என்ற அளவிலே அமர்ந்திருந்தார்கள். லட்சுமியும் கணவரும் கல்யாண வேலைகளில் ஒத்தாசை புரிந்தபடி சிவராசா அண்ணையிடம் விவரமாகப் பேசினார்கள். "தம்பலகாமத்திலே வந்து குடியேறுங்கோ'' என சிவராசா அண்ணை கேட்டார். "அண்ணை இந்த மலைநாட்டில நடக்கிற விசயங்களால் வெறுத்துப்போச்சு. வேறை வழியில்லை, தம்பலகாமத்துக்கு போகவேண்டித்தான் இருக்கு'' என்றாள் லட்சுமியக்கா. அப்போது லட்சுமியின் கண்கள் கலங்கிவிட்டன.

நாட்கள் வேகமாகவே உருண்டோடிச் சென்றன. கலியாணம் முடிந்த களைப்புத் தீரமுன்பே தம்பலகாமத்துக்குத் தம்பதியினர் புறப்பட்டனர். இரமணகிரியும் தேவிகாவும் புறப்பட்டபோது முழு லயவட்டாரமே வந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியனுப்பி வைத்தது. காவேரியும் நவநீதனும் அட்டன் பேருந்து நிலையம் வரை வந்து வழியனுப்பினார்கள்.

பேருந்து விரைந்து ஓடிக் கொண்டிருந்தது. தேவிகாவின் மனம் எங்கோ ஓடி பழைய நினைவலைகளுள் மூழ்கியது. சித்தியின் கொடுமையால் வீட்டை விட்டு வெளியேறிய என்னை அரவணைச்ச வீடு காவேரியின் வீடு. அங்கே தங்கள் மகளாவே காவேரிக்குச் சமமாகக் குறையில்லாமல் வளர்த்திருக்கிறார்கள். ஒரு நாளாவது ஒரு சம்பவமாவது எனக்கு எதிராக இடம் பெற்றதில்லை. எவராவது சுடுவார்த்தையிலே பேசியதில்லை. என் மனம் நோகக் கூடாது என்ற நினைப்பிலேதான் நடத்தியிருக்கிறார்கள். அதுக்கு எல்லாம் காரணம் என் தோழி காவேரி மட்டுமல்ல, அவளின் வீட்டிலுள்ளவர்கள் அனைவருமே. அவர்களுள் ஒருவராவது என்னை வெறுக்கவோ, மறுக்கவோ ஆரம்பித்திருந்தால் என் இருப்பு கேள்விக்குறியாகவே இருந்திருக்கும். எங்கெல்லாம் வேலை தேடி அலைய வேணுமோ அங்கெல்லாம் அலைந்தாச்சு. என்னோடு காவேரியும் சேர்ந்து அலைஞ்சாள். அதுவும் போதாதென்று தங்கள் மகனுக்குக் கலியாணம் செய்து வைத்திருக்கிறார்கள். பொதுவாகவே தங்கள் மகனுக்குக் கலியாணம் என்றால் சீதனம் அது இது என்று கேட்டுப் பெண்ணின் பெற்றோரைப் பிழிந்து எடுத்துவிடுவார்கள். இங்கே என்ன வென்றால், “கையில் எவ்வளவு காசு வைத்திருக்கிறாய்?” என்று எவருமே இதுவரை எந்தச் சந்தர்ப்பத்திலும் கேட்டதில்லை.

ஏழைக்கு ஏழைதான் உதவி. ஒரு தொழிலாளியின் இதயத்துடிப்பு இன்னோர் தொழிலாளிக்குத்தான் முழுமை யாகக் கேட்கும். இந்த உண்மையான உண்மை கூட ஏழைத் தொழிலாளர்களுக்குத்தான் தெரியுமே தவிர, பணக்காரத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்ட முதலாளிகளுக்கோ அல்லது வால் பிடிப்பவர் களுக்கோ அல்ல. தொழிலாளர்களுக்கு உரிமை வாங்கித் தருவோம் என்று வாக்குப் பிச்சை கேட்டு இன்று பதவி, பவிசு சுகம் அனுபவிக்கும் அரசியல்வாதிகளுக்கும் ஏழைத் தொழிலாளியின் இதயத்துடிப்பு காதில் விழாது. ஆட்சிக்கு மாறி மாறி வரும் அரசுக்கு ஒரு கைக்கூலியாகவே பரம்பரை பரம்பரையாகவே இருப்பவர்களுக்கு ஏழைகளின் கண்ணீர் வெறும் தண்ணீராகவே தெரியும்.

ஏழையாகவே பிறந்து, ஏழையாகவே வாழ்ந்து, ஏழையாகவே மாண்டு மண்ணோடு மண்ணாகிப் பசளையாகிறோம். அந்தப் பசளையில் செழுமையாகி நிற்பதுதான் இந்தப் பணக்கார மரம். அந்தப் பணத்தை வைச்சுத்தான் இன்று இவர்களின் ஆட்டம் பாட்டம், கேளிக்கை கொண்டாட்டம் எல்லாமே. ஏழைத் தொழிலாளர்களைச் சுரண்டி வயிறு வளர்க்கும் இந்தக் கூட்டம் ஏழைகளின் கண்ணீர் தன் வேலையைக் காட்டும் போது இருந்த இடம் தெரியாமல் அழிந்து விடுவார்கள். இந்த உண்மையை எத்தனை தரம் இடித்துரைத்தாலும் இவர்களுக்கு உறைப்பதில்லை.

அதிகார போதையும் ஆணவமும் பணத்திமிரும் உள்ளவரை இவர்களுக்குப் பாவ புண்ணியமும் மனிதநேயமும் தெரிய வராது. தெரிய வரும் நேரம் இவர்களுக்கு அது சுடலை ஞானமாகவே இருக்கும். யாருக்கு என்ன பயன்? திடீரெனத் தேவிகா திடுக்குற்றபோது பேருந்து ஒரு பெரிய குலுக்கலோடு திருகோணமலை மத்திய பேருந்து நிலையத்தில் நின்றது. கண்ணைத் திறந்து பார்த்தபோதுதான் இரமணகிரியின் தோளிலே தலைசாய்த்துத் தூங்கியதை உணர்ந்தாள். நிமிர்ந்து கண்களைக் கசக்கியபோதுதான் தூங்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரமணகிரியும் விழித்துக்கொண்டான். பயணிகளோடு முண்டியடித்துக்கொண்டு இறங்கியபின் தம்பலகாமம் போகும் பேருந்துக்காகக் காத்து நின்றனர். தேவிகா, தன் மனதிலே நிழலாடிய உண்மைகளை மீண்டும் அசை போட்டாள். நினைக்க நினைக்க மனம் வாடியது. இதைக் கண்ட இரமணகிரி, "என்ன ஒரு மாதிரியாய் இருக்கு...?" என இழுத்தான். அதற்குத் தேவிகா, "ஒண்டுமில்லையே..." என்ற பொய்யைச் சொல்லிவிட்டு வார்த்தைகளை விழுங்கினாள்.

## 14

**கொ**ளுத்தும் வெயில் இரண்டொரு நாளாகக் கடுமையாகவிருந்தது. அறுவடை நேரம் ஒரு சில வயல்களிலே மட்டும் நெல்லை வெட்ட ஆரம்பித்து விட்டார்கள். மற்றைய வயற்காரர்களும் நல்ல காலநிலையை எதிர்பார்த்து இருந்தார்கள். மழையும் கடும் வெயிலும் இல்லாத நாட்கள் வந்தால் வெட்டிச் சூடு வைத்துவிடலாம் என்று விவசாயிகள் பேசிக் கொண்டார்கள்.

சிவராசா அண்ணை தம்பலகாமத்திற்கு வந்தபோதே நெற்கதிர்கள் முற்றி வருவதைக் கண்டார். பக்கத்திலேயிருந்த இரமணகிரியின் வயலும் பார்க்கக் கண் கொள்ளாத காட்சியாகவிருந்தது. அப்போது மனதுக்குள் சிவராசா அண்ணை "இந்தக் காட்சியை இரமணகிரியும் தேவிகாவும் பாத்தால் சந்தோசப்படுவார்கள்" என நினைத்துக் கொண்டார். நெல்லை வெட்டப் பொருத்தமான நாளையும் ஆட்கள் அணியையும் பார்த்து ஏற்பாடு செய்திருந்தார். இரமணகிரி - தேவிகா தம்பதிகள் வந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்தபோது அயலவர்கள் சூழ்ந்துகொண்டு நலம் விசாரித்தார்கள். அதுவும் போதாது என்று “இராணுவம் பிடிச்சாங்களே, என்ன கேட்டாங்கள், அடிச்சாங்களா, காசு ஏதாவது...” என்றும் கேட்காமல் கேட்டார்கள்.

இரமணகிரி பல்லைக் கடித்துக்கொண்டு பொறுமை யாகப் பதில் சொன்னான். சிலரின் கேள்விகள் தேவிகாவுக்குப் பிடிக்கவில்லைப் போலும். தன் கோபத்தை வெளிக்காட்டாமல், “என்ன உள்ளே போவோமா?” எனக் கேட்டாள். தேவிகாவின் உள்நோக்கத்தைப் புரிந்தவனாய், “வந்த பயணக் களைப்பு வேறை, நாம வீட்டுக்குள்ள போய்ப் பேசுவோமா?” என்று கேட்டான். கேள்விகள் கேட்டோர் திகைத்தனர். அதற்குள் இரமணகிரியும் தேவிகாவும் வீட்டினுள் புகுந்தனர். இவர்கள் இதே கேள்விகளை தொடர்ந்து கேட்கத்தான் செய்வார்கள் என மனதிலே இரமணகிரி நினைத்தான். இதை நிறுத்த ஒரே ஒரு வழிதான் உள்ளது. இதைப் பற்றித் தேவிகாவிடம் சொன்ன போது அவளும் “சரி” எனத் தலையாட்டினாள்.

கல்யாணம் முடிந்த கையோடு வரவேற்புபசாரம் ஒன்றுக்கு இரமணகிரி ஏற்பாடு செய்தான். வீட்டு வாசலில் சிவராசா அண்ணருடைய உதவியுடன் போட்ட சிறு பந்தலிலே வைபவம் எளிமையாக நடைபெற்றது. அயலவர்கள், நண்பர்கள் என அழைக்கப்பட்டார்கள். குறையேதுமில்லாமல் சிறப்பாக இடம்பெற்ற வைபவம் முடிந்த கையோடு அறுவடைக்கு ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. இரண்டு வயல்களிலும் விளைந்த நெல்லை வயலில் வைத்தே நியாயமான விலைக்கு வாங்க சிறு முதலாளிகள் விலை பேசினார்கள்.

“இதே நெல்லைக் கட்டிவைத்தால் கொஞ்ச நாளிலே விலை ஏறும். அப்போது விற்கலாம்தானே...” எனச் சில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயலவர்கள் ஆலோசனை சொன்னார்கள். இரமணகிரியும் தேவிகாவும் என்ன செய்வது, என்று பதில் சொல்ல முடியாது முடிவு எடுக்க முடியாமல் தவித்தார்கள். அப்போது சிவராசா அண்ணை, "இவ்வளவு நெல்லையும் பாதுகாப்பாகக் கட்டிவைக்க இடத்துக்கு எங்கே போவது? பேசாமல் நியாயமான விலையோடு வந்திருக்குது. காசும் உடனே தந்தால் நல்லதுதானே. நான் கூட இப்பிடித்தான் விற்கப் போறேன்..." எனச் சொன்னார்.

அதைக் கேட்ட இரமணகிரி "சரி, எவ்வளவு காசு மொத்தமாய்க் கிடைக்கும்" எனக் கேட்டுப் பேரம் பேசிய பொழுது எதிர்பார்த்த தொகை கிடைக்கும் எனத் தெரிந்து கொண்டான். அப்போது தேவிகா, "இதே நெல்லை எங்கேயாவது பாதுகாப்பாய் வைத்து விலையேறும் எண்டு காத்திருந்து ஏத்துக்கூலி, இறக்கக் கூலி, சேதம்" எண்டெல்லாம் கழிவு போக என்ன மிஞ்சப்போகுது. அதைவிட நியாயமான விலையில் காசும் உடனேயே கிடைத்தால் அது லாபம்தானே" என அபிப்பிராயம் சொன்னாள். மூன்று பேரினதும் அபிப்பிராயமும் அங்கேயே விற்றுவிடுவதுதான் நல்லது என்றிருந்தது. அதன்படி விற்றுவந்த காசைப் பத்திரமாகத் தேவிகா வைத்தாள். மறுநாள் சிவராசா அண்ணரும் இரமணகிரியும் திருகோணமலையில் உள்ள வங்கியில் வைப்பிலிட்டார்கள்.

ஆற அமர உட்கார்ந்து கணக்குப் பார்த்தபோது, "நல்ல லாபம், பரவாயில்லாத விளைச்சல்" எனச் சிவராசா அண்ணை சொன்னார். கலியாணம் என்று சில நாட்கள் போக, தம்பலகாமத்திலே அறுவடை எனச் சில நாட்கள் போனது. "கோயிலுக்குப் போய் வருவோமா?" என இரமணகிரி தேவிகாவைக் கேட்டான். "சரி, அதுக்கென்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய் வருவோம். நேர்த்திக்கடன் இருக்கு. அதைத் தீர்க்கப் போக இருந்தேன்" என்று தேவிகா சொன்னாள்.

சிவராசா அண்ணை குடும்பமும் சேர்ந்து இரமணகிரி குடும்பத்துடன் திருகோணமலைக்குப் போய்க் கோணேஸ்வரத்தில் நேர்த்திக்கடனை முடித்துக்கொண்டு ஆதிகோணேஸ்வரம் சென்று வழிபட்டார்கள். வரும் வழியில் சமயப்பிட்டி முத்துமாரியம்மன் கோவில், ஆலையடி பத்தினியம்மன் கோவில் என வழிபட்டு வீடு திரும்பினார்கள். வாடகை வண்டியில் சென்று கோவில் குளம் என வழிபட்டு வந்தது தேவிகாவுக்கு மனதுக்குச் சாந்தியாகவிருந்தது. திருக்கோணேஸ்வரத்துக்கு எப்போதாவது போவதுண்டு, ஆனால் அருகிலுள்ள மற்றைய கோவில்களுக்கு அடிக்கடி தேவிகா போயிருக்கிறாள். இன்று எங்கும் சென்று வழிபட்டதிலே வித்தியாசம் அவளின் மனதிலே இல்லாமலில்லை.

அந்த மன அமைதியிலே தேவிகாவின் மனதில் ஒரு எண்ணம் உதயமாகியது. காவேரியும் நவநீதனும் எந்த நேரமும் வரவாய்ப்பு உண்டு. உடனேயே அவர்கள் வயல் வேலைகளை ஆரம்பித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அதற்குள் இரமணகிரியின் வயலையும் வீட்டையும் விட்டு எனது வீட்டில் குடியேறிவிடவேண்டும் என நினைத்தாள். இதை நாசுக்காகக் கணவரிடம் சொன்னபோது மௌனமே பதிலாகக் கிடைத்தது.

இரண்டொரு நாட்கள் இருவரும் இதுபற்றி எதுவுமே பேசவில்லை. இரமணகிரியே முதலில் பேச்சை எடுத்தான். "தேவிகா, வீட்டுக்கு ஒரு கடிதம் போடு, காவேரியின் குடும்பம் எப்போது வருகை எண்டு கேட்டுப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்தடுத்த மாதம் வயல்வேலையள் ஆரம்பிக்கவேணும் எண்டு ஞாபகப்படுத்திவிடு....'' எனக் கூறினான். இப்போதாவது தன் ஆதங்கத்திற்கு ஆதரவாகக் கணவர் கேட்டதே போதும் என்ற திருப்தியிலே தேவிகா ''ம்ம்'' எனச் சொன்னாள்.

சில நாட்கள் நகரக் கடிதம் ஒன்று வந்தது. அதை உடைத்து வாசித்த தேவிகா "போட்ட கடிதத்திற்குப் பதில் வந்தது போலிருக்குது...'' என்று சொன்னாள். இதைக் கேட்ட இரமணகிரி "கடிதம் என்ன சொல்லுதாம்...?" என இழுத்தான். "கிருஷ்ணி எழுதியிருக்கிறாள். இந்தக் கிழமை காவேரி குடும்பம் வரப்போகினம்" எனத் தேவிகா படித்து முடித்தாள். "லட்சுமியக்கா வந்தால் வயல் எடுத்துச் செய்யப்போகினமா அல்லது கோழிப் பண்ணைதான் வைக்கப்போகினமா எண்டு யோசிக்க வேண்டியிருக்குது..." என்றான். இதைக் கேட்டதுமே, "அதுக்கு நாங்கள் ஏன் நம்ம மண்டையைப் போட்டுக் குழப்பவேணும்?'' எனத் தேவிகா எரிச்சலோடு சொன்னாள்.

மனைவி இப்படிச் சொன்னது இரமணகிரிக்குச் சிரிப்பு வந்தது. "இந்தச் சின்ன விசயம் கூட விளங்காமல் இருக்கிறியே...'' என்று கேலி செய்தான். தேவிகாவுக்கு எதுவும் புரியவில்லை. "என்ன அது?" என வினாவினாள். "லட்சுமியக்கா குடும்பம் நம்மளை நம்பி வருகுது. தப்பித் தவறி கோழிப்பண்ணை போல வியாபாரம் செய்ய முடியாமல் போனால் நம்மைத்தான் திட்டுவா லட்சுமியக்கா தெரியுமா? அதுதான்...'' என இரமணகிரி தன் ஆதங்கத்தைச் சொன்னான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனே தேவிகா நிதானமாக “இங்கே வந்து குடியேறுகிறவர்கள் தங்களுக்குத் தெரிஞ்ச தொழிலைத் தான் செய்யவேணும் எண்டெல்லாம் அடம்பிடித்துக் காலத்தை வீணாக்க முடியுமோ…” எனக் கேட்டாள். அதைப் புரிந்துகொண்ட இரமணகிரி, “அப்பிடியே இருந்துவிட முடியுமா? வயல் ஏதாவது குத்தகைக்கு எடுத்துச் செய்ய வேண்டியதுதான். அதுக்குத் தயாரானவர்களுக்குத்தான் அது பொருந்தும்” எனச் சொன்னான். தேவிகா, ‘தோட்டத்திலே கூலி வேலை செய்த லட்சுமியக்கா எப்பிடிச் சம்பந்தமேயில்லாத கோழிப்பண்ணை வைச்சு நல்லாச் சம்பாதிச்சாவோ, அது போல தொழிலையும் மாத்த வேண்டியதுதான். வேறை வழி?” எனச் சொன்னாள்.

அப்போது, “கிறீச்” என்ற சத்தத்துடன் பார வண்டியொன்று இரமணகிரி வீட்டு வாசலில் வயலோரத்துடன் நின்றது. முதலிலே நவநீதன் வண்டியிலிருந்து “தொப்” என்ற சத்தத்துடன் குதித்தான். அதனைத் தொடர்ந்து காவேரி இறங்கினாள். இதைக் கண்ட இரமணகிரியும் தேவிகாவும் தெருவுக்கு வந்து பொருட்களை இறக்கிக் கொண்டிருந்த நவநீதனுக்கும் பாரவண்டிச் சாரதிக்கும் உதவி புரிந்தனர். தேவிகா, காவேரியைப் பார்த்து, “என்னடி இது இவ்வளவு சாமான்கள் கொண்டு வந்திருக்கிறாய்? முழு மலைநாட்டுச் சனங்களும் சேர்ந்து கொண்டுவரவேண்டிய சாமான்களை நீ ஒரே ஆளே கொண்டு வந்திட்டாய் போல இருக்கு” என்றாள். “போடி போடி என்ன நக்கலா. ஒருநாள் நாம எல்லோருமே இந்த மண்ணில வந்து குடியேற வேண்டியவர்தான். நேற்று நீ வந்தாய், இன்று நான், நாளை எத்தனை பேரோ? கடவுளுக்குத்தாண்டி வெளிச்சம்…” என்று சொல்லிப் பெருமூச்செறிந்தாள் காவேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனே தேவிகா, "அதுக்கு இல்லை, நாம என்ன பெரிய மாளிகையிலா இருக்கிறோம். மலைநாட்டிலை லயங்களிலே, இங்கே குடிசை. கொண்டு வந்த சாமானுகளைப் பரவ இடம் இராதே" என்று சொல்லி விட்டுச் சிரித்தாள். காவேரி, "ஒரு விசயம் தெரியுமாடி, அப்பாவும் அம்மாவும் மலைநாட்டை விட்டுப் போக மாட்டோம். இங்கேயே பிறந்தோம் இங்கேயே சாவோம். யார் எங்கே போனாலும் போகட்டும், நாம வரவே முடியாது எண்டு மகனிடம் சொல்லு எண்டு சொன்னார்கள்" என்று சொன்னாள். இதைக் கேட்ட தேவிகா சிரித்துவிட்டு, "வரவேண்டிய நேரம் வர, தங்களையறியாமல் வந்து சேருவார்கள். இதையும் பாக்கத்தானே போறோம்" என்று சொன்னாள்.

பாரமான தளபாடங்களைப் பாரவண்டியில் இரமணகிரி ஏற்றினான். வண்டியில் தானும் நவநீதனுடன் ஏறித் தேவிகாவின் வயலுக்குச் சென்றார்கள். சொல்லிவைத்தது போல அங்கேயுள்ள அயலவர்கள் பலர் வீட்டடியில் காத்து நின்றார்கள். "வாங்கோ வாங்கோ" என்று வாயார வரவேற்ற அவர்கள் பொருட்களை இறக்க உதவியும் செய்தார்கள். "என்னண்ணே இது, கொஞ்சச் சாமான்கள் தானே, நாமளே போதாதா...?" என இரமணகிரி கேட்டான். அப்போது பக்கத்து வயற்கார முதியவர் ஒருவர், "தம்பி நாங்களெல்லாம் சகோதரங்கள் போல, உதவி எண்டொரு வார்த்தை சொல்லு பாப்பம் ஓடிவருவோம்" என்று தன் அன்பை வெளிப்படுத்தினார். நவநீதன் இதைக் கேட்டதும், "அண்ணே இப்பிடியான உதவிகள் ஆபத்தான வேளையில் தேவை. இதுமாதிரி வார்த்தையைச் சொல்ல எல்லாராலும் முடியாது" என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதியவர் புன்னகைத்தார். நவநீதன் “ஐயா உண்மையைச் சொன்னால், இந்த மண்ணில கால் வைக்க, சொந்த மண்ணில நிண்ட மாதிரியிருக்குது பாருங்கோ...” என்று கூறினான். இதைக் கேட்ட இளைஞன் ஒருவன், “இந்த உண்மையை எல்லோரும் உணரவேணும். இதுவே நல்ல ஆரம்பம்தான்” என்று சொல்ல, முதியவர் மீண்டும் புன்னகைத்தார். இந்த உரையாடல்களைக் கேட்டுக் கொண்டிருந்த இரமணகிரிக்கு மனம் குளிர்ந்தது. அதை அவனின் வதனம் காட்டி நின்றது.

## 15

**கா**லைப்பனி மலைமுகடுகளை அள்ளியணைத்து முத்தமிட்டது போலப் பார்க்கும் இடமெல்லாம் வெண்புகை போலப் பரவியிருந்தது. அட்டன் பெரிய ஆஸ்பத்திரிக்குப் போகவேணும் என்று அதிகாலை ஆறுமணியிலிருந்து பேருந்துக்காகக் காத்துக் கிடந்தார் சண்முகம். நெடுநேரமாகியும் அட்டன் செல்லும் பேருந்தைக் காணவில்லை. கூட நின்ற மருதம்மாவும் கிருஷ்ணியும் இடையிடையே “பஸ்காரன் எப்ப வருவானாம்...?” என்று கேள்விகளால் கேட்டுத் துளைத்தெடுத்தார்கள். அதனால் தன் மனதில் எழுந்த கேள்விகளுக்கே பதில் கிடைக்காத சண்முகத்திற்கு எரிச்சல் மேலும் மேலும் கூடியது. “அவன் வாற நேரம் அவனுக்குத்தான் தெரியும், வரேல்லையெண்டால் திரும்பி வீட்டைதான் போகவேணும்” என்று எரிச்சலோடு சொன்னார்.

கிருஷ்ணி சட்டென்று “இந்த பஸ் மட்டுமில்லை, அட்டனிலிருந்து ஊருக்கு வாற பஸ்சும் ஓடவில்லையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன நடந்தது'' எனக் கூறிவிட்டுச் சிரித்தாள். "நீ சிரிக்கிறாய் கிருஷ்ணி, இந்த நேரம் பெரியாசுபத்திரியிலை லைனில் நிண்டு நம்பர் எடுத்திருக்கலாம், இன்னிக்கு எண்டு பாத்து சீ பஸ்காரன்...'' என மருதம்மா அலுத்துக் கொண்டாள்.

அப்போது எதிர்ப்புறமாக அட்டன் பக்கத்திலிருந்து வந்த மகிழுந்து இவர்களின் அருகே நின்றது. அதிலிருந்த ஒருவர் யன்னலூடாகத் தலையை நீட்டி, "அண்ணே பஸ்ஸுக்கா நிக்கிறீங்க...'' எனக் கேட்டார். இவர்களுக்கு அவரின் கேள்வி தெளிவாகக் கேட்கவில்லை. வந்தவர் மீண்டும் தலையை நீட்டிக் கேட்டார். அப்போதுதான் கிருஷ்ணி, "ம்ம்ம்'' எனத் தலையை அசைத்துவிட்டு அவரை உற்றுப் பார்த்தாள். வந்தவர், "நானும் அட்டன் ரவுண் பக்கத்திலையிருந்துதான் வாறேன். அங்கே ஆமி சாதாரண உடுப்பில வந்து ரவுணில நிண்ட சனத்தை நூற்றுக்கணக்கில அள்ளி ஏத்திக்கொண்டு போயிருக்குது. குழந்தை, பொம்பிளை, வயசானவங்க எண்ட வித்தியாசமில்லாமல் பிடிச்சிருக்கிறான். சந்தேகமாம் சந்தேகம்...'' எனக் கூறிவிட்டுப் பெருமூச்சொன்றையும் விட்டார். "அப்ப அட்டன் ரவுணில சனங்கள்...'' எனச் சண்முகம் கேட்க முன்பே, வந்தவர், "... யாருப்பா நிப்பான் அங்கே, அதுதான் எல்லாரும் ஓடிட்டாங்கள்... நானும் ஓடிவந்துட்டேன், பஸ்சும் ஓடவேயில்லை'' எனக் கூறி முகத்தைச் சுருக்கினார். சண்முகம் "நீங்கள் சொன்னது நல்லதாப் போச்சு, நாமளும் திரும்பி வீட்டை போகிறோம்'' எனக் கூறிவிட்டு மனைவியையும் மகளையும் பார்த்தார். அதற்குள் முந்திக் கொண்டு அவர்கள் இருவரும் வீதியிலே காலடி வைத்து விட்டனர். சண்முகம் அவர்களைப் பின்தொடர்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் லயத்துக்கு வரவும் லட்சுமியக்கா வரவும் சரியாகவிருந்தது. மருதம்மா விவரமாகச் சொன்னாள். லட்சுமி "இதே போலத்தான் பக்கத்து லயன்காரரும் குடும்பத்தோடை அட்டன் பெரியாஸ்பத்திரியல இருந்து வைத்தியம் செய்திருக்கினம். முழுக் குடும்பத்தையும் அள்ளி ஏத்தியிருக்கிறான். இதை யாரிட்டை போய்ச் சொல்ல முடியும்..." எனப் புலம்பினாள். "எம்.பி.யிடம் தான் முறையிடலாம்... ஆனால் அவங்களோ தங்களுக்கும் பாதுகாப்பு இல்லை எண்டு அரசாங்கத்திலையிருந்து கொண்டே அழுகிறாங்கள். எங்கள் குரல் அவங்க காதில விழுமா...?" என்றார் சண்முகம் சற்றுச் சினத்தோடு.

அப்போது அங்கே வந்த கிருஷ்ணி "அப்பா பேசாமல் எல்லாருமே தம்பலகாமம் பக்கம் போவோமா? அங்கேயே ஒரு வயலோ என்னவோ எடுத்துப் பிழைச்சுக் கொள்ளமாட்டோமா? இனி, இதுகளுக்குப் பிறகு என்ன யோசினை?" என 'படபடபட' எனப் பேசிவிட்டுத் தந்தையின் முகத்தைப் பார்த்தாள். சண்முகம் சோக முகத்தோடு தலையைக் கவிழ்த்தார். கிருஷ்ணி அவரின் முகத்தை உற்றுப் பார்த்தாள். மகள் கேட்டதற்குப் பதில் சொல்ல முடியாதவராய்த் தவிப்பதை அவரின் முகம் காட்டியது. இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த மருதம்மாவும் கிட்டவந்து, "இங்க பாருங்க, கிருஷ்ணி வளர்ந்து வர்ர ஒரு இளம் பெண். அவளின்ர மனதில இப்பிடி ஒரு எண்ணம் வந்தது எண்டால் அது அவளை எவ்வளவுக்குப் பாதிருச்சிருக்குத் தெரியுமா? நாமதான் சந்ததி சந்ததியாகப் பிறந்த மலைநாடும் லயமும்தான் உலகமும் எல்லாமுமே எண்டு, நினைச்சு ஏதோ கிடைச்ச உரிமையை வைச்சுக் காலத்தை ஓட்டினோம். ஆனால் இளம் சந்ததி அப்பிடியா இருக்கப்போவுதுகள்? கையில காசில்லை, இருக்கிற உரிமைகளையே அனுபவிக்கச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழ்நிலை சரியில்லை. பேசாம நாமளும் அங்கேயே...'' என்று சொல்லிவிட்டு விக்கி விக்கி அழுதாள்.

இதைப் பார்த்த லட்சுமிக்குப் பொறுக்க முடியவில்லை. மருதம்மாவைத் தேற்றினாள். அப்போது அவளின் கண்கள் பனித்தன. நாத்தழுதழுக்க லட்சுமி பேசினாள், "அவள் கிருஷ்ணியின் கேள்வியை மலையகத் தமிழர்கள் எல்லாரும் சிந்தித்தால் பதில் சுலபமாகிவிடும். அதாவது தமிழர்களின் தாயகம் வடக்கும் கிழக்குமே என்பதை உலகிற்குச் சொல்லவேண்டியுள்ளது.''

"மலையகத் தமிழரைத் துரத்தும்போது கூட யாழ்ப்பாணம் போ, திருமலை போ, வவுனியா போ எண்டுதானே கலைக்கிறான். அவனுக்குத் தெரியுது நமது தாயகம் எது என்று. ஆனால் நம்ம ஆளுங்க எத்தனை பேருக்கு இந்த உண்மை தெரியும்?'' என சண்முகம் சொல்லி விட்டுக் கண்கலங்கினார். அப்போது மருதம்மாவும் கிருஷ்ணியும் அவரின் கையைப் பிடித்து, "தம்பல காமத்துக்குப் போய் இருப்போம்'' எனக் கெஞ்சினார்கள்.

அப்போது சண்முகம், "சரி, உங்கள் விருப்பமே எனது விருப்பம். நாமளும் அங்கே தமிழரின் தாயகத்திலே போய்க் குடியேறுவோம். வேறு வழியில்லை. மலையக மண்ணில உரிமைகள் இழந்து பாதுகாப்பில்லாமல் கூலியாய் இன்னும் எவ்வளவு சந்ததி இப்பிடிக் காலத்தை ஓட்டும்? போதுமடா சாமி...'' என்று சொன்னார்.

உடனே லட்சுமி, "சண்முகம் அண்ணை கூடிய சீக்கிரம் நாங்க தம்பலகாமத்துக்குப் போகிறோம். நீங்களும் வாங்கோ'' என்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“பிறந்த மண்ணைவிட்டு வர மனமில்லாமல்தான் இந்த முடிவுக்கு வாறம். அங்கே போய் இந்த மண்ணும் எங்களின் சொந்த மண்தான் என்ற துணிவோடும் உரிமையோடும் காலத்தை ஓட்டுவோம்” என மருதம்மாள் கூற, சண்முகமும் கிருஷ்ணியும் தலையசைத்துச் சம்மதித்தார்கள். மூவரின் முகத்திலும் புதியதோர் மலர்ச்சியும் மகிழ்ச்சியும் ஒன்றாகக் காணப்பட்டன.

முற்றும்

யாவும் கற்பனையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org